THE SUDAROLI

# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

விலை : ரூபா 30   பக்கங்கள் 28   வார மலர்

ஜூன் 10 - ஜூன் 16 , 2012

June 10 - June 16, 2012



யார்...?
வந்தேறு குடிகள்



## முடிக்கப்பட்ட ஆயுதப் போரும் தொடங்கப்படும் இன்னொரு போரும்



மனித
விலங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள்

# உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்



### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **திட்டத்தின் இயல்பு** - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. **வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை** - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. **உயர் நுழைவுக் கட்டணம்** - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. **இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்** - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. **நிதி வருமானங்கள்** - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. **மீண்டும் வாங்கும் கொள்கை** - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. **பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல்** - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம். இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

8. **திட்டத்தைப் பற்றிய தகவல்கள்** - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. **நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள்** - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. **இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல்** - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. **பயிற்சிகளும் விற்பனை உதவிகளும்** - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. **திட்டத்தின் எதிர்காலம்** - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. **செயற்பாட்டுப் பிரதேசங்கள்** - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு
தொலைபேசி: [illegible] 20, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிக்கப்பட்ட ஆயுதப் போரும் தொடங்கப்படும் இன்னொரு போரும்

இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் மோசே தயான் இஸ்ரேலின் வரலாற்றில் ஒரு பெரும் வீரநாயகனாகவே போற்றப்படுகிறார். இவர் இஸ்ரேலின் உருவாக்கத்தில் ஒரு போராளித் தலைவனாகப் பெரும் பங்கு வகித்தவர். 1975ம் ஆண்டு மத்திய கிழக்கு நாடுகளின் மீது இஸ்ரேல் ஒரு பெரும் ஆக்கிரமிப்புப் போரை மேற்கொண்ட போது இஸ்ரேலின் தளபதியாக செயற்பட்டு யூதப் படைகளை வழி நடத்தியவர். இப்படையெடுப்பின் போது இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் பெரும் பகுதி கைப்பற்றப்பட்டதுடன் எகிப்தின் சினாய், சிரியாவின் கோலான்குற்று ஜோர்தானின் மேற்குக் கரை என்பனவும் ஆக்கிரமிக்கப்பட்டன.

அதாவது மோசே தயான் உலகின் சிறந்த இராணுவ வல்லுநர்களில் ஒருவராகக் கருதப்படுகின்றார். எனினும் கூட ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றி அதைத் தக்கவைப்பதில் படை நடவடிக்கைகளை விட குடியேற்றத்திட்டங்களே வலிமை வாய்ந்தவை எனத் திட்டவட்டமாகவே தெரிவித்துள்ளார். இன்று இஸ்ரேல் பலஸ்தீன சமாதானப் பேச்சுகள் இடம்பெறும் வேளையிலும் கூட சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது பாலஸ்தீனத்தில் யூதர் குடியேற்றங்களை இஸ்ரேல் நிறுவிவருவதை நாமறிவோம்.

ஒரு இடத்தைக் கைப்பற்றி அங்கு படைமுகாம்களை நிறுவினால் படையினருக்குரிய சகல தேவைகளையும் அரசே நிறைவேற்ற வேண்டும், படையினர் கூட நீண்ட காலத்திற்கு அந்நிய மண்ணில் நிலை கொண்டிருக்கும் போது சலிப்படையும் நிலையும் ஏற்பட்டு விடும். ஆனால், குடியேற்றங்களை நிறுவும் போது ஆரம்ப உதவிகளைச் செய்தாலே போதுமானது. பின்பு அவர்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே பார்த்துக் கொள்வார்கள். அது மட்டுமின்றிப் பிரதேசத்தைப் பாதுகாப்பதையும் இதய சுத்தியுடன் மேற்கொள்வர்.

அதுவே மோசே தயானின் கருத்து. இஸ்ரேலியர்கள் இதை நிறைவேற்றுவதில் வெற்றியும் கண்டிருக்கின்றனர். இதை நன்றாகவே புரிந்து வைத்துக் கொண்டவர் இலங்கையின் முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா. இவர் வெள்ளையர் ஆட்சியின்போது விவசாய அமைச்சராயிருந்த நேரத்திலேயே வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம், பதவியா போன்ற குடியேற்றங்களை நிறுவினார். இலங்கை சுதந்திரம் பெற்றபின்பு முதல் பிரதமராகப் பதவியேற்ற இவர் கல்லோயா, கந்தளாய், அம்பாறை என கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு அப்பிரதேசங்களைச் சிங்கள மயப்படுத்தினார்.

அவருக்குப்பின்பு ஆட்சிக்கு வந்தவர்களும் கூட சட்டபூர்வமாகவும் சட்டபூர்வமற்ற முறையிலும் வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதில் தீவிர அக்கறை காட்டி வந்தனர்.

எனினும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்து முனைப்படையத் தொடங்கிய பின்பு இக் குடியேற்றங்களை மேற்கொள்ளவோ, விரிவுபடுத்தவோ முடியாமற் போய் விட்டது. மணலாற்றில் சட்டவிரோதக் குடியேறிகள் விரட்டப்பட்ட சம்பவம் கூட அப்போது இடம் பெற்றது.

ஆனால், விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு தமிழ்ப்பகுதிகளிலான குடியேற்றங்கள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு இசைவாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, எல்லாவல மேதானந்த தேரர் உட்பட பல இனவாதிகள் வடக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம் அல்ல எனக் கூறி வருகின்றனர்.

அவ்வகையில் முல்லை மாவட்டம் மூன்று முனைகளில் சிங்களக் குடியேறிகள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. ஒரு புறத்தில் திருமுறிகண்டி தொடக்கம் கொக்காவில் வரையும் மறுபுறத்தில் கொக்குத்தொடுவாயிலும் இன்னொருபுறம் நெடுங்கேணியை அண்டிய மணலாற்றுப் பிரதேசத்திலும் குடியேற்றங்கள் நிறுவப்படுவதும், சிங்களவர்கள் படையினரின் உதவியுடன் தாங்களாகவே வந்து குடியேறுவதும் இடம்பெற்று வருகின்றன.

திருமுறிகண்டி நீண்ட காலமாகவே தமிழ் மக்கள் குடியிருந்து வரும் பகுதி என்பது மட்டுமின்றி இங்குள்ள பிள்ளையார் ஆலயம் பழம் பெருமை பெற்றதாகும். ஏ-9 வீதியில் செல்லும் எந்த ஒரு வாகனமும் இங்கு நிறுத்தப்பட்டு, பயணிகள் வணங்கிச் செல்வது நீண்ட பல வருடங்களாகப் பின்பற்றப்பட்டு வரும் ஒரு வழமையாகும். கடுகதி தவிர்ந்த ஏனைய புகைவண்டிகள் கூட முன்பு இங்கு நிறுத்தியே பின் புறப்படும் வழமை உண்டு.

இங்கு 120 குடும்பங்கள் குடியிருந்து வந்தன. போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் இவர்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் நிவாரண முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் பெரும் சிரமங்களின் மத்தியில் வசித்து வருகின்றனர்.

ஆனால், முறிகண்டி தொடக்கம் கொக்கிளாய் வரை போர் வீட்டுத்திட்டம் என்ற பேரில் இம்மக்களின் காணிகள் உட்பட 4,000 ஏக்கர் காணியில் ஒரு குடியேற்றம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதில் ஏறக்குறைய

முல்லை மாவட்டம் மூன்று முனைகளில் சிங்களக் குடியேறிகள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்டு வருகிறது. ஒரு புறத்தில் திருமுறிகண்டி தொடக்கம் கொக்காவில் வரையும் மறுபுறத்தில் கொக்குத்தொடுவாயிலும் இன்னொருபுறம் நெடுங்கேணியை அண்டிய மணலாற்றுப் பிரதேசத்திலும் குடியேற்றங்கள் நிறுவப்படுவதும், சிங்களவர்கள் படையினரின் உதவியுடன் தாங்களாகவே வந்து குடியேறுவதும் இடம்பெற்று வருகின்றன.



ஊனமுற்ற படையினரின் 2,000 குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளதாக கூறப்படுகிறது. வீடுகள் குடிநீர் வசதி, மின்சாரம் என்பன மிகவும் தரமான முறையில் அமைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்துக்கு இரணைமடுவிலிருந்து குடிநீர் வழங்கவென மாவலி நீரை இரணைமடுவுக்குக் கொண்டு வருவது என்ற திட்டம் அடிப்படையில் இந்த இராணுவக் குடியிருப்புக்கு பயிர் செய்ய நீர் வழங்குவதையே நோக்கமாகக் கொண்டது என சில தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் இப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி சபையின் கீழ் கொண்டு வந்து கனகராயன் குளத்தில் இன்னுமொரு சிங்களக் குடியேற்றம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கூட சில செய்திகள் வெளிவந்துள்ளன.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தின் உவர் நீரேரிகளை நன்னீராக்கும் திட்டத்தைக் கைவிட்டு இரணைமடுவிலிருந்து பெரும் தொகை செலவில் அங்கு குடிநீர் கொண்டு செல்லும் திட்டம் வரையப்பட்டது ஏன் என்ற கேள்விக்கு இப்போ மெல்ல மெல்ல விடை கிடைக்கிறது. எதிர்காலத்தில் இலங்கையிலும் இந்தியாவின் காவிரி நீர்ப்பிரச்சினை போன்ற ஒரு நெருக்கடி தோன்ற இடமுண்டு.

எப்படியிருப்பினும் சகல வசதிகளையும் கொண்ட 2000 சிங்களக் குடும்பங்களைக் கொண்ட நாலாயிரம் ஏக்கர் நிலம் முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குக் கரையில் ஆக்கிரமிக்கப்படுகிறது என்பது தான் இங்கு முக்கிய விஷயம்.

கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், தென்னமரவாடி, குறிகாட்டுக்கேணி என்பன பரம்பரை பரம்பரையாகத் தமிழ் மக்கள் வாழும் பகுதி. இக்கிராமங்கள் குளக்கோட்ட மன்னன் காலத்திலேயே தென்னை மரவாடி என்ற தனி வன்னிமையாக விளங்கின. விவசாயமே இவர்களின் பிரதான தொழில். தங்கள் சொந்தத் தேவைகளுக்கு மட்டும் கொக்கிளாய் ஏரியில் மீன்பிடிப்பதுண்டு. பருவ காலத்தில் முல்லைத்தீவு, செம்மலை மீனவர்கள் வந்து கரைவலைத் தொழில் செய்வதுண்டு.

1900 ஆம் ஆண்டுக்கு அடுத்த காலப்பகுதியில் சிங்களச் சம்மாட்டி ஒருவர் வந்து கரைவலைத் தொழிலில் ஈடுபட்டார். அவரையடுத்து வேறு சில சம்மாட்டிகளும் தங்கள் தொழிலை இங்கு வந்து ஆரம்பித்தனர். இச்சம்மாட்டிகளுடன் ஐந்து கூலித் தொழிலாளர்களில் சிலர் முகத்துவாரப் பகுதியில் நிரந்தரமாகவே தங்கி விட்டனர். பின்பு பிறேமதாசா வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது மீனவக் குடியேற்றம் என்ற பேரில் அவர்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டன. இவ்வாறு 38 குடும்பங்கள் நிரந்தரமாகக் குடியிருந்தன.

தற்சமயம் மீள்குடியேற்றம் என்ற பேரில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் அங்கு குடியேறி விட்டன. மருத்துவமனைக்குரிய நிலம், தமிழர் ஒருவரின் காணி என்பன ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு புத்த விகாரை அமைக்கப்படுகிறது.

பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் எந்த வசதியுமே வழங்கப்படாத நிலையில் அங்கு நிரந்தரமாக வசிக்க முடியாத நிலையில் உள்ளனர். இவர்கள் 1980ல் ஒரு வர்த்தமாணி அறிவித்தல் மூலம் வெளியேற்றப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொக்கிளாய், நெட்டாங்கேணி ஆகிய இடங்களில் தொடர்ந்து சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறே, போரின் முன்பு நாயாற்றில் பருவகாலத்தில் சிங்களவர் [illegible] தொழில் செய்து வந்தனர். இவர்கள் பருவ காலம் முடிந்ததும் திரும்பிச் சென்று விடுவதுண்டு. தற்சமயம் அவர்களுக்குப் படையினரின் உதவியுடன் வீடுகள் அமைக்கப்பட்டு நிரந்தரமாகக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தண்டுவான், பெரியகுளம், ஒதியமலை, ஊஞ்சல்கட்டு, மருதோடை, பட்டிக்குடியிருப்பு தனிக்கல்லு உள்ளிட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட கிராமங்களில் மணலாற்றுப் பகுதியில் தமிழ் மக்கள் வசித்து வந்தனர். அது மட்டுமின்றி தனிக்கல்லிலிருந்து ஒவ்வொன்றும் 1000 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தமிழ் தனவந்தர்களுக்குச் சொந்தமான பண்ணைகள் இருந்தன. 1977ல் உப உணவுப் பொருட்களுக்கு ஏற்பட்ட விலை வீழ்ச்சி காரணமாகப் பல பண்ணைகள் கைவிடப்பட்டன. 1977 கலவரத்தில் ஓடி வந்த மலையக மக்கள் அங்கு குடியேறினர். பின் அவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டு திறந்த வெளிச் சிறை என்ற பேரில் சிங்களவர் குடியேற்றப்பட்டனர். 1984ல் முழு மணலாற்று மக்களும் வெளியேற்றப்பட்டனர்.

இன்று தமிழ் முதலாளிகளின் பண்ணைகள் யாவும் சிங்களக் குடியேற்றங்களால் நிரப்பப்பட்டு விட்டன. சிங்களப் பெயர்களுடன் பல ஊர்கள் தோன்றி விட்டன. பரம்பரையாக வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் 6,000 ஏக்கர் வயல் நிலங்கள் சிங்களவரால் அபகரிக்கப்பட்டு பயிர் செய்யப்படுகின்றது.

எல்லாவற்றிலும் மேலாக மணலாறு என ஒரு பிரதேசச் செயலர் பிரிவு அமைக்கப்பட்டு மேலும் சில சிங்களக் கிராமங்கள் சேர்க்கப்பட்டு முல்லை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டு விட்டது.

இறுதிப் போர் இடம்பெற்ற மாத்தளன் பொக்கனை முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகள் இன்னும் மீள்குடியேற மக்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆனால் அக் கடல் பகுதியில் சிங்கள மீனவர்கள் வந்து சுதந்திரமாக மீன்பிடித்துச் செல்கின்றனர்.

ஒட்டுமொத்தத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களின் விகிதாசாரம் குறைக்கப்பட்டு சிங்கள மக்களின் விகிதாசாரம் அதிகரிக்கப்படும் சதித் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

அது மட்டுமின்றி, மன்னார் மாவட்டத்திலும் இதே போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மடுறோட்டில் ஒரு சில சிங்களக் குடும்பங்களே வசித்து வந்தன. போரின் பின் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் குடியேறிவிட்டன. மேலும் முந்திரிகைக் குளம் என்ற தமிழ்க் கிராமங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு கஜுவத்தை எனப் பெயரும் மாற்றப்பட்டு விட்டது.

அதே போன்று சிலாவத்துறை, மடிச்சுக்கட்டி ஆகிய பகுதிகளில் வீதியின் ஒருபுறம் மீள் குடியமர தமிழ் மக்கள் அனுமதிக்கப்படவில்லை. அங்கு இராணுவத்தினரின் குடும்பங்களுக்கான குடியேற்றத் திட்டம் அமைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முல்லை மாவட்டம் நில வளம், நீர்வளம் கொண்ட பிரதேசமாகும். பரந்த மழை வீழ்ச்சிகளும் காடுகளும் நெல் விளைச்சலுக்கு ஏற்ற கருங்கழி நிலமும் என்றும் குன்றாத மீன்வளம் கொண்ட கடலும் என ஒரு செல்வம் கொழிக்கும் பிரதேசமாகும். மன்னார் அரிசித் தொட்டில் என வர்ணிக்கப்படுமளவுக்கு நெல் உற்பத்தி கொண்ட பிரதேசமாகும்.


எமது மக்களின் கடுமையான உழைப்பில் செழிப்படைந்த பிரதேசங்கள் இவை. இன்று இவற்றை அபகரிக்கும் சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆயுதப் போர் முடிந்துவிட்டது. ஆனால் எமது மண்ணை அபகரிக்கும் போர் ஆரம்பித்து விட்டது.

சந்திரசேகர ஆசாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கம் தவறிய பயணம்






அந்தப் புகையிரதம் வரச் சற்றுத் தாமதம் ஏற்பட்டிருந்தது. எனினும் வேளைக்கே புகையிரத மேடைக்கு வந்து சேர்ந்த இரண்டு பயணிகள் தமது பொதிகளுடன் மேடையில் இருந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர். அங்கு அவர்கள் வரும் முன்னரே சிறிது மது அருந்தி விட்டு வந்திருந்ததமையை அவர்களின் அரட்டைச் சத்தம் அடையாளம் காட்டியது. சிறிய இடைவேளைக்குள் மறைவாகத் தம்முடன் எடுத்து வந்திருந்த மதுப்புட்டியைத் திறந்து இருவருமே மாறி மாறி அருந்தினார்கள். வெறி தலைக்கேறிய நிலையில் தமது நிலை மறந்து அரற்றியபடி அங்கிடத்திலேயே தூங்கி விட்டார்கள். அவர்கள் போகும் இடத்தையோ அவர்களின் பயணத்தின் நோக்கத்தையோ உணரும் வாய்ப்பற்று மேடைக்கு வந்த இரும்புப் புகையிரதம் ஒவ்வொன்றும் அந்தப் பாதையில் தரிப்பதும் சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டுச் செல்வதுமாக இருந்தது. வந்திறங்கும் பயணிகளாலும் புகையிரதத்தில் ஏறத் துடிக்கும் பயணிகளாலும் புகையிரத மேடை சில பொழுது பரபரப்பாகி அடங்கும். அடுத்து வரும் புகையிரதத்தால் மீண்டும் மேடை பரபரப்பாகிப் புகையிரதத்தில் பயணிகள் ஏறுவதும் இறங்குவதுமான ஆரவாரம் கேட்கும். ஆனால் எந்த ஆரவாரத்திற்கும் அசையாமல் அவர்களோ வெறிமயக்கத்தில் பல மணி நேரமாகப் படுத்துக் கிடந்தார்கள். அவர்கள் மேடைக்கு வந்த நேரத்திலிருந்தே அவர்களின் செய்கையை புகையிரத நிலைய அதிகாரி அவதானித்துக் கொண்டிருந்தார்.

இப்பொழுது மிக விரைவாகவே வந்து பெரும் இரைச்சலோடு மேடையினருகில் நின்ற புகையிரத சத்தத்தைக் கேட்ட அந்த இருவருள் ஒருவர். அவசர அவசரமாக விழித்தெழுந்து விரைந்து சென்று அங்கு நின்றிருந்த புகையிரதத்தில் தொற்றிக் கொண்டார். புகையிரதம் புறப்பட்டுப் போய் விட்டது. அவருடன் வந்தவர் இன்னமும் வெறிமயக்கத்துடன் தூக்கம் கலையாத நிலையில் மேடையில் புரண்டார். ஸ்ரேசன் மாஸ்ரர் அவரைத் தட்டி எழுப்பினார். விழித்துக் கொண்டவர் பரபரப்பாகிப் பயணமாவதற்கு அவசரப்பட்டார். ஆனால் புகையிரத நிலைய அதிகாரியோ "தம்பி நீர் பயணம் செய்ய வேண்டிய புகையிரதம் எப்பொழுதோ போய்விட்டது. அதுபோய் மணித்தியாலங்கள் பல கடந்து விட்டன. பயணம் செய்யப் புறப்படும்போது வெறுமே குடிப்பது நல்லதல்ல. குடிக்கிறதென்றாலும் பயணம் செய்யும்போதுசற்று அளவோடு குடிக்க வேண்டும். தெரியுமோ?" என்று சொன்னவர் சற்று நிதானித்து "பார்த்தீரா உம்மோடு வந்த பையன் அளவோடு குடித்திருக்கிறான். அவன் இப்பொழுது வந்த அந்த புகையிரதத்தில் ஏறிப் போய் விட்டானே" என்றார். அதனைக் கேட்டவர் "அப்படியா? அந்த ரெயிலில் அவன் போய்விட்டானா? அவன் என்னை அனுப்பிறதுக்கெல்லோ வந்தவன்!" என்றான் ஆச்சரியத்தோடு.

பயணியை அனுப்ப வந்தவன் பயணமாகிப் போய் விட்டான் என்பதை அறிந்து கொண்ட ஸ்ரேசன் மாஸ்ரருக்கோ சிரிப்புத் தான் வந்தது. பயணம் போகக் காத்திருந்த அந்தப் பயணியைப் பரிதாபத்தோடு பார்த்தார்.

இவ்வாறுதான் பலரும் தாம் வந்த நோக்கத்தைத் தொலைத்து மதுபோதையில் உள்ளவர்கள் போன்று எதையெதையோ செய்து தொலைக்கிறார்கள் - தொலைகிறார்கள். மக்களுக்குச் சேவை செய்வதாகச் சொல்லிக் கொள்வோரும் நாட்டின் நன்மைக்காகவே ஆட்சி செய்கிறோம் என்போரும் எமை அழைத்து வந்த நோக்கம் சிதைய மது மயக்கத்தில் நிற்பவர் போலச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப ஓடிவரும் வண்டியில் தொற்றிக் கொண்டு எங்கெங்கோ போய்த் தொலைகிறார்கள். அவர்களை நம்பி அவர்களின் பின்னே வந்தவர்கள் பாவருமே அங்கலாய்க்கிறார்கள். அந்தரப்படுகிறார்கள். இந்த வகை அரசியற் தலைவரும் இருக்கவே செய்கிறார்கள் அவர்களை நம்பி மயங்காதிருக்க முயற்சிப்போம்.

எமது நோக்கமும் செயலும் தெளிவாக இல்லாதவரை மது அருந்தியவர்கள் போல மயக்கமும் கலக்கமும் சூழ வாழ்க்கையைப் பயனற்றதாக்கி விடுகிறோம். மயக்கம் தொலைந்து தெளிவான சிந்தனையுடன் நோக்கம் குலையாமல் பயணிக்க முந்துவோம். அதுவே உங்களை நம்பி உங்களுடன் அலைபவர்களுக்கு நீங்கள் செய்யக்கூடிய உயர்ந்த உதவியாகும்.


# கலைமுகம் - காலாண்டு கலை இலக்கிய சமூக இதழ்

'சமூக ஒட்டுறவு' சார்ந்த படைப்புக் கலை பற்றிய மொழிபெயர்ப்புக் கட்டுரையை முதலாகக் கொண்டு கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் 53 ஆவது இதழான கலைமுகம் வெளிவந்துள்ளது. கலை, கலாசாரம் என்பவை ஒரு சமூகத்தின் சிந்தனை, செயல், வாழ்க்கைமுறை என்பவற்றை இணைக்கும் - வெளிக்காட்டும் வகையில் ஒவ்வொருவரும் தனது சமூகத்தோடு ஒட்டுறவான உணர்வுடையோனென உரைக்கும் உறவைக் கட்டுரை விளக்கிச் செல்கிறது. அதன் தொடரை ஆவலோடு எதிர்பார்க்கும் வண்ணம் ஆங்கிலத்தில் நபரியசேவியர் அடிகளார் எழுதியதைத் தமிழில் பீ.எஸ்.அல்பிரட் அவர்கள் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். யோகி, எம்.ரிஷான் ஷெரீப், அனார், கு.றநீபன், தீபச்செல்வன், குமாரதீபன், துவாரகன் ஆகியோரின் கவிதைகளும் சி.ரமேஷ், ஜெயராஜ், எம்.ரிஷான் ஷெரீப் ஆ.பா.மு.இதிரிஸ், ஜெரா, து.கௌரீஸ்வரன் ஆகியோரின் கட்டுரைகளும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. மயிலங்கூடலூர் நடராசன் அவர்களின் சிறுவர் இலக்கியப் பார்வை பற்றி சி.ரமேஷ் எழுதியுள்ள ஆக்கம் ஓர் எழுத்தாளனின் சிறுவர் இலக்கியப் பணியையும் அவரது சிறுவர் இலக்கிய மகிமையையும் சொல்லிச் சிலிர்க்கிறது. ஓவியங்களின் பின்னரான ஓவியர்களின் எதிர்காலத்தைச் சோம்பேறியாக்கும் சமூக அரசியற் சூழலைக் காட்டி ஆதங்கப்படும் முகிழ் ஓவியமடைகுறித்த ஜெயராஜ் எழுதிய எழுத்தைப் பார்க்கின்றோம்.

'பம்பரவளல்ல' என்ற சிங்களத் திரைப்படம் பற்றிய எம்.ரிஷான் ஷெரீப்பின் எழுத்து திருப்பங்களுடன் கூடிய வாழ்க்கையின் விபரீதமான அந்தகாரமான பக்கங்களையும் மக்களின் துயரங்களையும் அச்சம் சூழ்ந்துவர வெளிப்படும் காட்சிகளையும் கொண்டு படம் பிடிக்கப்பட்டுள்ளதை எடுத்துரைக்கிறது. இன்றைய சமூகத்தில் காணப்படும் கலாசார மாற்றங்களையும் திரைப்படக் கதை சொல்லிச் செல்லும் வகை சிறப்பாக உள்ளது.

இவற்றுடன் அ.கேதீஸ்வரன் தந்துள்ள 'ஆண்களின் தீவு' எனும் சிறுகதை கல்பிகா எழுதிய 'ஆண்களின் தீவு' எனும் சிறுகதையென்பது தெரிகிறது. கல்பிகா எழுதத் துணிந்த 'ஆண்களின் தீவு' எழுதப்படவில்லை. ஆனால் அ.கேதீஸ்வரன் 'ஆண்களின் தீவு' என்ற தலைப்பில் சிறுகதையைத் தந்துள்ளார். "உள்ளேதான் உள்ளாயோ...?" எனும் தாட்சாயணியின் சிறுகதை தாயற்ற குழந்தையொன்றின் ஆதங்கத்தை மென்மையான உணர்வுகளோடு வெளிப்படுத்திச் செல்கிறது. கோவிலின் "உள்ளே தான் உள்ளாயோ" என ஆச்சியின் கடவுளை நோக்கிய முணுமுணுப்புக் கதையின் கருவை உள்ளத்தில் அமர்த்திக் குழந்தையின் எதிர்காலத்தின் உள்ளே நுழையும் துயரை கதை முனைகிறது.

அத்துடன், சோ.ப.அவர்களால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட 'புறத்தி' எனும் நைஜீரியக் கதையும் ஆங்காங்கே புதிய நூல் வரவுகளைப் பரப்பி அறிமுகம் செய்துள்ள வகையும் நன்று. திருமறைக் கலாமன்றும் காலாண்டுச் சஞ்சிகையாக வெளியிடும் கலைமுகம் என்றும் போல் அதன் வளர்ச்சியில் ஆசிரியரும் பொறுப்பாசிரியரும் கொண்டுள்ள கரிசனையை வெளிப்படுத்துகிறது. மஸ்ரில் மொழிச் சுவை பரவத் தரப்பட்டிருக்கும் ஆக்கங்கள் மூலம் அதன் தரம் உயர்ந்துள்ளமையை தெளிவுறக் காணலாம். தளராத



முயற்சியின் வழி துலங்கும் எழுத்தாளர்களின் முன்வைப்புக்கள் கலைமுகத்தில் நிறைந்துள்ளன. அவை வாசகரை கவர்கின்றன.

■ வைதேகி தேவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் வேதகாலத்திலிருந்து

ஆன்மீக உலகில், தன்னை உணருகின்ற விழிப்பு நிலையின் உச்சத்தைத் தொடுவதில் ஆண்களும், பெண்களும் பெரும்பங்கு வகித்திருக் கிறார்கள். உள் நிலையைப் பொறுத்தவரையில் ஆணிற்கு இணையான தன்மை பெண்ணிற்கும் உண்டு என்பது ஐயத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் நிரூபிக்கப் பட்டுள்ளது. மேலேயிருக்கிற தோலைத் தான் ஆண் என்றும், பெண் என்றும் பிரிக்கிறோமே தவிர, உள்ளே இருக்கிற தன்மை ஒன்றுதான். ஆண் தோலா? பெண் தோலா? என்பதுதான் பேதம். உங்கள் ஆன்மீக சக்தியை நிர்ணயிக்கக் கூடியவை இந்தத் தோல்கள் அல்ல. வேண்டுமானால் உடல் கூற்று அளவில் சில பின்னடைவுகள் பெண்களுக்கு இருக்கலாம். ஆனால், உளவியல் ரீதியில் அவர்கள் இன்னும் கூடுதல் வலிமை பெற்றவர்கள். வேத காலங்களிலிருந்தே பெரிய முனிவர்களாகப் பெண்கள் திகழ்ந்திருக்கி றார்கள். வழிபாட்டு முறையின் தொடக்கமே பரம்பொருளை ஓர் அன்னையாக வணங்குவதில்தான் தொடங்கியது. எல்லையில்லாத இறைத் தன்மையை அன்னையாகத்தான் பார்த்தார்கள். அன்று முதல் இன்றுவரை அது தொடர்கிறது. இன்று கூட பெண் தெய்வ வழிபாடு என்பது ஆண் தெய்வ வழிபாட்டை விட அதிகம் இருக்கிறது. அறியாமையில் இருக்கிற ஒரு மனிதன் கூட, அனைத்துக் கடவுள்களும் தன்னைக் கைவிட்டுவிட்டதாகக் கருதினால், விரைவான நன்மைகளைப் பெறுவதற்கு அம்மன் கோவிலுக்குத்தான் செல்கிறான்.

வேதகாலங்களில் அந்தணர்கள் அணிகிற பூணூலைப் பெண்களும் அணிந்திருந்தார்கள். பூணூல் அணிகிற தகுதி அவர்களுக்கு இருந்தது. ஏனென்றால் பூணூல் இல்லாமல் வேதங்களையோ, இதிகாசங்களையோ படிக்கக்கூடாது என்கிற விதிமுறை அன்றைக்கு இருந்தது. ஆன்மீகம் ஆண்களுக்கு மட்டும் உரியதல்ல. பெண்களுக்கும் உரியது. மைத்ரேயி போன்ற பெண் முனிவர்கள் நிறைய பேர் அன்று இருந்தார்கள்.

கி.மு.3000 காலத்திலிருந்தே வரலாறு நமக்குச் சொல்வது என்னவென்றால் ஆணும், பெண்ணும் சரிநிகராக இருந்து வந்திருக்கிறார்கள் என்பதுதான். அதற்குப் பிறகு ஆசிய நாடுகளில் பல்வேறு பகுதிகளான மங்கோலியா, மத்திய சீனா, இந்தோசீனா போன்ற இடங்களிலிருந்து கட்டுமிராண்டித்தனமான படையெடுப்புகள் நிகழ்ந்த போதுதான் - கொள்ளையடித்து உண்டு வாழும் ஒரு வாழ்க்கை வந்த போதுதான் - பெண் மெல்ல மெல்ல தன் சுதந்திரத்தை இழக்கலானாள். எது கிடைத்தாலும் அள்ளிக் கொண்டு போகிறவர்கள் வந்தவுடன், ஆண்கள் பாதுகாப்புப் பணிகளில் நாட்டம் செலுத்தத் தொடங்கினார்கள். எனவே செயல்முறைகள் ஒருதலை பட்சமாகி சாத்திரங்களும், சூத்திரங்களும் கொண்டுள்ள விதிமுறைகள் மாற்றி எழுதப்பட்டன. வேதங்கள்தான் ஸ்மிருதிகள். அவை வாழ்வின் அடிப்படை உண்மைகளைப் பேசுகின்றனவே தவிர, வாழ்க்கை குறித்த எந்த நிர்ணயமும் வகுப்பதில்லை.

பிறகு ஸ்மிருதிகள் எழுதினார்கள். 50 - லிருந்து 60 சதவிகிதம் வரை ஸ்மிருதிகள் ஒரு பெண்ணின் வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பதாகவே அமைந்தது. ஒருவேளை அதற்கான கட்டாயம் அப்போது இருந்தது என்று சொல்லலாம். வெளிச்சூழ்நிலை காரணமாகப் பெண்மீது சில தடைகள் வகுக்கப்படவேண்டியதாக இருந்திருக் கலாம். ஆனால், அவை நிரந்தரமான சட்டங்களாக மாறியது துரதிஷ்டவசமானது. ஸ்மிருதிகளைப் பொறுத்தவரை பெண்ணுக்கு எதிராகச் செய்த முதல் மாற்றம் என்பது பெண்கள், ஆண்களைப் போல பூணூல் அணிய முடியாது என்று நிர்ணயித்ததுதான். அது ஒரே நேரத்தில் எழுதப் பட்டிருக்க முடியாது. படிப்படியாகத்தான் நிகழ்ந்திருக்கக்கூடும். மெல்ல அது மேலும் வளர்ந்து, ஒரு பெண் முக்தியடைய ஒரே வழி அல்லது தன்னை உணர்வதற்கான ஒரே வழி தன் கணவனுக்குப் பணிவிடை செய்வதன் மூலமாகத்தான். அதைத் தவிர வேறு வழியே இல்லை என்று முடிவு செய்தார்கள்.

வேதகாலங்களில் ஒரு பெண் தன்னுடைய குடும்ப வாழ்வை எப்போது வேண்டுமானாலும் முடித்துக் கொள்ளலாம். ஆணுக்கு இருந்த அதே சுதந்திரம் பெண்ணுக்கும் இருந்தது. சமூகத்தில் எந்த ஒரு எதிர்விளைவையும் ஏற்படுத்தாமல், இத்தகைய முடிவுகளைப் பெண்கள் எடுத்ததற்கான பல சான்றுகள் உள்ளன. அது சமூகத்தால் ஏற்கப்பட்டது. ஒரு பெண் தான் விரும்பிய கணவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அந்த எல்லை தாண்டி அவள் வளர்ந்து விட்டதாகக் கருதினால், அக்குடும்பம் என்கிற அமைப்பைவிட்டு ஒரு ஆண் வெளியேறுவதைப் போலவே பெண்ணும் வெளிவந்து கொண்டிருந்தாள். ஆண் ஒருவனுக்குத் திருமணம் ஆகிறது. பத்து, இருபது ஆண்டுகள் குடும்பம் நடத்துகிறான். பிறகு ஆன்மீக நாட்டம் வருகிறது. குடும்பத்தை துறந்து விட்டுப் போகிறான். அதே உரிமை ஒரு பெண்ணுக்கும் இருந்தது. ஆன்மீகப் பாதையில் செல்லவேண்டும் என்ற நாட்டம் அவளுக்கு வந்த போதெல்லாம் குடும்பத்தைத் துறந்துவிட்டு அவள் சென்றிருக்கிறாள். இது வேதகாலத்தில் முழு மனதோடு ஏற்கப் பட்டிருக்கிறது.

காலப்போக்கில் பாரோ, துறவு மேற்கொள்வது ஆணுக்குத்தான் சாத்தியம் என்று வரையறுத்து விட்டார்கள். இது பற்றி யாருமே கேள்வி எழுப்புவது இல்லை. ஒரு ஆண், ஒரு பெண்ணைத் துறந்து விட்டு ஆன்மீகப் பாதையில் போகலாம், தன்னிடம் இருப்பது எதையும் துறப்பது எல்லோருக்கும் உள்ள உரிமைதானே. ஒரு ஆண் ஒரு பெண்ணைத் துறந்துவிட்டால் அந்தப் பெண்ணை யார் பார்த்துக் கொள்கிறார்கள் என்பது போன்ற கேள்விகளுக்கு விடையே இல்லை. இதை அப்படியே விட்டு விட்டார்கள். இருவருக்கும் அதே சுதந்திரம் இருந்தால் அது வேறு. ஒருவருக்கு மட்டும் இந்தச் சுதந்திரம் இருந்து, இன்னொருவருக்கு இல்லாதபோது அது தீமைவிளைப்பதாகத்தான் இருக்க முடியும். துரதிஷ்டவசமாக அப்படியொரு சட்டம் போடப் பட்ட பிறகுதான் மகிழ்ச்சியாகச் சேர்ந்து வாழ்கிற ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டிருக்க வேண்டும்.

ஏனென்றால், இரண்டு பேர் முழு மகிழ்ச்சியாக - ஆனந்தமாக சேர்ந்து வாழ்வது எப்போது சாத்தியமென்றால், அவர்கள் சுதந்திரமான நிலையில் சந்திக்கிறபோதுதான். ஒரு கட்டுப்பாட்டுடன் சந்திக்க நேருமானால், பிறந்த நாள் முதல் அடிமையாகவே இருந்த ஒரு பெண்ணை திருமணம் செய்ய நேர்ந்தால், அந்தப் பெண்ணை உங்களுக்கு அடிமையாக இருக்கத் தான் பழக்கியிருப்பார்களே தவிர, வேறு எதுவும் இல்லை. ஒருவேளை அதிக பட்சம் அந்த வாழ்க்கை அவளுக்கு வசதியாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கை ஆனந்தமாக இருக்க முடியாது. அவள் வசதியாக இருப்பாள். உங்கள் தேவைகளைப் பார்த்துக் கொள்வாள்.. அவ்வளவு தான்.

துரதிஷ்டவசமாக இன்று கூட இதுதான் தொடர்கிறது. ஒரு உயிர், பெண்ணாகப் பிறந்த உடனேயே, ஒன்று தன் தந்தைக்கு அல்லது கணவனுக்குச் சேவைகள் செய்வதற்குத்தான் அந்த பிறப்பே எடுத் ததாகச் சொல்லப்படுகிறது. அதைத் தாண்டி எதுவுமேயில்லை என்பதுபோல் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் இதைச் சொல்பவர்கள் யாரென்றால் அத்வைதம் பேசுகிறவர்கள் தான் இதைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். உலகில் எல்லாமே ஒன்றுதான். ஆனால், ஆண்களைவிடக் குறைந்தவள் பெண். இது அவர்களுக்கு எப்படித் தோன்றியது என்று புரியவில்லை. பிறப்பிற்குக் காரணமான பாலியல் ரீதியான வேற்றுமையைக் கூட ஏற்றுக்கொள்ள முடியாத யாருமே அத்வைதிகளாக இருக்க முடியாது. ஆணுடைய வாழ்க்கை பெண்ணைச் சார்ந்தே இருக்கிறது. எனவே அவளை ஏற்றுக்கொள்ள இயலாவிட்டால், வாழ்க்கையின் அனைத்து உரிமைகளையும் ஒன்றாக ஏற்றுக்கொள்வதென்பது சாத்தியமே இல்லாத ஒன்று. மனித குல வாழ்க்கையின் ஆதாரங்களில் ஆணைவிட, பெண்ணுக்குத்தான் அதிக பங்கு இருக்கிறது. ஆணுக்குப் பங்கு ஒரு அளவு வரை தான். எனவே, பெண்ணை ஏற்றுக்கொள்ளாத போது ஆண் மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டிருக்கக் கூடும், அல்லது அறியாமையில் இருக்கக் கூடும். ஆனால் இவை எல்லாமே சில வசதிகள் கிடைக்கின்றன என்பதனால் இருக்கின்ற குறுகிய மனப் பான்மைகள் தான். என்ன நடந்தாலும் வசதியாக இருந்தால் எதற்காக அதை விட்டுக் கொடுப்பது? அது சரியா? தவறா? என்பதெல்லாம் கேள்வியல்ல. அதில் நன்மை கிடைக்கிறது என்றால் ஏன் விட வேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்த மன நிலை மாறாவிட்டால் அங்கே ஆன்மீகம் இருக்காது. அங்கே ஆன்மீகம் இருக்க வழியே கிடையாது.

இன்றுகூட நாம் பார்க்கிறோம், அம்மன் கோவில் முன்னால் போய் விழுந்து கும்பிடுகிற ஒரு ஆண் வீட்டுக்குப் போய் மனைவியை அடிக்கிறான். அவன் அறியாமை கொண்டவன் மட்டுமல்ல நேர்மை யில்லாதவன். குறுகிய மனப்பான்மை இல்லாவிட்டால் இப்படியொரு பார்வை வராது.



அதேபோல் ஆண் செய்வதை எல்லாம் பெண்ணும் செய்வது என்று வந்தால் அதுவும் சரியாக இருக்காது. அது மிகவும் ஆபாசமாகத்தான் இருக்கும். மேற்கில் இதுதான் நடக்கிறது. இங்கேயும்கூட இது ஓரளவு இருக்கிறது. ஆக பெண்கள், முயற்சி செய்து வருகிறார்கள். அது நிகழ்ந்தால் இரு சாராருக்குமே சேதம்தான் அதிகம். ஒரு பெண், பெண்தன்மையை இழந்தால் அது மிகவும் அசிங்கமாக இருக்கும். ஆண் போல ஆக வேண்டும் என்று பெண் நினைப்பதே தவறு. அவள் ஏன் ஒரு ஆண்போல ஆகவேண்டும்? ஏனென்றால், அவளுக்குள்ளேயே ஏதோ ஓரிடத்தில் தான் தாழ்ந்தவள் என்றும் ஆண் உயர்ந்தவன் என்றும் ஒரு எண்ணம் இருக்கிறது. எனவே ஆண்போல ஆக அவள் நினைக்கிறாள்.

அவளது இந்த எண்ணம் மாறினால் மட்டுமே, உன்னதமடைய முடியும்.

தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
THE SUDAROLI
வாரமலர்
10 ஜூன் - 16 ஜூன் 2012
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன் 0115758005
பெக்ஸ் 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com

## இறுதிப்போரின் பின்னான குற்றங்கள்!

இறுதி யுத்தத்தில் போது பொதுமக்களினதும் பொது நிறுவனங்களினதும் கைவிடப்பட்ட பெருமளவிலான வாகனங்கள் பல இன்றும் வன்னிப் பகுதியில் குவித்து வைக்கப்பட்டுள்ளன. ஆனாலும், அவை வெறும் கோதுகளாகவே காணப்படுகின்றன. இதை உரிமையாளர்கள் அவற்றைப் பார்வையிட்டு ஏமாற்றத்துடன் கைவிட்டுச் செல்கின்ற நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில், இவ்வாறு கைவிடப்பட்ட வாகனங்கள் சில தென்னிலங்கையில் பாவனையிலுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. இவை எவ்வாறு தென்னிலங்கைப் பகுதிகளுக்குச் சென்றன என்பது குறித்து வன்னி மக்கள் நன்கறிவார்கள். இவ்வாறு முறைகேடாகக் கடத்தப்பட்ட வாகனங்களை விட ஏற்கனவே கணிசமான பெறுமதிவாய்ந்த உதிரிப்பாகங்கள் பெருமளவில் களவாடப்பட்டுள்ளன. இவை வேறு வாகனங்களுக்கு ஏற்றதாய் பெறுமதி வாய்ந்தவையாகும்.

வன்னியில் மக்கள் மக்களின் மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவர்களால் கைவிடப்பட்ட வாகனங்கள் மடைக்குளங்களிலும் மீட்கப்பட்டு கிளிநொச்சியிலும் முல்லைத்தீவின் சில பகுதிகளிலும் வைக்கப்பட்டன. மக்கள் தங்கள் வாகனங்களை அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து எடுத்துச்செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டது. அதற்கான செயலகம் ஒன்றும் இயங்கியது. ஆனால், வன்னியில் அதிகளவில பயன்படுத்தப்பட்ட விவசாயிகளின் உழவு இயந்திரங்கள் தொடக்கம் பேருந்துகள், பாரவூர்திகள் உட்பட உந்துருளிகள் வரையிலான பல வாகனங்கள் இவை உதிரிப்பாகங்களை இழந்த நிலையிலேயே காணப்பட்டன. இன்னும் காணப்படுகின்றன. கைவிடப்பட்ட இவ்வாகனங்களின் உதிரிப்பாகங்கள் திட்டமிட்டே அகற்றப்பட்டு தென்னிலங்கைப் பகுதிகளில் விற்பனையாவதாக வன்னி மக்கள் கூறுகின்றனர்.

இந்நிலையிலேயே வன்னியில் கைவிடப்பட்ட சில வாகனங்கள் முறைகேடாகக் கடத்தப்பட்டு தென்னிலங்கையில் பாவனையிலுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. ஆயினும், அதனையிட்டு அதிகாரிகள் கடத்திச் செல்லப்பட்ட வாகன உதிரிப்பாகங்கள் குறித்த உண்மைகளை வெளிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் குறைவாகவே உள்ளன.

வாகனங்கள் மட்டுமல்லாது மக்களால் கைவிடப்பட்ட வீட்டுப்பாகங்கள், தளபாடங்கள், பெருமளவிலான இலத்திரனியல் பொருட்கள் என்பனவும் இவ்வாறே காணாமல் போயுள்ளன. மீள்குடியமர்வதற்கு முதல் நாள் காணப்பட்ட வீட்டின் பாகங்கள் அடுத்தடுத்த நாட்களில் மக்கள் மீள்குடியமரச் செல்லும் போது மாயமாக மறைந்துள்ளன.


வன்னியில் மக்கள் மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டு இரண்டரை வருடங்களாகின்ற போதும் அவர்களில் பலர் வீடுகளில் முன்பு பாவனையிலிருந்த பொருட்களை மீண்டும் கொள்வனவு செய்ய முடியாத பொருளாதார நிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

இழந்த பொருட்கள் உரிய முறையில் மீட்கப்பட்டு அவை அம்மக்களிடம் வழங்கப்படுவதுமாயின ஓரளவிலாவது அவர்கள் நிமிரக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கும். வன்னியில் பெருமளவிலான விவசாயிகள் தங்களின் விவசாயத் தொழிலை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உழவு இயந்திரங்கள் முதலான வாகனங்களை கடனடிப்படையில் கொள்வனவு செய்தனர். ஆனாலும் அதற்கான மாதாந்தக் கொடுப்பனவை செலுத்த முடியாத காரணத்தினால் பல வாகனங்கள் கடன் தந்த நிறுவனங்களால் மீளப்பெறப்பட்டுள்ளன.

இவ்வாறு வன்னியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் தங்கள் பொருளாதார வாழ்க்கையை முன்னெடுப்பதில் பல சிரமங்கள் - தடைகளை எதிர்கொண்டுள்ளனர். இறுதிப் போரில் உயிர்களையும் உறவுகளையும் இழந்த மக்களின் எஞ்சியிருந்த உடைமைகளும் அபகரிக்கப்பட்டமையானது ஒரு மோசமான செயற்பாடு ஆகும்.

இறுதிப்போரில் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களில், போரின் பின் அவர்களின் உடைமைகள் திட்டமிட்டு அபகரிக்கப்பட்ட குற்றங்களும் சேர்க்கப்படவேண்டும்.

# புதிய சோசலிசம்...?



தமிழர் வாழும் பிரதேசமாக வடக்கைக் கருத முடியாது எனவும் தெற்கில் தமிழர்களும் வாழும் போது வடக்கில் சிங்களவர் வாழ உரிமை இருக்கிறது எனவும் உரிமை கொண்டாடி 'புதிய சோசலிச' சிந்தனையொன்றை நிறுவ முற்பட்டுள்ளார் பாதுகாப்புச் செயலரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச.

வடக்கில் அரசு உத்தியோக பூர்வமாக வர்த்தமானி மூலம் அறிவிக்காத குறையாக தமிழர் பிரதேசமெங்கும் சிங்களக் குடியேற்றம் பௌத்த மையங்கள் முளைத்துவரும் நிலையில் பாதுகாப்புச் செயலரின் கருத்து இவ்வாறு அமைந்துள்ளது. திருமுறிகண்டிப் பகுதியிலும் முல்லைத்தீவின் கரையோரப் பிரதேசங்களிலும் சிங்களக் குடியேற்றங்கள் வேகமாக அமைந்து வரும் நிலையில் பாதுகாப்புச் செயலரின் இக்கருத்து பல்வேறு சந்தேகங்களை தமிழ்மக்கள் மத்தியில் கிளப்பியுள்ளது.

இவரின் கருத்துக்கு வலுச்சேர்க்கும் விதமாக அரசின் மீதான தனது விசுவாசத்தைக் காட்டி தனது உலக மகா கண்டுபிடிப்பை நிறுவ முற்பட்டுள்ளார் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும் காவி உடை போர்த்த அரசியல்வாதியுமான எல்லாவல மேதானந்த தேரர்.

அவர் தனது உரையில் இந்தியாவில் இருந்து வந்த வந்தேறுகுடிகளான தமிழ் மக்களுக்கு வட பகுதியை தமது தாயகம் எனக் கூற எந்த உரிமையும் கிடையாது. வடபகுதியை அவர்களின் தாயகம் எனக் கூற எந்த ஆதாரங்கள் அவர்களிடம் உள்ளன. அது சிங்களவர்களின் பிரதேசம். நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் பௌத்த வழிபாட்டு மையத்தின் மீதே கட்டப்பட்டுள்ளது என்றெல்லாம் தனது 'வரலாற்று அறிவை' அள்ளிவீசியுள்ளார். ஆனால் அவர் தனது கருத்தின் மூலம் தனது வரலாற்று அறிவின்மையையே பகிரங்கப்படுத்தியுள்ளார் என்பது தான் உண்மை.

ஏற்கனவே வடபகுதியில் தமிழ்மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வாழ்ந்து வருகிறார்கள். இதற்கான ஆதாரங்கள் உள்ளன. வரலாற்றை பொய்களால் மூடிமறைத்துவிட முடியாது என்பதை இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏற்கனவே கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் வழங்கிய சாட்சியத்தில் இதே பல்லவியை தேரர் பாடிய போதும் அது பெரிதாக எடுபடவில்லை. இந்நிலையில் சந்தர்ப்பம் பார்த்துக் காத்துக் கொண்டிருந்த தேரர் கோத்தபாயவின் கூறிய கருத்தையடுத்து அதனை நல்ல சந்தர்ப்பமாக்கி தனது வித்துவத்தைக் காட்டி தான் பௌத்த இனவாதி என்ற உண்மையை நிரூபித்துள்ளார்.

இதேவேளை இந்து ஆலயங்களுக்குள் புகுந்து புத்தர்சிலை தேடுதல்கள் ஏன் நடாத்தப்படுகின்றது என்ற உண்மையை தமது கருத்துக்கள் மூலம் மறைமுகமாக நிரூபித்து விட்டனர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவும் எல்லாவல மேதானந்த தேரரும்.

பூநகரி கௌதாரி முனைக்கு அடுத்துள்ள மண்ணித்தலை காட்டுப் பகுதியில் மீட்கப்பட்ட கோவில் பற்றிய ஆய்வு யாழ்ப்பாண கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாய்வு, கந்தரோடைப் பகுதியில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட தமிழர்களின் தொன்மை ஆதாரங்கள் நிறுவிய ஆய்வு என்பன ஏற்கனவே வடபகுதியில் தமிழர்களின் இருப்பை, அவர்கள் வாழ்ந்த இருப்பின் தொன்மையை உறுதியாக எந்தவித சந்தேகங்களுமின்றி நிரூபித்துவிட்டன.

இயற்றேறு வவுனியா சாஸ்திரிக் கூழாங் குளம் பகுதியில் மீட்கப்பட்ட சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் எச்சங்கள் பெண் உருவ வழிபாட்டை பிரதிபலிக்கும் உருவங்கள் தமிழர் தம் தொன்மையை ஆணித்தரமாக நிரூபித்துவிட்டன. அத்தோடு சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத் தொகுதி நிர்மாணிப்பு நடவடிக்கையின் போது வெளிவந்த சிவலிங்கமும் தமிழர் தம் வாழ்வின் தொன்மையை அச்சொட்டாக நிரூபித்துவிட்டது. இவ்வாறு தினம் தினம் புதிய புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தொல்லியல் எச்சங்கள் தமிழினத்தின் தொன்மையை உறுதிப்படுத்தும் நிலையில் மீட்கப்படும் போது எல்லாவல மேதானந்த தேரர் கூறும் ஆதாரம் எதுவென்பது தான் தமிழ் மக்களுக்கு புதிராக உள்ளது.

இதேவேளை தமிழ் மக்கள் கொழும்பிலும் தென்னிலங்கையிலும் வாழ்கின்றார்கள். சிங்களவர்கள் ஏன் வடக்கில் வாழ முடியாது எனக் கேட்கும் பாதுகாப்புச் செயலர் தனது மனச்சாட்சி கூறுவதை ஒருகணம் கேட்க வேண்டும்.

கடந்த சில வருடங்களுக்கு முன் தலைநகரில் நள்ளிரவு நேரத்தில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த தமிழர்கள் உறக்கத்திலிருந்து வலுக்கட்டாயமாக எழுப்பப்பட்டு அந்த இருள் சூழ்ந்த பொழுதில் எந்தவித முன்னறிவித்தலுமின்றி பெட்டி படுக்கையுடன் வாகனங்களிலும் பஸ்களிலும் அரசின் நேரடி வழிநடத்தலில் இராணுவத்தினரால் ஏற்றப்பட்டு நடுத்தெருவிலும், அகதி முகாம்களிலும் இறக்கி விடப்பட்ட போது இவர் இப்போது பேசும் 'புதிய சோசலிசம்' எங்கே போனது?

அப்போது தனது படைகளை ஏவிவிட்டு வேடிக்கை பார்த்த கோத்தபாயவிற்கு இப்போது மட்டும் சமத்துவம், நல்லிணக்கம், அனைவரும் சேர்ந்து வாழ முடியும் என்ற எண்ணம் திடீரென எங்கிருந்து உதித்தது எனக் கேட்கின்றனர் தமிழ்மக்கள்.

இப்போது நல்லிணக்கம் பற்றிக் கதைக்கும் அரசு தற்போது இடம்பெற்று வரும் பள்ளிவாசல்கள், இந்து ஆலயங்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்த ஏன் வக்கற்று இருக்கிறது. முஸ்லிம் பள்ளிவாசல்கள் தாக்குதல்களுக்குக் காரணமானவர்களை ஏன் தண்டிக்க முடியவில்லை?

எனவே, அனைவருக்கும் எல்லாம் உரியது என்ற புதிய சோசலிசத் தத்துவத்தை, அரசு நடைமுறையில் காட்ட வேண்டும். இல்லாவிடில் இன, மத மோதல்கள் நாட்டில் மேலும் தீவிரமடையவே செய்யும்.

ஜனநாயகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானிலுள்ள வங்கிகளுள் ரேக்கியோ வங்கி முதன்மை வாய்ந்தது. அது நூற்றுக்கணக்கான கிளைகளைக் கொண்டதாக நாட்டில் இயங்கிக் கொண்டிருந்தது. அவ்வாறான வங்கிக்கிளையொன்று டாக்ஜி ரோவில் அமைந்திருந்தது. அவ்வங்கிக் கிளையின் முகாமையாளரான யாஷிடா சுறுசுறுப்புடன் கடமையில் ஈடுபட்டிருந்தார். அவரின் கீழ் மொத்தம் பதினாறு பேர் பணியாற்றுகின்றனர்.

மறுநாள் விடுமுறை நாளாகவிருந்தமையால், அன்றைய தினம் வங்கியின் வாடிக்கையாளர்களின் வருகை சற்று அதிகரித்துக் காணப்பட்டது. வங்கியின் வாடிக்கையாளர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். அவர்களில் ஒரு சிலர் அந்நகர்ப்பகுதியில் மக்களிடையே வெகு வேகமாகப் பரவிவரும் கொடிய கொலரா நோய் குறித்து முகாமையாளரான யாஷிடாவுடனும், ஏனைய பணியாளருடனும் அளவளாவியிருந்தார்கள். ஆதலால், கொலரா பற்றிய அச்சம் அன்றைய தினத்தில் வங்கி ஊழியர்களின் மனதில் நிலவியது.

பகல் 3.00 மணியாகியது. 3.30ற்குத்தான் வங்கி மூடப்படுவது வழக்கம். அந்நேரத்தில் வாட்டசாட்டமான ஒருவன் கோட் அணிந்து கைகளில் ஸ்டெதஸ்கோப்புடன் வங்கி முகாமையாளரின் அறைக்குள் பிரவேசித்தான். யாஷிடாவிடம் சுகாதாரப்பிரிவில் இருந்து வருவதாகவும்,




# கொள்ளைக்கான கொலை...!


அனைத்துப் பணியாளர்களிடமும் பேசவேண்டும் எனவும் அவர்களை அவரது அறைக்கு அழைக்கும்படியும் வேண்டிக் கொண்டான்.

ஏற்கனவே கொலராத் தாக்கம் குறித்துக் கேள்விப்பட்டிருந்தமையால் யாஷிடா சகலரையும் வந்தவன் கோரிக்கைக்கிணங்கத் தனது அறைக்கு அழைப்பித்தார். பதினாறு பேர்களும் நாற்காலிகளில் சாய்ந்திருந்தனர். சுகாதாரப்பிரிவில் இருந்து வந்தவன் எனக் கூறிக் கொண்டவன் பேசத் தொடங்கினான்.

"நகரத்தில் கொலரா நோய் எங்கும் பரவி வருகிறது. இது ஒரு கொடிய தொற்றுநோய்... மரணத்தை விளைவிக்கக் கூடியது. மக்களின் உடல் நலன்களைக் கவனிக்கும் எங்கள் சுகாதாரப்பிரிவு சாதாரண சுகாதார நடவடிக்கைகளை எடுத்தது. அவை பயனளிக்கவில்லை. எனவே, உங்களுக்கு அந்த நோயிலிருந்து பாதுகாப்பு அளிக்கத் தடுப்பு மருந்துகளை வழங்குமாறு கட்டளையிட்டிருக்கிறார்கள். உங்கள் அனைவருக்கும் ஒரு டோஸ் முதலில் கொடுக்கிறேன். உங்கள் தேனீர்க் கோப்பைகளிலேயே இதை வாங்கிப் பருகலாம். அது உங்களைக் கொடிய கொலராவிலிருந்து காப்பாற்றும்" என்று கூறி முடித்தான்.

அவர்களில் ஒரு பெண் "அது கசப்பாக இருக்கலாம், நாற்றமடிக்கலாம்" என்றாள். இதனிடையே சுகாதாரப்பிரிவில் இருந்து வந்ததாகக் கூறியவன் தன்னை டொக்டர் யாமாச்சி என அறிமுகப்படுத்திக் கொண்டான்.

இதுகுறித்து முகாமையாளர் யாஷிடா காலையில்



வங்கிவாடிக்கையாளர்கள் மூலமாகவும் அறிந்திருந்தமையால் டொக்டர் யாமாச்சி சொன்னதை ஆமோதித்து "டொக்டர் யாமாச்சி சொல்வதுப் போல் செய்யுங்கள். அதுவே நன்மையளிக்கும். நாமும் கொலராவின் தாக்கத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். நேரமாகிறது மருந்தினை உட்கொண்டபின் வங்கியை மூடிவிட்டுச் செல்லலாம்" என்றார்.

அவரே தம் கப்பை எடுத்து யாமாச்சி முன் நீட்டினார்.

"நீங்கள் இரண்டு மருந்துகளைச் சாப்பிட வேண்டும். முதலில் ஒன்றைச் சாப்பிட்டவுடனே மற்றதைச் சாப்பிடவேண்டும். நீங்கள் முதல் மருந்தைச் சாப்பிட்டதுமே இரண்டாவது மருந்தை கப்பில் ஊற்றுகிறேன்" என்று யாமாச்சி விவரித்தான்.

அவர் சொன்னது அங்கிருந்தவர்களுக்குச் சுலபமானதாகத் தோன்றிற்று.

முகாமையாளருடன் சேர்ந்து அனைவரும் மருந்தை வாங்கி முதலில் சிறிது சுவைத்துவிட்டுப் பிறகு முழுவதையும் பருகினார்கள். மருந்து உள்ளுக்குச் சென்றதும், உடலின் உட்பாகம் முழுவதும் பற்றி எரிவது போல் இருந்தது.

டொக்டர் யாமாச்சி உடனே "முதல் மருந்து பற்றி முன்பே எச்சரித்திருந்தேன். இப்பொழுது இரண்டாவது மருந்தைக் கொடுக்கிறேன். உடனே பருகுங்கள், அது உட்சென்றதும் உங்களுக்கு எரிச்சலோ, தொல்லையோ இருக்காது" என்றான்.

அவர்களின் கோப்பைகளில் மருந்தை ஊற்றினான் அவன். அனைவரும் பருகினர். அது உள்ளே சென்றதும் எரிச்சல் மட்டுப்படுத்தப்பட்டதாகத் தோன்றிற்று.

அது ஒரு கணம்தான். கணக்காளர் ஷிபுக்கிகோ கேட்பவர் அதிரும் வண்ணம் கத்தினார். அப்படியே கீழே சாய்ந்தார். காசாளர் திருமதி தாகிசி ஒன்றுமே புரியாமல் அம்மண்டபத்தைச் சுற்றிச் சுற்றி வந்தாள். பின்னர் படிக்கட்டு வழியே கீழிறங்கச் சென்றவள் தரையில் சாய்ந்தாள்.

மற்றவர்கள் கீழே கிடந்து வாய்பேச இயலாது கையையும், காலையும் உதறியடித்துக் கொண்டனர். யாமாச்சி அனைவரின் செயல்களையும் ஏதுமறியாதவர் போல் கவனித்துக் கொண்டு மௌனமாக நின்றிருந்தான்.

ஒரு சில வினாடிகள் தான் டொக்டர் யாமாச்சி என்றவன் அவ்விதம் நின்றிருப்பான். பின் சிறிதும் தாமதியாமல் பணப்பெட்டியிலிருந்த எல்லாப் பணத்தையும் எடுத்துக் கொண்டான். அதில் சுமார் 50.000 டொலர் இருந்தது. அப்போதைய ஜப்பானிய நாணய மதிப்பிற்கு அது ஏராளம். அவர் கம்பீரமாக வங்கியிலிருந்து வெளியேறினான்.

காசாளர் தாகிசி சில நிமிடங்கள் உணர்வற்றுக் கிடந்தாள். பிறகு மெல்ல மெல்ல உணர்வு வரத் தொடங்கிற்று... அவள் ஊர்ந்த படியே வாசல் கதவருகே சென்றாள். கஸ்ரப்பட்டுக் கதவைத் திறந்தாள். தெருவில் போவோரை நோக்கி உதவிக்கு வருமாறு கூப்பாடு போட்டாள்.

ஒரு பொலிஸ்காரர் ஓடிவந்து பார்த்தபோது வங்கியினுள் பன்னிரெண்டு பேர் இறந்து கிடந்தனர். மருந்து பருகிய கோப்பைகள் அவர்களின் கைகளில் இருந்தன. திருமதி தாகிசியும் மற்றுமொருவரும் அதிர்ஸ்டவசமாக உயிர் பிழைத்தனர்.

துப்பறியும் பிரிவு பொலிஸ் அதிகாரி ஒக்கியாமோ கொலைகாரனின் அங்க அடையாளங்களை உயிர் பிழைத்தவர்களிடம் கேட்டறிந்தார். மேலும் கிடைத்த தகவல்களை வைத்துக் கொண்டு சுமார் இருநூறு பேர்களைச் சந்தித்து விசாரித்தார். துப்பறியும் பிரிவினருக்கு சாகிமாசா என்ற பெயர் மாத்திரம் கிடைத்தது.

தொடர்ந்து எடுத்துக்கொண்ட தீவிர முயற்சிகளின் பலனாக விரைவிலேயே மேலும் சில விபரங்கள் கிடைத்தன.

சாகிமாசா கொள்ளையடித்த பணத்தில் மனைவிக்குச் சிறிது கொடுத்தான். அவன் வேறு வங்கிக் கணக்கிலும் பணம் கட்டியிருந்தான்.

அது ஒரு கணம்தான். கணக்காளர் ஷிபுக்கிகோ கேட்பவர் அதிரும் வண்ணம் கத்தினார். அப்படியே கீழே சாய்ந்தார். காசாளர் திருமதி தாகிசி ஒன்றுமே புரியாமல் அம்மண்டபத்தைச் சுற்றிச் சுற்றி வந்தாள். பின்னர் படிக்கட்டு வழியே கீழிறங்கச் சென்றவள் தரையில் சாய்ந்தாள்.

வங்கிக் கொள்ளைக்கு முதல் நாள் கூட அவனும், அவன் மனைவியும் பணம் கடன் கேட்டுப் பலரிடமும் சென்றிருக்கிறார்கள் என்பதும் தெரியவந்தது.

சாகிமாசா உண்மையான டொக்டர் இல்லை. அவன் சித்திரம் வரைபவன். அவனுக்கு வருமானம் மிகவும் குறைவு. ஏராளமாகக் கடன் இருந்தது. தன் ஓவியங்களை விற்றதில் கிடைத்த பணமே அத்தனையும் என சாகிமாசா வாதாடினான்.

பெரிய பணக்காரர் ஒருவர் தன் ஓவியங்கள் சிலவற்றை விலைக்கு வாங்கியதாகக் கூறினான்.

துப்பறியும் அதிகாரி ஒக்கியாமோ விசாரித்தபோது சாகிமாசா சொன்ன பணக்காரன் எவனும் கிடைக்கவில்லை. அப்படியே சாகிமாசா தான் வரைந்த ஓவியங்களை விற்கச் சென்றிருந்தாலும் கூட, அதற்குச் சிறு தொகை பணம் தான் கிடைத்திருக்கலாம் என்பதும் தெரியவந்தது.

சாகிமாசாவின் இடக்கன்னத்திலுள்ள மச்சத்தையோ, முகவாய்க்குக் கீழே காணப்பட்ட வெட்டுக்காயத்தையோ அவனின் பழைய உடைகளையோ மறைக்க முடியவில்லை.

கடைசியாக, தப்பிக்க வழியேதுமற்ற நிலையில் ஓவியன் சாகிமாசா எல்லா உண்மைகளையும் வெளியிட்டுவிட்டான்.

விசாரணை ஆரம்பமாயிற்று. நீதிமன்றத்திற்கு ஆடம்பரமான உடையில் வந்தான் சாகிமாசா. பொலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை அப்படியே அடியோடு மறுத்துவிட்டான். அவனைச் சித்திரவதை செய்தே பொலிசார் அவ்விதம் வாக்குமூலம் வாங்கியதாகச் சொன்னான்.

நீதிபதி அனைத்தையும் தீர விசாரித்த பின்னர் சாகிமாசாவுக்கு ஆயுள் தண்டனை வழங்கினார்.

**தமிழில் - ஜெகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறாத அன்பு....

சிறுகதை

வதனா அவசர அவசரமாகத் தன் வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு கோபியையும் வெளி கிடுத்தித் தானும் பாடசாலைக்கு ஆயத்தமானாள்.

வதனா கணித ஆசிரியராகப் பணி புரிகின்றாள். கோபி முதலாம் ஆண்டில் கல்வி கற்கின்றான். கோபிக் குச் சுகயீனமாக இருந்ததால் அவளால் ஒரு வார காலத்திற்கு பாடசாலைக்குச் செல்ல முடிய வில்லை.

பாடசாலையில் வதனா ரீச்சர் என்றாலே ஒரு தனி மதிப்பும் மரியாதையும் இருந்தது. அதற்கு வதனா விடம் இருக்கும் தற்பெருமையில்லாக் குணமும் சிறு வர்களிடத்தில் காட்டும் அன்புமே காரணமாக அமைந் திருந்தது. அன்று வகுப்புக்குச் சென்ற வதனாவைக் கண்ட மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் துள் ளிக் குதித்தார்கள். பின் மாணவன் ஒருவன் எழுந்து "ரீச்சர்! எங்களுக்கு இவ்வளவு நாளும் கணிதப்பாடம் புதிய மாஸ்ரர் ஒருவர் தான் படிப்பித்தவர் அவர் பொல் லாத மாஸ்ரர். எங்களுக்கெல்லாம் அடிப்பார்" என்று குறை கூறத் தொடங்கினான்.

அதற்கு வதனா சிறிது கண்டிப்புடன் "நான் எத் தனை தடவை கூறியிருக்கிறேன். ஒருவரையும் குற் றம் சொல்லக்கூடாது என்று. நீங்கள் குழப்படி செய் யாமல் நல்ல பிள்ளைகளாக இருந்தால் யாரும் உங் களை அடிக்க மாட்டார்கள். பெரியவர்களை மதிக்க வேண்டும்.! என்ன?" என்று புத்திமதி கூறினாள். புதிய மாஸ்ரராம் யார் அந்தப் பொல்லாத மாஸ்ரர்? எனக்காக பாடம் கூட எடுத்திருக்கிறார். எனக்கு யாரும் சொல்ல வில்லையே என்று தனக்குள்ளே யோசித்துவிட்டுப் படிப்பிக்கத் தொடங்கினாள்.

நேரம் போனதே தெரியாமல் ஓடிக்கொண்டிருந் தது. பாடம் முடித்து அடுத்த வகுப்பு நோக்கி நடக்கத் தொடங்கிய வதனாவுடன் மாலதி ரீச்சரும் சேர்ந்து கொண் டாள். அப்போது எதிர் வகுப்பிலிருந்து வந்த அருணை வதனாவிற்கு அறிமுகம் செய்து வைத் தாள் மாலதி. "இவர் அருண் எங்கள் பாடசாலைக்குப் புதிதாக வந்திருக்கி றார். உன்னுடைய பாடம் நான் படிப்பிக்கிறவர் நீ வராது இருந்த போது கூட இவர் தான் உன் பிள்ளை களுக்கு பாடம் எடுத்தவர்" என்று கூறி முடித்தாள். அருணும் "ஹலோ" என்ற ஒற்றைச் சொல்லோடு நகர்ந்து சென்றான்.

வதனாவிற்குத் தலையே சுற்றுவது போல் இருந் தது. அவளையும் அறியாமலே கால்கள் இரண்டும் 'ஸ்ராவ் றூமை' நோக்கி விரைந்து சென்றது. அங்கி ருந்த கதிரை ஒன்றில் சாய்ந்து கொண்டாள் யார் முகத்தை இனிமேல் பார்க்கக் கூடாது என்று எண்ணினாளோ அவன் தான் அருண். வதனாவும் அருணும் சிறு வயதி லிருந்து ஒன்றாகப் படித்துப் பின் பல்கலைக் கழகம் ஒன்றாகச் சென்று கொட்டமடித்த அந்த நாட் களை அவளால் மறக்க முடியவில்லை. பின் ஒரு வரை ஒரு வர் புரிந்து கொண்டு காதல் என்ற மலரை பூக்க விட்டு கோபிக்காக திருமணமே செய்யாமல் வாழ்ந்து வருகிறாள்.

வதனாவின் அக்கா சாதனாவிற்கு ஆண் குழந்தை பிறந்த செய்தியைச் சொல்வதற்காக வீடு நோக்கி வந்த சாதனாவின் கணவர மீது எதிரே வந்த லொறி ஒன்று மோதி அந்த இடத்திலே பலியானார். இந்தச் செய்தியை அறிந்த சாதனாவும் தங்கையிடம் அந்தப் பச்சிளங் குழந்தையை ஒப்படைத்து விட்டு அவரும் கணவருடன் சென்றுவிட்டாள்.

அன்றிலிருந்து பெற்றோர் முகம் தெரியாத கோபி வதனாவையே தாயாகவும் தந்தையாகவும் நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறான். சாதனாவும் கணவரும் இறந்தபின் கோபியை ஒரு பச்சைக் குழந்தை. பாவம் என்று பரிதாபப் படுபவர்களை விட அந்தக் குழந்தை மீது பழி போடுபவர்கள் தான் அதிகமாக இருந்தார் கள். எங்கு திரும்பினாலும் இந்தக் குழந்தை ராசி தான் இரண்டு உயிரைக் கொன்று போட்டிருக்கு என்ற வாசகம் தான். வதனாவால் இவற்றை எல்லாம் தாங்க முடியாமல் இந்த ஊரையும் பிடிக்காது கோபி யைத் தூக்கிக்கொண்டு அருணுக்கும் நான் வேறு ஒருவரைத் திருமணம் செய்யப்போகிறேன். என்னை மறந்து விடுங்கள். நீங்களும் சந்தோஷமாக வேறு வாழ்க்கையைத் தேடிக்கொள்ளுங்கள் என்று ஒரு கடிதத்தை எழுதிப் போட்டுவிட்டு இந்த ஊருக்கு வந்தவள், தன் மகன்தான் கோபி என்றும் தன் கணவர் வெளியூரில் எங்கோ இருக்கிறார் என் றும் ஒரு பொய்யைக் கூறி ஊருக்காக போலி வாழ்க்கை வாழ்ந்து வருகிறாள்.

சட்டென்று ஏதோ நினைவு வந்தவளாய் தன் வகுப்பை நோக்கி நடந்தாள். தனக்குள் இருக்கும் மனச் சஞ்சலத்தை வெளியில் காட்டாது பாடத்தை கவனிக்கத் தொடங்கினாள். நேரம் பன்னிரண்டு ஆன தும் கோபியின் வகுப்புப் பிள்ளைகள் யாவரும் குய்யோ முறையோ என்று கத்திக்கொண்டு சென்று விட்டார் கள். கோபி மட்டும் ஏதோ தனியே விளையாடியபடி இருந்தான். இதனை அவதானித்த அருண் கோபி பக்கம் வந்து "இங்கு என்ன செய்கிறாய் இன்னும் ஏன் வீட்டுக்குப் போகவில்லை" என்று கேட்டான்.

கோபியும் "நான் எங்க அம்மாவுடன் தான் வீட்டிற் குப் போவேன். அம்மாவிற்கு இன்னும் பாடசாலை விடவில்லையே" என்று மழலை மொழியில் கூறினான். கோபியின் பேச்சு அருணுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. யாரோ ஒரு ரீச்சரின் மகன் தான் கோபி என்பதைப் புரிந்து கொண்டவன் கோபியின் தலையைத் தடவி "யாரப்பா உன் அம்மா? அம்மாவிற்கு பெயர் என்ன? என்று ஆவலோடு கேட்டான். "வதனா ரீச்சர்தான் எங்க அம்மா" என்று பளிச் சென்று பதில் கூறிய கோபியைப் பார்த்து ஒரு கணம் சிந்தித்த அருண் வதனாவின் மகனா? அவளைப் போலவே துடுக்காகப் பேசுகிறானே! என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டவன் வதனாவின் குடும்பத்தைப் பற்றி அறியும் ஆவலில் "உங்க வீடு ரொம்பத் தூரமோ?" என்று கேட்டான். பின் "அப்பா என்ன செய்கிறார்? அப்பாவின் பெயர் என்ன?" என்று கேட்டான். எல்லா வற்றுக்கும் தெளிவாகப் பதில் சொன்ன கோபி அப்பாவைப் பற்றிக் கேட்டதும் ரொம்ப சோர்வோடு "எனக்கு அப் பாவை பற்றித் தெரியாது அம்மாவை மட்டும் தான் தெரியும். எங்க வீட்டில் நானும் அம்மாவும் மட்டும் தான் இருக்கிறோம்" என்று கூறியவனை அன்போடு அணைத்த அருண் குழப்ப மடைந்தான். பின் அந்த சிந்தனையிலிருந்து



அவனைத் திசை திருப்புவதற்காக "நீ நன்றாகப் படிப்பாயா நல்லபிள்ளை என்று அறிந்தேன். என்ற அவன் முதகைத் தட்டிப் பாராட்டிவிட்டு நகர்ந்து சென்றான். அருண் வதனாவின் வாழ்க் கையில் ஏதோ சோகம் இருப் பதைப் புரிந்து கொண்டான்.

அன்று இரவு கோபி யைப் படுக்கையில் வளர்த்தி விட்டுப் படுத்திருந்த வதனா விற்கு உறக்கம் வர மறுத்தது. முகட்டை வெறித்துப் பார்த் தபடி நான் செய்வது சரியா? பிழையா? என்று தன்னைத் தானே கேட்டுக் குழம்பிக் கொண்டிருந்தாள். ஒரு நாளும் இல்லாது இன்று தன் அப்பா யார்? எங்கு இருக் கிறார் என்று கேட்டு விட்டானே! நான் அவனுடன் அன்பாக இல் லையா? ஏன் இப்படிக் கேட்டான் என்று பலவாறு சிந்தித்தாள். கோபி யின் இந்தக் கேள்விகளுக் குப் பதில் சொல்ல முடியாமல் தவித்த வதனா விற்கு நெஞ்சில் ஒரு வலி ஏற்பட்டது போல் இருந்தது. ஏதோ குழந்தையை சமாளித் தவளாய் கோபிக் கண்ணா பிள்ளைக்கு அம்மா நான் இருக்கிறேன் தானே. கோபி அம்மா பிள்ளை தானே. இப்படி ஒன்றும் கேட்கக் கூடாது. என்று அன்போடும் ஆதரவோடும் கூறி ஒரு வாறு தப்பித்துக் கொண்டாள். அன்று காலை அருணை சந்தித்த நேரம் தொடங்கி அவள் மனமே அவளுக்குப் பாரமாக இருந்தது. ஆறு வருடங்களிற்குப் பிறகு சந்தித்தும் அவருடன் ஒரு சொல் கூட பேச முடிய வில்லையே. அவர் எங்கு இருக்கிறார் திருமணம் செய்து விட்டாரா? என்று எல்லாவற்றையும் அறிய ஆவலாக இருந்தது. ஆனா லும் தன்மீது உள்ள குற்ற உணர்வு அவருடன் பேசவோ அவன் முகத்தைப் பார்க்கவோ தடுத்துக் கொண்டி ருந்தது.

அருணும் கோபி மூலம் வதனாவின் வாழ்க் கையில் ஏதோ மர்மம் இருப்பதைப் புரிந்துகொண் டான். நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. வதனாவும் விலகி விலகி நடந்தாள். கண்டபடி லீவு எடுத்து வீட் டில் நின்று கொண்டிருந்தாள். அன்று மாலை ஏதோ முடிவிற்கு வந்த அருண் வதனா வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அருணைக் கண்ட வதனா அதிர்ந்து நின்றாள். அவள் அழைப்பையும் பார்க்காது வீட்டினுள்ளே சென்று சோபாவில் அமர்ந்து கொண்டான். "வதனா என்னை எதிர்பார்த்திருக்க மாட்டாய் இல்லையா?" என்று பேச்சை ஆரம்பித்தவன் "எங்கே உன் வீட்டுக் காரர் அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைக்க மாட்டாயா?" என்று விஷமத்துடன் கேட்டான். வதனா மௌனத்துடனும் ஒரு குற்ற உணர்வுடனும் நின்றிருந்தாள். மீண்டும் அருணே பேசினான். "ஏ நீ எப்படி அறிமுகப்படுத்து வாய்? அவன் தான் உன்னை விட்டு ஓடிப்போய் விட்டானே" என்று மீண்டும் ஆத்திரம் வரும் படியாகப் பேசினான். வதனா அமைதியை இழந்த வளாய் "என்ன அருண் ஏன் இப்படி வார்த்தைகளால் என் னைக் கொல்லுறீங்கள்" என்று கத்தினாள். "வதனா உன்னை நான் சாகடிக்க வரவில்லை. நான் இந்த [illegible] ஒரு நாள் ஒரு வார்த்தை என்னுடன் பேசியிருப்பாயா? ஏதோ என்னைக் கண்டதும் விலகி விலகிச் செல்கிறாய். அதுதான் உன்னிடம் இப்படிப் பேசினேன். மீண்டும் உன்னை இங்கு சந்திப்பேன் என்று கனவில் கூட நினைக்கவில்லை. இவ்வளவு நாளும் நீ எங்கு இருக் கிறாய் என்று அறியாமல் உன்னையே நினைத்து வாழ்ந்து கொண்டிருந்தேன். திடீரென்று என்னை ஏன் மறந்தாய் என்பது கூட எனக்குத் தெரியாது. ஆனாலும் நீ எங்கோ சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்று நினைத்து சந்தோஷப்படுவேன். ஆனால் இங்கு வந்த பிறகு தான் உன் வாழ்க்கையில் ஒரு சங்கடம் இருப்பதைப் புரிந்து கொண்டேன். எங்கே உன் கண வர் ஏன் உன் கணவர் உன்னை விட்டுப் பிரிந்து சென் றார்? உங்களுக்குள் அப்படி என்ன பிரச்சினை 'பிளீஸ்' என்ன பிரச்சினை என்ற உண்மையைச் சொல்லி விடு" என்று கெஞ்சினான். வதனா ஒன்றும் பேசாது அழுது கொண்டேயிருந்தாள். அருண் மீண்டும் "விடு வதனா இல்லை, நான் ஏதும் தப்பாகப் பேசியிருந்தால் என்னை மன்னித்து விடு உன் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் தான் கேட்கிறேன். இத்தனை காலமும் மாறாத அன்புடன் வாழ்ந்த என்னை நம்ப மாட்டாயா?" என்று வற்புறுத்தி னான். இனியும் அவளால் மௌனமாக இருக்க முடி யாதவளாய் எல்லா வற்றையும் ஒன்றும் விடாமல் கூறி முடித்தாள்.

வதனாவின் கதை அருணுக்கு ஆச்சரியத்தையும் வேதனையையும் கொடுத்தது. "உண்மை தெரியாமல் ஏதேதோ பேசிவிட்டேன். வதனா என்னை மன்னித்து விடு" என்று மன்னிப்புக் கேட்டான். வதனாவும் "நான் தான் உங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று மன்னிப்புக் கேட்டாள். "வதனா இவ்வளவு சோகத்தை மனசுக்குள் வைத்து உன்னையே நீ பழிகாரியாக்கி விட்டு வாழ்ந்திருக்கிறாயே. நீ என்னைப் புரிந்து கொண் டது இவ்வளவு தானா? இனியும் உன்னைத் தனியே விட மாட்டேன். இனிமேல் என்ன துன்பம் என்றாலும் ஆளுக்குப் பாதியாகத்தான் இருக்கும். இவ்வளவு நாளும் கோபிக்கு தாயில்லாக் குறையை நீ தீர்த்து வைத்தாய். இனித் தந்தை இல்லாக் குறையை நான் தீர்த்து வைப்பேன். கோபிக்கண்ணாவிற்குத் தந்தை யாகவும் தாயாகவும் இறுதிவரை நாங்களாகவே இருந்து அவனின் எதிர்காலத்தைச் சிறப்பித்துக் காட்டுவோம் என்று உறுதியுடன் வதனாவிற்கு ஆறுதல் கூறினான்.

வதனாவும் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "அருண் உங்கள் நல்ல மனதைப் புரிந்து கொள்ள முடியாத பாவியாய் இருந்துவிட்டேன். கோபி அநாதையாகி விடக்கூடாது என்பதற்காக, என்து சுயநலத்திற்காக உங்கள் உண்மை அன்பை மறந்து அப்படி நடந்து விட்டேன். அப்போ இருந்த சூழ்நிலை வேறு என்னை அப்படி நடக்க வைத்து விட்டது. அது தான் அப்படி நடந்து விட்டேன்" என்று தனது தப்பை உணர்ந்து மீண்டும் மன்னிப்புக் கேட்டாள். அத்துடன் அருணும் இத்தனை காலம் மாறாத அன்புடன் தன்னை நினைத்து வாழ்ந்ததை எண்ணிப் பெருமைப் பட்டாள்.

**சற்குணசிங்கம் நளாஜினி**
**சுன்னாகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

25

நா.யோகேந்திரநாதன்

இளையவன் பனையில் ஏற ஆரம்பித்தான். அவன் ஒவ்வொரு அடியாகப் பனையின் வட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்த போதிலும் சொர்ணம் அவனிடம் கடிதத்தை நீட்டிய போது அவனுள் ஏற்பட்ட அதிர்வுணர்விலிருந்து விடுபட முடியவில்லை. அவள் தன்னுடன் படிக்கும் ஒருவனுக்குக் கடிதம் அனுப்புகிறாள் என்று புரிந்து கொண்ட அந்தக் கணத்தில் ஏனோ அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை. சொர்ணம் இன்னொரு இளைஞனை விரும்புவாள் என்றால் அதைத் தன்னால் தாங்க முடியாது என்பது அவனுக்கு இப்போது புரிய ஆரம்பித்துவிட்டது. அப்படியானால் தான் சொர்ணத்தை விரும்புகிறானா என்ற கேள்வி அவனையறியாமலே அவனுள் எழுந்தது. ஆனால் சொர்ணத்துக்கும் தனக்கும் திருமணம் என்பது கனவில் கூடச் சாத்தியமில்லை என்பதை ஏற்கனவே அவன் திட்டவட்டமாக அறிந்து வைத்திருந்தான்.

அந்த நிலையில் அவள் யாரை விரும்பினாலும் தனக்கென்ன என



ஏன் தன்னால் இருக்க முடியவில்லை என்பதையும் அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவனின் மனம் ஏதேதோ எண்ணங்களில் குழம்பிக் கொண்டிருந்தது.

அவன் வழமையை விட அவதானமாக ஓலையைப் பிடித்து ஏறிக் கொண்டான். முட்டியைக் கழற்றி தான் கொண்டு சென்ற தரைக் குடுவையில் கள்ளை ஊற்றினான். பாளையை சீவி விட்டு கத்தியைக் கூட்டுக்குள் வைக்க உயர்த்திய போது அதன் நுனி மணிக்கட்டுக்கு அருகில் கையில் கீறி விட்டது. இரத்தம் பெருக ஆரம்பித்தது. அவசரமவசரமாக முட்டியைக் கட்டி விட்டு இறங்க ஆரம்பித்தான்.

அவன் கீழே இறங்கி வந்த போது இடது கை இரத்தத்தில் தோய்ந்து விட்டது. கிணற்றடியிருந்து வாளியுடன் வந்த சீதேவிப்பாட்டி கையிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்டு விட்டாள்.

"என்னடா இது. கையை வெட்டிப் போட்டியே.. பொறடா கோப்பித்தூள் கொண்டு வாறன்" என்று விட்டு கிழவி பதட்டத்துடன் சமையலறையை நோக்கி ஓடினாள். கிழவியின் சத்தத்தைக் கேட்டு வெளியே வந்த சொர்ணம் அவன் கையிலிருந்து இரத்தம் வழிந்து நிலத்தில் விழுந்ததைக் கண்டதும் பயந்தே போய் விட்டாள்.

ஒரு பழைய வெள்ளைத் துணியுடனும் கோப்பித்தூள் பேணியுடனும் ஓடி வந்த கிழவி "கையை நீட்டடா" என்றாள்.

இளையவன் காயம் மேற்பக்கம் தெரியும்படி முன் கையை உயர்த்தினான். கிழவி கோப்பிப் போத்தலோடு தன் கை அவன் கையில் பட்டு விடாமல் போத்தலை உயர்த்திப் பிடித்துக் கோப்பியைக் கொட்டினாள். பின்பு வெள்ளைத் துணியை நீட்டி "இதாலை காயத்தைக் கட்டு" என்றாள்.

"அவன் ஒற்றைக் கையாலை என்னண்டனை மற்றக் கையிலை கட்டுறது?" எனக் கேட்டவாறு துணியைப் பறித்து வாளிக்குள் தோய்த்தாள். பின் வாளிக்குள் இருந்த நீரில் சிறிதைக் கையால் அள்ளி கோப்பி போட்ட இடத்தை விட மற்றப்பகுதியில் இருந்த இரத்தத்தை தன் கையாலையே கழுவினாள்.

கிழவி பதட்டத்துடன் "அடியே நீ என்னடி செய்யிறாய்?" எனக் கேட்டாள். சொர்ணம் "நீ சும்மா இரு. இரத்தம் ஓடிச் சாகவிடச் சொல்லுறியே" என்று ஒரு துண்டை நான்காக மடித்து அதன் மேல் சிறிது கோப்பியைக் கொட்டி விட்டு அதைக் காயத்தில் வைத்து வேறு ஒரு துணியால் கட்டினாள்.

சீதேவிக் கிழவியின் முறாய்ப்பை அவள் பொருட்படுத்தவில்லை. சொர்ணத்தின் முதுகில் நாலு சாத்து சாத்த வேண்டும் போல் ஆத்திரம் கிழவிக்கு வந்த போது அதை அடக்கிக் கொண்டாள்.

சொர்ணம் காயத்தைக் கட்டி முடித்து விட்டு "காயத்துக்கு தையல் போட வேணும் போலைக் கிடக்குது நேரை ஆஸ்பத்திரிக்குப் போ" என்றாள்.

"சரி" எனச் சொல்லி விட்டுப் புறப்பட்டான் இளையவன். சொர்ணம் தன் கையாலேயே தன் காயத்தைத் தொட்டுக் கழுவியதும் கட்டுப் போட்டு விட்டதும் அவள் தன் மேல் கொண்ட அன்பின் வெளிப்பாடு என்றே அவனுக்குத் தோன்றியது. தன் கையிலிருந்து ஒழுகிய இரத்தத்தைக் கண்டதும் அவளில் ஏற்பட்ட தவிப்பை அவனால் மறக்கவே முடியவில்லை. ஏதோ ஒரு பெரும் ஆபத்தை நோக்கித் தான் சறுக்குப்பட்டுக் கொண்டு செல்வதையும் அவன் ஒரு முறை நினைவு படுத்திக் கொண்டான். உடனடியாகவே தான் அவள் மேல் வைக்கும் அன்போ, அவள் தன் மேல் வைக்கும் அன்போ அவளுக்கு ஒரு கெட்ட பெயரோ துன்பமோ வராதளவுக்கு அவதானமாக இருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டான்.

இப்போது அவனின் மனக் குழப்பங்கள் மெல்லத் தெளிவடைவது போல அவனுக்குத் தோன்றியது.

ஆனால் இளையவன் சங்கடப் படலையைக் கடந்ததுமே அங்கே ஒரு பூகம்பம் வெடித்தது.

"இப்பவே இந்தக் கூத்தாடுறனி உன்னை டாக்குத்தருக்குப் படிக்கவிட்டால் என்ன ஆட்டமெல்லாம் ஆடுவாய்?" எனச் சொர்ணத்தின் மேல் சீறி விழுந்தாள் சீதேவிப்பாட்டி.

"இப்ப என்ன கூத்தாடிப் போட்டன் எண்டு துள்ளுறாய்?" எனத் திருப்பிப் பாய்ந்தாள் சொர்ணம்.

"ஓமெடி ஓ.. ஒரு கீழ்சாதிக்காரன்ரை கையைத் தொட்டுக் கழுவி காயத்துக்குக் கட்டுப் போட்டு தொண்டு செய்யிற அளவுக்கு நீ வந்திட்டாய். அவன் ஆர் நீ ஆர்?"

"அவனும் மனுஷன். நானும் மனுஷப் பிறவி. ஆபத்தில மனுஷருக்கு மனுஷர் உதவி செய்யிறது தான் மனுஷத்தன்மை என்றாள் சொர்ணம் மிகவும் இறுக்கமாகவே" கிழவிக்குக் கோபம் வந்து விட்டது. அவள் "அதுகள் அதுகளை வைக்க வேண்டிய இடத்திலை வைக்க வேணும். இல்லாட்டில் எங்கடை தோளில தான் ஏறிக் குந்துங்கள்" எனக் கொதித்தாள்.

"உன்ர மகன் சின்னனை வைக்க வேண்டிய இடத்திலையே வைச்சிருக்கிறார்.?" எனக் கேட்க வேண்டும் போல் நா துடித்தது. ஆனால் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

எனினும் "உன்னைப் போல் வீடு, கோவில், குளம், செத்த வீடு, கலியாண வீடு எண்டு ஒரு வட்டத்துக்கை கிடந்து என்னால சுத்த முடியாது என்னைப்படிக்க விடு?" என்று சொர்ணம் சொல்லி விட்டு பதிலை எதிர்பாராமலே அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

"ஓ உன்னைப் படிக்க விட கண்டதுகள் நிண்டதுகளை நடு வீட்டுக்கை கொண்டு வந்து வைச்சு வைத்தியம் செய்வாய். நாங்களும் ஓமெண்டு தலையாட்டவோ. போடி போ. போய் ஆட்டை அவிட்டுக் கட்டு" என்று விட்டு வாளித் தண்ணீரைக் கவிழ்த்து ஊற்றினாள் கிழவி.

இளையவனின் கையில் கட்டிய துணியை வாளித் தண்ணீரில் நனைத்ததற்காகவே கிழவி நீரை வெளியே ஊற்றினாள் என்பதைப் புரிந்து கொண்ட போது சொர்ணத்திற்குக் கோபம் கோபமாக வந்தது. எனினும், அவள் எதுவுமே பேசவில்லை. கிழவியுடன் இப்படியான விஷயங்களைப் பேசுவதில்லையென அவள் அந்தக் கணத்திலேயே முடிவு செய்து கொண்டாள். ஆனால் கிழவி தன் போக்குக்கு எக்காலமும் வரமாட்டாள் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு தூரம் கிழவியின் போக்குக்கு தன்னாலும் போக முடியாது என்பதை அவள் மறக்கவில்லை.

அன்று மாலை இளையவன் பனை சீவ வரவில்லை. அவனிடம் போய் விசாரிக்க ஏதோ ஒரு உணர்வு அவளைத் தடுத்தது. மாலையில் சின்னன் ஓலை கிழிக்க வரும் போது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என முடிவெடுத்துக் கொண்டாள்.

சின்னன் கொக்கைத்தடியை எடுத்துக் கொண்டு வேலிக் கரைக்குப் போன போது பின்னால் சென்ற சொர்ணம் "என்ன சின்னன் இளையவன் ஆஸ்பத்திரிக்குப் போனவனே...?" எனக் கேட்டாள்.

சின்னன் ஒரு மாதிரியாக சொர்ணத்தின் முகத்தைப் பார்த்துவிட்டு, 'ஓ போனது. நாலு தையல். மாடு எங்கையோ வாய்பாத்துக் கொண்டு பாளையைச் சீவியிருக்குது. கை பிளந்து போட்டுது" என்றாள்.

இளையவனை மாடு என்று பேசியது சொர்ணத்துக்குப் பிடிக்கவில்லை என்றாலும் அவனுக்கு நாலு தையல் என்பது தான் முக்கியமாகப்பட்டது. என்றாலும் "என்ன மருமேனை மாடு எண்டு பேசுறாய்?" எனக் கேட்டு வைத்தாள்.

"பின்னை என்ன. எங்கடை இரண்டு குடும்பத்துக்கும் ஒரு ஆம்பிளைப் பிள்ளை. என்ரை மனுஷன் பனையாலை விழுந்து செத்ததாலை நான் தெருவிலை நிக்கிறன். அவனுக்கு ஏதுமெண்டால் தாங்குவமே..?"

சின்னன் உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டே தான் அப்படிக் கூறினாள். அவள் தான் தெருவில நிற்பதாகக் கூறியதற்கு வேறு பல அர்த்தங்கள் இருப்பதாகவே சொர்ணத்துக்கு தோன்றியது.

"சரி சரி கையை நனைக்க வேண்டாமெண்டு சொல்லு" என்று விட்டு போக முயன்ற அவளை சின்னனின் "பிள்ளை!" என்ற வார்த்தை தடுத்து நிறுத்தியது.

சொர்ணம் நின்று திரும்பிப்பார்த்தாள்.

"பிள்ளை நீங்கள் நேற்று பள்ளிக் கூடத்திலை செய்தது பெரிய பிழை" என்றாள் சின்னன்.

சொர்ணத்துக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன செய்தனான்?" எனக் கேட்டாள் அவள்.

"உங்கடை சாப்பாட்டிலை முத்துக்கு குடுத்தியளாம்.. அதற்கு ஒண்டுமில்லை. நாங்கள் உங்களட்டை தின்டு வளந்தனாங்கள். ஆனால்.." எனக் கூறி விட்டு இடை நிறுத்தினாள் சின்னன்.

"ஆனால் என்ன சொல்லன்?"

"உங்கடை சாப்பாட்டுப் பெட்டியின்ரை தட்டிலை போட்டுக் குடுத்து சாப்பிடச் சொல்லி வில்லங்கப் படுத்தினியளாம்" தயக்கத்துடன் சொல்லி முடித்தாள்.

"ஓ அதுக்கென்ன இப்ப?" சொர்ணம் சற்று கோபமாய் கேட்டாள். சின்னன் ஒரு மெல்லிய அச்சத்துடன் "ஐயாவோ ஆச்சியோ அறிஞ்சால் நாங்கள் குடியிருந்த பாடு இல்லை பிள்ளை" என்றாள்.

"வேறை சில விஷயங்களுக்கு சாதி இல்லை. சாப்பாட்டுத் தட்டிலை தொட்டால் மட்டும் சாதியே..." எனக் கேட்க வாயை உன்னிய சொர்ணம் சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டாள்.

சில வினாடிகளில் சொர்ணம் நிதானத்துக்கு வந்தவளாக,

"சின்னன் நாங்கள் வேதப்பள்ளிக்கூடத்திலை படிக்கிறனாங்கள், எங்களுக்குச் சாதி பார்க்கக் கூடாது எண்டுதான் சொல்லித்தாறவை விளங்குதே?" என்றாள்.

"பிள்ளை உது நல்லதுக்கில்லை.." என்றாள் பயத்துடன் சின்னன்.

"நல்லதோ கெட்டதோ நான் அப்படித்தான் நடப்பன்" என்றாள் சொர்ணம் உறுதியாக.

சின்னன் அதிர்ந்து போய் நின்றாள். ஏதோ ஒரு ஆபத்தின் அறிகுறி தென்படுவது போலவே அவளுக்குத் தோன்றியது.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## உயிர் கொடுத்த உத்தமியே!

கருவறையில் உயிர் கொடுத்து
பருவ வயதில் பக்குவம் பார்த்து
உண்ணாமல் உறங்காமல்
உழைத்திடும் அன்னையே

காடு மேடெல்லாம்
கால் வலிக்க நடந்து
உன் பயலின் உயிர்காத்த
உத்தமியே அன்னையே!

நடுக்காட்டின் இருளினிலே
சுடுகாட்டின் அருகினிலே
திசை மாறித் திண்டாடிய போதும்
திகிலடையாத வீரத் தாயே!

காலம் செய்த விளையாட்டில்
காட்டினிலே விசர் தீண்டியபோதும்
பதறாமல் கடவுளின்
பலத்தோடு துணிந்து நின்ற அன்னையே!

சிறைக்குள் இருந்த போதும்
சிதறவில்லை உம் முறை
அஞ்சாத நெஞ்சத்துடன்
அணைத்திட்ட அன்னையே வாழ்க!

-வேல் மகள்-
புளியம்பொக்கனை

## யுத்தத்தின் வெற்றி விழா

குண்டுகள் வாங்கிய
இதயம்
உயிரைக் கொடுத்த
தியாகம்.

எதை இழக்கவில்லை
எல்லாவற்றையும் இழந்தோம்.
உடல்- உடமை
மானம்- மண்..
மற்றவையெல்லாம்
மனதுக்குள்ளேயே...!

முடிந்துவிட்ட யுத்தம்
முடியாத சோகம்
என் வீடு-காணிக்கு
இராணுவம் உரிமை
கோருகிறது.

அகதி முகாம்களில்
அடைந்து கிடக்கிறோம்
அரவணைக்க யாருமில்லை.
வெற்றி விழா கொண்டாட்டம்
விமர்சையாய்....
அடிபட்ட எங்களுக்கு
பூஜ்யம் தான்
சந்தோம்...

க. பிரசன்னா
புளும்பீல்ட் டிவிசன், மஸ்கெலியா.

## பொதுவாய்த் தெரியும் உண்மையிது

ஏறிப் போகும்
எரிபொருள் விலைகள்
இறங்கிக் கொள்ள
வழி இல்லையா?

ஏறாக் குறிக்கும்
மின்சாரக் கட்டணத்தை
கூனிக் குறுக்க
வழி இல்லையா?

படி தாண்டிப் போகும்
பாவனையின் விலையை
பாமர மக்கள் மனம் குளிர
சீரான விலைக்கு கொடுப்பதற்கு
வெளிச்சம் வந்து
தோன்றலையா?

எரிபொருள் விலைகள்
ஏறும் போது மற்ற
எல்லாப் பொருளும் உயருமென்று
புரியாதா? புரிந்திருந்தால்
விரைவாய் ஆராய்ந்து வேறு ஒரு
பரிகாரம் ஏதும் செய்யலாமே?

-சேனையூரான்-
மூதூர் கிழக்கு



## கருவறை விண்ணப்பம்

கர்ப்பத்தில் இருந்து ஓர் குரல்
காதருகில் சம்மட்டியாய்!
"அம்மா அவதரிக்க மறுக்கிறேன்"
அழுகுரல் ஒலிக்கிறது!

"தாய்ப்பால் வேண்டாம்
கள்ளிப்பால் கொடுங்கள்......"
உயிரைத் தழைக்க அல்ல
தறிக்கப்பட

வெறி கொண்ட உலகத்தில் - என்
விதியென்று பிறந்து விட்டால்!
காமவெறி கொண்ட கயவர்க்கு
நான்- விருந்தல்லோ?!!

"நெறி கெட்டலையும் மனிதர் கூட்டம்
மதி பெறும் வரையில் - நான்
ஜனனிக்கப் போவதில்லை!"

"அவதரிக்க மறுக்கிறேன்"
அழுகுரல் ஒலிக்கிறது....!

க. செல்வமலர்
விநாயகபுரம்-02, திருக்கோவில்.

## துளிர் விடுமா........?

உணர்வுகளில்
உயிராய்
உயிர்த்தெழ முடியாத
உண்மைகள்
உறங்கிக் கிடக்கின்றன
உணர்விருந்தும்
ஊமையாகிப் போன
உள்ளங்களைப் போல
மண்ணுக்குள் புதைக்கப்பட்ட
விதைகள்
மறுபடியும் துளிர்விடுமா?
மீண்டுமொரு
வசந்தகாலத்துக்காய்...




திருவையாறூர்
கே.ஜனுப்பிரியா.

## அஞ்ஞாத வாசம்

துரோகங்களின்
தாக்குதல்கள் தொடர்கின்றன.
விண்மீன்கள்
விபச்சாரம் செய்கின்றன.
நிலவு கண்களை
நெருப்பு வைத்து
கொல்கின்றது.
புதுப்புது பாவங்களால்
பூமி அன்னை
பொலிவிழக்கிறாள்.
தந்தை மகளை
உண்கிறான்.
பாட்டனுக்கு பேத்தி
பகளை பாகிறாள்.
விடியலைப் பாடுபவன்
விரோதியாகிறான்.
நீதி தேவதை
அஞ்ஞாத வாசம்
செய்கிறாள்.
நிஜத்தைத் தேடி
அலைகின்றது
இந்தக் கண்ணனின்
புல்லாங்குழல்.

நெடுந்தீவு. க. யோகேஸ்வரன்
யாழ். பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நாய்களுக்கு ரி.வி சனல்

நாய் இனம் மனிதனோடு நீண்ட நெடுங்காலமாய் ஒன்றி வாழ்ந்து வருகின்ற பிராணி. உலகில் உள்ள மனிதர்களில் மிகப்பெரும்பாலானோரின் செல்லப் பிராணியாகவும் அது வாழ்கிறது. அப்படிப் பட்ட பெருமைகளை உடைய நாய்களுக்கு என சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்கும் புதிய ரி.வி. சனல் ஒன்று அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாய்களை வளர்ப்பது, அவற்றைப் பராமரிப்பது போன்ற விஷயங்கள் குறித்து, நாய் வளர்ப்போர் அறிந்துகொள்ளும் வகையில் நாய் ரி.வி.சனல் தொடங்கப்பட்டுள்ளது.

விசேஷமாக நாய்கள் டி.வி. காட்சிகளைக் கண்டு இன்புறும் விதமாக ஒலி, ஓசை, வண்ணங்களில் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு தினமும் 8 மணி நேரம் ஒளிபரப்பப்படுமாம். வர்த்தக நோக்கில் அல்லாமலும், ஏற்கெனவே ஒளிபரப்பிய நிகழ்ச்சிகள் மீண்டும் இடம்பெறாத வகையிலும் தொடர்ந்து புதுப்புது நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும். நாய்கள் குறித்து அனுப்பப்படும் கடிதங்களில் உள்ள கருத்துக்களுக்கு ஏற்பவும் நிகழ்ச்சிகளில் மாற்றம் செய்து ஒளிபரப்பப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

அமெரிக்காவில் தொடங்கப்பட்டுள்ள இந்த நாய் ரி.வி. சனலுக்கு நல்ல வரவேற்பு உள்ளதாம். இந்த சனலுக்கு இப்போது 10 லட்சம் வாடிக்கையாளர்கள் சேர்ந்துள்ளனராம். வாடிக்கையாளர்களில் நாய்களும் அடக்கமோ என்னவோ? நாய்களுக்கே வெளிச்சம்.

# தொழில் வாய்ப்பை வெற்றிகொள்ள...

பெரும்பாலான சமயங்களில் நேர்முகத் தேர்வில் தோற்பதற்குக் காரணம் நம் தயாரிப்பின்மைதான். நேர்முகத் தேர்வில் வெற்றியடைய சமயோசிதம் எவ்வளவு முக்கியமோ, அதே அளவு தயாரிப்பும் அவசியம்.

உங்கள் நேர்முகத் தேர்வு முடிவை பாதிப்பதில் ஆள் பாதி, ஆடை பாதி என்ற பழமொழி நூற்றுக்கு நூறு நிஜம். சரியோ, தவறோ நிறைய சமயங்களில் நாம் அணிந்திருக்கிற உடை, ஹேயர் ஸ்டைல் போன்றவைதான் நேர்முகத்தேர்வு நடத்துபவர் நம் மீது வைக்கப் போகும் முதல் அபிப்ராயத்தைத் தீர்மானிக்கிற விடயங்களாக இருக்கிறது. எனவே, நேர்முகத் தேர்வுக்குப் போகும்போது நம் வெளித்தோற்றம், நடை உடை போன்றவற்றிலும் அக்கறை எடுத்துக் கொள்வது அவசியம்.

நேர்முகத்தேர்வுக்கு பொதுவாக வெளிர்நிற அல்லது மெல்லிய கோடிட்ட முழுக்கைச் சட்டையும், டார்க் நிற கால் சட்டையும் அணிவதே சிறந்தது. சட்டை நிறத்தோடு சேரும் டை இருந்தால் அணியலாம். மற்றும் இடுப்புப் பட்டி, சப்பாத்து அவசியம்.

நேர்முகத்தேர்வுக்குச் செல்லும்போது ஆண்கள் செயின், தோடு வேறுபடுத்திக் காட்டும் அணிகலன்களை தவிர்க்கவும். சவரம் செய்யப்பட்ட முகமும், படிய வாரிய சிகையும், உங்களுக்கு நல்ல மதிப்பைத் தேடித் தரும்.

பெண்கள் எமது கலாசார உடைகளையோ, கொட்டன் புடவை, சுடிதாரையோ அணியலாம். நீளமாகத் தொங்கும் காதணி, கண்ணைப் பறிக்கும் பளபள நகைகள், உடை அலங்காரங்களைத் தவிர்க்கவும்.

இருபாலினரும் மூக்கை துளைக்காத மென்மையான ஃபர்பியூம் உபயோகிப்பது நல்லது. இந்த சின்னச் சின்ன விடயங்களில் தவறுவது பெரிய பாதிப்பைத் தரலாம்.

சரி, இதில் எல்லாம் சரியாக இருந்து விட்டால் வேலை கிடைத்துவிடுமா? கிடைக்காது. வேலைக்கான வாய்ப்பை தக்கவைத்துக்கொள்ள, மேலும் சில தயாரிப்புகள் தேவை.

நேர்முகத்தேர்வுக்கு முன், கடந்த மாதத்தில் நடந்த முக்கியமான உலக பொருளாதார, விளையாட்டு, அரசியல், இலக்கிய நிகழ்வுகளைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் துறைச் சார்ந்த வியங்களில் தயார் செய்யும்போது புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்களை தெரிந்து வைத்திருப்பது அவசியம்.

நேர்முகத்தேர்வுக்கு போகும்போது கண்டிப்பாக உங்களின் திறமைகளை நிரூபிக்கக்கூடிய சான்றிதழ்கள், வெற்றுத்தாள்கள், நோட்புக், பேனா போன்றவற்றை எடுத்துச் செல்லுங்கள்.

ஒருசில பொதுவான கேள்விகளுக்கு எப்படி தயார் செய்வது என்பதைப் பார்ப்போம்.

1. உங்களைப் பற்றி சொல்லுங்கள்?

உங்களைப் பற்றி சுருக்கமான அறிமுகம் தந்தால் போதும். உங்கள் கல்விப் பின்னணி, உங்கள் நற்குணங்கள், சாதனைகள் போன்றவற்றை இரண்டு, மூன்று வரிகளுக்கு மேற்படாமல் சொல்லவும். உங்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை தவிர்க்கவும். சில சமயம் உங்கள் சுய அறிமுகத்தில் இருந்து மேலும் கேள்விகள் கேட்கப்படலாம். அதற்கும் தயாராக இருங்கள்.

2. உங்கள் வாழ்க்கையின் குறிக்கோள்/ லட்சியம்?

உங்களுக்குத் தெளிவும் திட்டமிடும் குணமும் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளவே இந்த கேள்வி. அடுத்த ஐந்து வருடத்தில் நீங்கள் அடைய விரும்பும் பதவி, கற்றுக்கொள்ள விரும்பும் புதிய திறன்கள், வாழ்க்கையிலும் வேலையிலும் நீங்கள் சாதிக்க விரும்பும் குறிக்கோள்களைப் பற்றி சுருக்கமாக எடுத்துச் சொல்லுங்கள். இந்த லட்சியங்கள் உயர்வானதாகவும், அதேசமயம் அடையக் கூடியதாகவும் இருப்பது அவசியம்.

3. இந்த வேலையை நீங்கள் ஏன் தெரிவுசெய்தீர்கள்?

உங்கள் தனித்திறன்களும், கல்விப் பின்புலத்தையும், முன் அனுபவத்தையும் எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் முந்தைய சாதனைகளுக்கு காரணமாக இருந்த விடாமுயற்சி, அறிவுத்திறன், கடின உழைப்பு போன்றவை உங்கள் புதிய வேலையிலும் பிரதிபலிக்கும் என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.

4. பழைய வேலையைவிட்டு விலகிய காரணம்?

ஒருபோதும் சம்பளத்தையோ, தனிப்பட்ட மனிதர்களையோ குற்றம் சாட்டாதீர்கள். வளர்வதற்கான வாய்ப்பில்லை; உங்கள் திறன்களை அங்கு முழுமையாக பயன்படுத்த இயலாமைக்குரிய காரணங்களைக் கூறலாம்.

5. நீங்கள் எதிர்பார்க்கும் சம்பளம் என்ன?

இதுபோன்ற வேலைக்கும் பதவிக்கும் நல்ல நிறுவனங்கள் தரும் சம்பளம் என்ன என்பதை முன்பே தெரிந்துகொள்ளுங்கள். அத்துடன் உங்களின் ஆளுமைக்கு கேற்ப கேட்பது சிறந்தது. எந்த சூழ்நிலையிலும் இந்த நேர்முகத்தேர்வு ஒரு வாழ்வா, சாவா சூழ்நிலை என்பதைப் போல காட்டிக்கொள்ளவேண்டாம்.



# இப்படியும் திருமண சம்பிரதாயங்கள்

### மரம் நடும் மாப்பிள்ளை

திருமணம் முடிந்ததும் மாப்பிள்ளை மூன்று பழ மரங்களையும் மூன்று நிழல் தரும் மரங்களையும் நடவேண்டும். ஜேர்மனியில் உள்ள ரோசன்ஸ்கேட் என்ற ஊராட்சி மன்றம் 1850-ஆம் ஆண்டு இவ்வாறு ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. இந்த வழக்கம் இன்றும் ஜேர்மனியில் இருக்கின்றது. திருமணம் முடிந்ததும் மணமக்கள் ஏதாவது ஒரு மரம் அல்லது பூச்செடி நடுகிறார்கள் இங்கே.



### முட்டைக் கோஸ் ஊறுகாயும் மணமகளும்

தென் கொரியாவின் தேசிய உணவு வகைகளுள் முட்டைக் கோஸ் ஊறுகாயும் ஒன்று. கிட்ச்சி என்று வழங்கப்படும் இந்த ஊறுகாய் வகையை ஒரு பெண் நன்றாகத் தயார் செய்தால் அவள் குடும்பத்திற்கு ஏற்றவள் என்று கருதி, அவளை மணக்க உடனே சம்மதிப்பார்களாம் இங்கு.

### இளநீர் குளியல்

கோவா மாநிலத்தில் நடக்கும் திருமணங்களில் திருமணத்திற்கு முதல் நாள் மணமகளுக்கு மிகவும் வித்தியாசமான நாளாகும். அன்று மணமகளைத் தயார் செய்யும் நாளாகும். சுமார் முன்னூறு இளநீர்களைச் சீவி அதன் தண்ணீரை பெரிய அண்டாவில் பிடித்து அதில்தான் மணமகளை குளிப்பாட்டுவார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்ணதாசனின் பேரன் திரையுலகிற்கு

மறைந்த கவிஞர் கண்ணதாசனின் பேரன் ஆதவ் அறிமுகமாகும் பொன் மாலைப் பொழுது திரைப்படத்திற்காக கவிஞர் வைரமுத்துவின் மகன் கார்க்கி பாடல் எழுதியுள்ளார். கொலிவுட்டில் அஸ்கு லஸ்கா, என்னமோ ஏதோ போன்ற பாடல்களை எழுதி புகழின் உச்சியில் உள்ளவர் கார்க்கி.

தற்போது வாற்கோதுமைக் கள்ளோடு வா தோழனே என்னோடு... ஊர் விட்டோடி காற்றை சுவாசிக் கலாம்.. நாற்காலிகள் மேசைகள் நாள் ஐந்துமே தேய்த்தோமே மேற்கூரையாய் வானம் நேசிக்கலாம் என்ற பாடல் வரிகளை கார்க்கி எழுதியுள்ளார்.

பொன் மாலைப் பொழுது படத்தில் ஆதவ் ஜோடியாக எப்படி என்னை மயக்கினாய் படத்தில் அறிமுகமான காயத்ரி நாயகியாக நடிக்கின்றார்.

அறிமுக இயக்குநர் துரையின் இயக்கத்தில் ஏ.ஜி.கிரியேஷன்ஸ் இந்த படத்தைத் தயாரிக்கின்றது.

எங்கேயும் எப்போதும் படத்திற்கு பிறகு இசை அமைப்பாளர் சத்யாவின் இசையில் பொன் மாலைப் பொழுது படத்தில் தாமரை, கார்த்தி நேத்தா, கார்க்கி ஆகியோர் பாடல்களை எழுதுகின்றார்கள்.

# திரைக்கு வரவுள்ளன...

**பொன்மாலைப் பொழுது**

நடிகர் : ஆதவ் கண்ணதாசன்
நடிகை : காயத்ரி
இயக்குநர் : ஏ.சி.துரை



# சினி துளிகள்

- ★ சன் ரீ.வியைத் தொடர்ந்து, இப்போது ஜெயா, ரீவியும் படங்கள் விநியோகம் செய்வதில் இறங்கியுள்ளது. கமலின், விஸ்வரூபம், ரஜினியின், கோச்சடையான் ஆகிய படங்கள், அவர்களின் பார்வை வளையத்துக்குள் இருக்கிறது. இவை தவிர, சில பெரிய படங்களை வாங்கி, வெளியிடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது ஜெயா ரீவி.
- ★ தேசிய விருதினைப் பெற்ற வாகைசூடவா படத்தினை இயக்கிய சற்குணம் இயக்கத்தில் தனுசின் அடுத்த படம் வெளிவருகிறது. இப்படத்திற்கு சொட்ட வாழைக்குட்டி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- ★ அஜித்துடன், 'பில்லா-2' படத்தில் பார்வதி ஓமணக்குட்டன், பிரேசில் அழகி புரூனா அப்துல்லா இருவரும் நாயகிகளாக நடித்துள்ளனர். இதில் புரூனா அப்துல்லா, மேற்கு வங்காளத்தை சேர்ந்த தன் காதலரை விரைவில் கைப்பிடிக்கிறார். இதற்காக, 'பில்லா-2' யூனிட்டையே பிரேசிலுக்கு வந்து தன்னை வாழ்த்துமாறு அன்பு அழைப்பு விடுத்துள்ளார் புரூனா.
- ★ கார்த்தியின், 'சகுனி' 23 கோடி ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இதுவரை கார்த்தி நடித்த படங்களில் அதிகூடிய தொகைக்கு விலைபோனது இது வேயாகும்.
- ★ ஜீவா நாயகனாக நடிக்கும் 'என்றென்றும் காதல்' படத்தில் கதைப்படி இரு நாயகிகள். அதனால் திரிஷாவையும் அமலாபாலையும் ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் இந்த இரு நாயகியர் விஷயம் ஆரம்பத்தில் திரிஷாவிடம் சொல்லப்படவில்லை என்கிறார்கள்.
- ★ அமலாபாலும் படத்தில் இருக்கிறார் என்று தெரிய வந்ததும், இயக்குநரை அழைத்த திரிஷா, படத்தில் இன்னொரு நாயகியும் இருக்கிறாராமே என்று கேட்க... இயக்குநர் பதிலுக்கு இப்போது படத்தில் அமலாபால் இல்லை என்றாராம்.

**இசை**

நடிகர் : எஸ்.ஜே.சூர்யா
நடிகை : சாவித்திரி
இயக்குநர் :எஸ்.ஜே.சூர்யா



வெள்ளைக் காகிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி.. பிட்ஸ்

## இலங்கைப் பிரச்சினையை மையப்படுத்தி புதிய படம்

இயக்குநர், ஒளிப்பதிவாளர், தயாரிப்பாளர் என தனக்குள் பல முகங்களைக் கொண்டுள்ளவர் சந்தோஷ் சிவன். உலக அளவில் பல விருதுகளைப் பெற்றுள்ள சந்தோஷ் சிவன், ஒளிப்பதிவு செய்து இயக்கி இருக்கும் படம் உருமி.

இந்தியாவின் 15 ஆம் நூற்றாண்டின் வரலாற்றை தனது சிறந்த ஒளிப்பதிவின் மூலம் கண்முன்னே கொண்டுவந்து பார்வையாளர்களை பிரம்மிக்க வைத்துள்ள சந்தோஷ் சிவன் American society of cinematographers என்ற அமெரிக்காவின் ஒளிப்பதிவாளர்களுக்கான அமைப்பில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டுள்ளார்.

இவர் தனது படமான உருமியில் ஆர்யா, பிருத்திவிராஜ், பிரபுதேவா, வித்யாபாலன், ஜெனீலியா, நித்யாமேனன் என பெரிய நட்சத்திரப் பட்டாளத்தையே களமிறக்கியுள்ளார். உருமி ஒரு பரிசோதனை முயற்சிக்குட்பட்ட படம். இந்தப் படத்தில் பல்வேறு வரலாற்றுக் குறிப்புகளைக் கூறியுள்ளேன். இந்தியாவை வாஸ்கோடகாமா கண்டுபிடித்ததாக கூறப்படும் செய்தி அனைவரும் அறிந்ததே. ஆனால் அவர் இந்தியாவிற்கு வந்ததன் உண்மையான நோக்கம் என்ன என்பது யாருக்கும் தெரியாது. இந்தப் படத்தில் அது தொடர்பான பல உண்மைகளை விளக்கியுள்ளேன். இது போன்ற சில வரலாற்றுக் குறிப்புகள் இந்தப் படத்தில் இடம்பெற்றுள்ளது என்று கூறினார் சந்தோஷ் சிவன்.

கமர்ஷியல் படங்களில் கவனம் செலுத்தாமல் வரலாற்று சிறப்பு வாய்ந்த படங்களை இயக்கிவரும் சந்தோஷ் சிவனின் அடுத்த படத்தின் கதை இலங்கை பிரச்சினையை மையமாகக் கொண்டிருக்கும் எனக் கூறியுள்ளார்.

சந்தோஷ் சிவன் தற்போது ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்துக்கொண்டிருக்கும் துப்பாக்கி படத்துக்கு ஒளிப்பதிவு செய்து வருகிறார்.

## இரண்டு வேடங்களில் ஜெயம் ரவி

டைரக்டர் சமுத்திரக்கனி இயக்கும் புதிய படத்தில் ஜெயம் ரவி இரண்டு வேடத்தில் நடிக்கிறார். அதில் ஒரு வேடம் ஐம்பது வயதைக் கடந்த அப்பா கேரக்டர். மற்றைய வேடம் வழக்கம் போல இளைஞனாக நடிக்கின்றார். இதில் பெரியவர் வேடம் ஜெயம்ரவியை விருதுப் பட்டியலில் கொண்டு வந்து நிறுத்தும் என்கிறார்கள். நாடோடிகள், போராளி என வித்தியாசமான படங்களைக் கொடுத்துள்ளவர் இயக்குநர்.

## நடிகர்சங்கத்தின் புதிய நிர்வாகக்குழு

தமிழ்த் திரையுலக நடிகர் சங்கத் தலைவர், பொருளாளர், செயலாளர், துணைத் தலைவர்கள் பதவிகளுக்கு மறுபடியும் சரத்குமார், சந்திரசேகர், ராதாரவி, விஜயகுமார், காளை ஆகியோரே போட்டியின்றி தெரிவாகின்றனர். மேற்படி பதவிகளுக்கு இவர்களைத் தவிர வேறு யாரும் மனுத் தாக்கல் செய்யவில்லை. இதனால் போட்டியின்றி தெரிவாகின்றனர்.

## காதலருடன் இணையும் மீரா ஜாஸ்மின்

தனது நீண்ட நாள் காதலரான மண்டோலின் ராஜேசுடன் நடிகை மீரா ஜாஸ்மீன் இணைந்து புதிய படமொன்றில் நடிக்க உள்ளார். மீரா ஜாஸ்மின் படப்படிப்பு அரங்குகளில் ராஜேஷை அடிக்கடி காணலாம். அதேபோல் காதலரின் மண்டோலின் இசை கச்சேரி நிகழ்ச்சிகளிலும் முதல் வரிசையில் உட்கார்ந்து ரசிப்பார் மீரா ஜாஸ்.

இந்நிலையில் தெலுங்கு படமொன்றில் இருவரும் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகி உள்ளனர். இதன் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது.

முதல் தடவையாக ராஜேசும் மீரா ஜாஸ்மினும் இணைந்து சினிமாவில் நடிக்கின்றனர்.

இருவருக்குமே கதை பிடித்துள்ளதாம். இந்தப் படம் வெளியான பின்பு, திருமணம் பற்றி அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார்கள் என தெரிகிறது.

## துப்பாக்கியில் விஜயின் பாடல்

துப்பாக்கி படத்தின் படப்பிடிப்பு கிட்டத்தட்ட 60% முடிவடைந்து விட்டது. மும்பை வாழும் ஒரு தமிழ் குடும்பத்தினை பற்றிய கதை. அதனால் முழுக்க முழுக்க மும்பையில் படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது என ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார் ஏ.ஆர்.முருகதாஸ். இப்படம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், விஜய்யிடம் நான் இவ்வளவு வேகத்தை எதிர்பார்க்கவில்லை. படத்தில் ஒரு பக்க வசனம் ஆகட்டும், நீளமான காட்சிகள் ஆகட்டும் எல்லாவற்றையும் குறுகிய காலத்தில் செய்து முடித்து விடுகிறார்.

கமலுக்குப் பிறகு விஜய் தான் தொடர்ந்து பாடல்களை பாடி வந்தார். ஏனோ அவரும் 6 வருடங்களாக பாடல் எதுவும் பாடுவது இல்லை.

விஜய்யை பாட வைத்து அதனை நமது படத்திற்கு உபயோகிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இசையமைப்பாளர் ஹாரிஸ்ஸும் அந்த பாடலை கம்போஸ் செய்து முடித்தவுடன் விஜய்யை இந்த பாடலை பாட வைக்கலாமா என்று கேட்டார். இவர் கேட்கிறாரே என்று உடனே சரி என்று கூறி விட்டேன். அப்பாடல் கண்டிப்பாக 'துப்பாக்கி' படத்தில் ஒரு சிறந்த பாடலாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

'துப்பாக்கி' படத்தின் கதையினை முதலில் இந்தியில் அக்ஷய்குமார் நடிப்பதாக தான் இருந்தது. ஆனால் விஜயின் கால்ஷீட் தயாராக இருக்கிறது என்றவுடன் அக்கதையினை விஜயை வைத்து தமிழில் உடனே ஆரம்பித்துவிட்டேன். இப்படத்தினை முடிந்தவுடன் இதே கதையினை அக்ஷய்குமாரை வைத்து இந்தியில் தொடங்க இருக்கிறேன்.

'கஜினி' படத்தினை அடுத்து இந்தியில் ரீமேக் செய்யக் கூடாது என்று நினைத்தேன். ஆனால் அது முடியாமல் போய்விட்டது. என்று தெரிவித்திருக்கிறார்.

## கமலின் குருபக்தி

நடிகர் கமல்ஹாஸன் இயக்கி நடிக்கும் படம் விஸ்வரூபம். கமல் தனது படத்தை முதன்முதலில் சிங்கப்பூரில் நடக்கும் இண்டர்நேஷனல் இந்தியன் ஃபிலிம் அக்கடமி(IIFA)யில் திரையிடுகிறார் என்ற செய்தி வெளியானது. ஆனால் தான் இயக்கிய படத்தை கமல்ஹாஸன் தனது குருவான கே.பாலச்சந்தருக்குத் தான் முதலில் திரையிட்டு காட்டியுள்ளார். இயக்குநர் கே.பாலச்சந்தர் அவர்கள் கமல்ஹாஸனுடனும், விஸ்வரூபம் படத்தின் டெக்னீஷியன்களுடனும் இணைந்து பார்த்திருக்கிறார்.

## ஹிந்தியில் 100 கோடி தமிழில் 2 கோடி

தமிழில் ரிலீஸாகி சரவெடி வெடித்த படங்கள், ஒரு சில சமயங்களில் ஹிந்தியில் ரிலீஸாகும் போது புஸ்வானம் ஆகிவிடுகின்றன. தற்போது இந்தியில் ரிலீஸாகி சக்கை போடு போட்டுக்கொண்டிருக்கும் படம் ஹவுஸ்புல் 2.

இந்தப் படம் ரிலீஸான சில நாட்களிலேயே 100 கோடி ரூபாய் வசூல் செய்துவிட்டதாம். இதற்கும் தமிழ் சினிமாவிற்கும் என்ன தொடர்பு என்றால், இந்த படம் 2003ல் தமிழில் வெளியான பந்தா பரமசிவம் என்ற படத்தின் ரீமேக் என்கிறார்கள். பந்தா பரமசிவம் ஒரு காமெடி படம். பந்தா பரமசிவம் படத்தின் பட்ஜெட் 2 கோடி ரூபாய் தான்.

## மீண்டும் மனோராம்மா

உடல் நலம் பாதிக்கப்பட்டு கடந்த சில மாதங்களாக நடிக்காமல் இருந்து வந்த மனோரமா மீண்டும் புதுப் பொலிவுடன் நடிக்க வருகிறார். ஹரி இயக்கும் சிங்கம் 2 படத்தில் மனோரமா நடிக்கிறார். மனோரமா கடந்த சில மாதங்களாக சிறுநீரகக் கோளாறு, சர்க்கரை, ரத்த அழுத்தம் அடுத்தடுத்து உடல் நலக் குறைவில் இருந்தார். தற்போது அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும் விடுபட்டுள்ளார். நல்ல உடல் நலத்துடன் பூரண ஓய்வில் இருந்து வரும் மனோரமா மீண்டும் நடிக்க வருகின்றார்.




பார்த்த உடனே வரும் காதல் கொஞ்ச நாள் பழகிய பின்பு பெற்றோர்களின் சம்மதம் இல்லாமலேயே நடக்கும் கல்யாணம். அதன்பிறகு ஒன்றுமே இல்லாத விஷயங்களுக்கு எல்லாம் வருகிறது சண்டை. கடைசியில் விவாகரத்துக்காக நீதிமன்றத்தில் போய் நிற்கிறார்கள் தம்பதிகள். சென்னை போன்ற பெரு நகரங்களில் பெருகிவரும் இத்தகைய காதல் திருமணம், விவாகரத்து சம்பவத்தை அடிப்படையாக கொண்டே இஷ்டம் படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குநர் பிரேம் நிஸார்.

விமல் சென்னையில் உள்ள பிரபல ஐ.டி. கம்பெனியில் மென்பொருள் என்ஜினியராக பணிபுரிகிறார். மாதம் 1 லட்ச ரூபா சம்பளம். வீடு வசதி வாய்ப்புகளுடன் வாழும் இவருக்கு நிஷா அகர்வாலை பார்த்த மாத்திரத்திலேயே காதல் வருகிறது. பெற்றோர்களின் எதிர்ப்பையும் மீறி திருமணம் செய்துகொள்கிறார்கள். சில நாட்களிலேயே வரும் சின்ன சண்டை பெரிதாக வெடிக்கிறது. கடைசியில் விவாகரத்து வரைக்கும் போய்விடுகிறார்கள். கேட்ட உடனேயே விவாகரத்தும் கிடைத்துவிட, பெற்றோரின் சம்மதத்துடன் நடக்கும் இரண்டாவது திருமணத்திற்கு சம்மதிக்கின்றனர் இருவரும். விமலுக்கு ஒரு பெண்ணை பார்க்கிறார் அவர் அப்பா. நிஷாவுக்கும் அவர்கள் வீட்டில் ஒரு பையனைப் பார்க்கிறார்கள். பார்த்த வரன்கள் இருவருக்கும் பிடித்துவிட திருமணம் செய்து கொள்ள முடிவெடுக்கின்றனர்.

இரண்டாம் திருமணம் நடந்ததா? இல்லையா என்பது க்ளைமேக்ஸ்.

விமலுக்கு ஐடியில் வேலை பார்க்கும் இளைஞன் கேரக்டர் என்பதால் படம் முழுக்க தாடி மீசை இல்லாத விமலை பார்க்க முடிகிறது. நிஷா அகர்வாலுடனான ரொமான்ஸில் பின்னி யிருக்கிறார் விமல்.

விமலுக்கு ஜோடியாக நடித்திருக்கிறார் காஜல் அகர்வாலின் தங்கை நிஷா அகர்வால். பார்ப்பதற்கு காஜல் அகர்வால் மாதிரியே இருக்கிறார். காஜல் ஏற்கனவே செம பிஸியாகிவிட்டதால் அவரது கால்ஷீட் கிடைக்காதவர்கள் நிஷா அகர்வாலை தைரியமாக நடிக்க வைக்கலாம்.

விமலுக்கு [illegible] அடிக்கடி [illegible] தொடங்கி அவரது அப்பா நிஷாவின் தோழிகள், அத்தை என ஒருவர் விடாமல் அத்தனை பேரையும் விட்டுவைக்கவில்லை சந்தானம்.

திரைக்கதை வசனம் எழுதி இயக்கியிருக்கிறார் பிரேம் நிஸார். இன்று சமுதாயத்தில் பெருகி வரும் பிரச்சினையை கையில் எடுத்திருக்கிறார். காதலித்துத் திருமணம் செய்து கொள்பவர்கள் எடுத்ததற்கெல்லாம் சண்டை போட்டுக் கொண்டு அவசரப்பட்டு விவாகரத்து வரைக்கும் போய்விடக் கூடாது என்கிற மெசேஜை படம் சொல்வதற்காகவே இயக்குநரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

### உண்மை

- ★ உள்ளம் தெளிவாக இருந்தால் வாக்கினில் உண்மை உண்டாகும் - பாரதியார்
- ★ உண்மை ஒன்றே இறுதிவரை நிலைத்து நிற்கும் - காந்தியடிகள்
- ★ உங்களுக்கு நீங்களே உண்மையாக இருக்க முயலுங்கள் - சுவாமி சிவானந்தர்
- ★ உண்மையைத் தேடு. தளைகளிலிருந்து அது உன்னை விடுவிக்கும் - பட்சி சாஸ்திரி
- ★ உண்மையாக விளங்குபவன் எவனோ அவனே உண்மையான தலைவன் - வென்னிங்
- ★ கலை என்பது விளம்பரத்தின் வடிவம். ஆனால் உண்மையின் விம்பம் - கென்னடி
- ★ ஒருவருக்கொருவர் சச்சரவு செய்கிறபோது உண்மை ஒதுக்கித் தள்ளப்படுகிறது -சைரஸ்
- ★ காலம் பொன் போன்றது; ஆனால் அதைவிட உண்மை சிறந்தது - டிஸ்ரேலி
- ★ எல்லா முனிவர்களும் வலியுறுத்துவது ஒன்றுதான்; அதுதான் உண்மை - மகாபாரதம்

## தெரிந்துகொள்ளுங்கள்

01. திரவ நிலையிலுள்ள ஒரே உலோகம் பாதரசம்.
02. விற்றமின்களில் 20 வகைகள் உள்ளன.
03. நேபாளத்தின் தேசியக்கொடி முக்கோண வடிவம்.
04. நின்றபடியே அடைகாக்கும் பறவை பென்குயின்.
05. தேனில் 60 சதவீதம் தண்ணீர் உள்ளது.
06. செங்கடலில் நீர் சிவப்பாக இருக்காது.
07. துருக்கியில் நீல நிறம் துக்கச் சின்னமாகும்.
08. பூனைகளை வளர்த்த முதல் நாடு எகிப்து.
09. ஈக்கள் மணிக்கு 7 கி.மீ. வேகத்தில் பறக்கும்.
10. கரப்பான் பூச்சி 35 கோடி ஆண்டுகளாக வடிவம் மாறவில்லை.
11. ஆஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு கிரிக்கெட்.
12. வெள்ளி அதிகமாகக் கிடைக்கும் நாடு மெக்ஸிகோ.
13. பீங்கான் கோபுரம் சீனாவில் நான்கில் என்னுமிடத்தில் உள்ளது.
14. சிலருக்குத் தீயைக் கண்டாலே பயம்; அதற்கு தெர்மோஃபோபயா என்று பெயர்.
15. உலகிலேயே மிகச் சிறந்த இயற்கைத் துறைமுகம் ஆஸ்திரேலியாவில் உள்ள சிட்னி.

## அறிவியல்

- ★ ஒவ்வொரு முறை நாம் தும்மும் போதும் ஒரு வினாடி நமது இதயம் நின்று பின் துடிக்கத் தொடங்கும்.
- ★ மனிதன் வலது நாசியைவிட இடது நாசிக்கு நுகரும் சக்தி அதிகம் என ஆய்வு கூறுகிறது.
- ★ நமது இடது நுரையீரல், வலது நுரையீரலை விட சிறியதாக உள்ளது. காரணம் இதயம் அருகில் அது இருப்பதால் இதயத்திற்கு போதிய இடமளிக்க இவ்வாறு அமைந்துள்ளது.
- ★ கரிய இருளிலும் ஆந்தைக்கு நீல நிறத்தை சரியாகத் தெரிந்து கொள்ள முடியுமாம்.
- ★ மற்ற எல்லாப் பொழுதுகளையும்விட மதிய வேளையில் மட்டும் நம் பாதங்கள் சற்று பெரியதாக இருக்கும்.
- ★ புற்றுநோயைக் குணமாக்கும் தன்மை ஒட்டகப் பாலுக்கு உள்ளது. சிவப்பு அணுக்களை அதி கரிக்க உதவும் துத்தநாக உப்பு ஒட்டகப்பாலில் நிறைய உள்ளது.
- ★ குதிரைகள் நடக்கும்போதும், ஓடும்போதும் அவற்றின் கால்களைப் பாதுகாக்க லாடம் அடிக்கப்படுகின்றன. அந்த லாடம் 280 கிராம் எடை இருக்கும்.
- ★ முள்ளங்கி, சுண்ணாம்பு சத்தும் விற்றமின் சத்தும் உடையது. இது பசியை அதிகரிக்கும். மலச்சிக்கலைத் தீர்க்கும். மூலநோய் ஏற்பட்டவருக்கும் நலம் தரும். பற்கள் சம்பந்தமான நோய்களை நீக்கும். சிறுநீரில் சர்க்கரையைக் கட்டுப்படுத்தும்.




# சிறுவர் சுடர்

## பழமொழிகள்

01. கடலைத் தாண்ட ஆசையுண்டு கால்வாயைத் தாண்டக் கால் இல்லை.
02. கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.
03. கடன் இல்லா கஞ்சி கால் வயிறு.
04. கடன் வாங்கிக் கடன் கொடுத்தவனும் கெட்டான்; மரம் ஏறிக் கைவிட்டனும் கெட்டான்.
05. கடுஞ் சொல் தயவைக் கெடுக்கும்.
06. கடித்த சொல்லினும் கனிந்த சொல்லே நன்மை.
07. கடுகத்தனை நெருப்பானாலும் போரைக் கொளுத்தி விடும்.
08. கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா?
09. கடுகு போன இடம் ஆராய்வார், பூசணிக்காய் போன இடம் தெரியாது.
10. கடுங்காற்று மழை கூட்டும் கடுஞ் சிநேகம் பகை கூட்டும்.

## காந்தியின் வாழ்வில்...



சென்னைக்கு காந்தியடிகள் வருகை தந்து காங்கிரஸ் தொண்டர்களிடம் பேசிக் கொண்டிருந்தபோது அந்த இடத்துக்குத் திடீரென்று பாரதியார் வந்தார்.

மிஸ்டர் காந்தி, இன்று மாலை சென்னை கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். அதில் நீங்கள் பேச வேண்டும் என்று விரும்புகிறேன். வரமுடியுமா? என்று கணீரென்ற குரலில் கேட்டார்.

வந்தவர் யாரென்று தெரியாத காந்தி, சிறிதுநேரம் யோசித்துவிட்டு, இன்றைக்கு வர நேரமில்லை. நாளைக்கு வேண்டுமானால் நான் வர இயலும். கூட்டத்தை நாளைக்கு வைத்துக் கொள்ள முடியுமானால், நிச்சயம் நாளை வருகிறேன் என்றார்.

உடனே பாரதி, நான் கூட்டத்தை யாருக்காகவும் தள்ளி வைக்கமுடியாது. நான் வருகிறேன் என்று துடிப்புடன் கூறிவிட்டு அகன்றுவிட்டார்.

அருகிலிருந்தவரிடம் காந்தியடிகள் வந்தவர் யாரென்று விசாரித்தார்.

அவர் சிரித்தவாறே, அவர்தான் தமிழ்நாட்டின் ஒப்பற்ற கவிஞர் பாரதியார் என்றார். காந்தியடிகள் வியந்து போனார்.



தாய்ப்பூனை குட்டிப்பூனையிடம் செல்ல விரும்புகிறது வழிகாட்டுங்கள்

## புத்தியைத் தீட்டு

கடவுள் பல சந்தர்ப்பங்களை மனிதனுக்குத் தருகிறார். சிலர் அதைப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டு, இந்தக் கடவுள் இருக்கிறானே! அவனுக்கு ஒரு கண்ணில் வெண்ணெய், ஒரு கண்ணில் சுண்ணாம்பு. என்னை ஏழையாகவே வைத்திருக்கிறான். அவனை பணக்காரனாக்கி விட்டான் என்கிறார்கள்.

ஒரு ஊரில், ஏழை விவசாயி ஒருவன் இருந்தான். விவசாயத்தில் நஷ்டமாகவே, காட்டில் போய் விறகு வெட்டி பிழைத்தான். ஒருசமயம், அவன் அந்நாட்டு அரசனின் பார்வையில் பட்டான். காட்டில் மரம் வெட்டுவது குற்றமல்லவா! பின் ஏன் மீறினாய்? என்றான்.

அரசே! விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டம் பற்றி அதிகாரிகளிடம் முறையிட்டேன். அவர்கள் இழப்பீடு ஏதும் தரவில்லை. மானியம் கேட்டேன், மறுக்கப்பட்டது. என் குடும்பம் பசியால் தவிக்கிறது. இதை விற்றுக் கிடைக்கும் சொற்பக்காசில் கால் வயிறு கஞ்சி குடிக்கிறோம், என்று அழுதான்.

அதிகாரிகளைக் கடிந்து கொண்ட ராஜா, அவனுக்கு சந்தனமரக்காடு ஒன்றை பரிசாக அளித்தார்.

சிலகாலம் கழித்து ராஜா திரும்பவும் அவனை அழைத்தார். சந்தனக்காடு தந்தேனே! முன்னேறி விட்டாயா! என்றார். ஓ! முன்பு கால்வயிறு கஞ்சி குடித்த என் குடும்பம் இப்போது அரை வயிறு குடிக்கிறது, என்றான்.

அதிர்ச்சியடைந்த ராஜா, சந்தனமரம் இருந்தால் லட்சாதிபதியாகி இருக்கலாமே! நீ மரங்களை என்ன செய்தாய்? என்றான்.

ராஜா! மரக்கட்டைகளை விற்பதை விட, அதன் கரியை விற்றால் லாபம் அதிகம் கிடைக்கும். நீங்கள் தந்த மரக்காட்டை அழித்து கரியாக்கினேன். அதை விற்று பிழைத்து வருகிறேன், என்றான். பிறகென்ன! ராஜா தலையில் அடித்துக் கொண்டார்.



இப்படித்தான்! முன்னேறுவதற்கு எப்போதாவது தான் ஆண்டவன் சந்தர்ப்பத்தைத் தருவான். அதை விட்டுவிட்டால், காலம் முழுக்க அழுவதைத் தவிர வேறு வழியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்குத் தங்களைப் பற்றிய சித்திர ரூபம் (கற்பனை உருவம்) இருக்கிறது. தங்களை எப்படிக் கற்பனை செய்து கொள்கிறார்களோ, அப்படி மாறுகிறார்கள்.

இதன்படி பார்த்தால் பல முக்கியமான உண்மைகள் புலப்படுகின்றன.

1.நாளைய நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனை உருவம் படைத்திருப்பீர்கள், மனதினாலில் கண்ட கருத்துக்கு ஏற்ப நாளைய நீங்கள், உருவாகலாம்.

2. மிகவும் சக்தி வாய்ந்த படைப்பாற்றலுக் கற்பனை செய்யுங்கள். நாளைய நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு அது உதவும்.

3.மனதில் தோன்றும் கற்பனைக்கு ஏற்ப இலட்சிய மனிதனாக நீங்கள் மாற வேண்டும்.

4.எப்படி?

உங்கள் கற்பனை இலட்சிய உருவத்தை எப்போதும் தொடர்ந்து தோழனாக வைத்திருக்க வேண்டும்.

அது கஷ்டமில்லை. சுலபந்தான்.

இதனால் நல்ல இலட்சிய நிலைகளில் ஒரு சிறிதும் குறைவில்லாமல் நடந்துகொள்ள மனதில் ஒரு நிலை உண்டாகி குற்ற உணர்வுகளுக்குத் தடை ஏற்படும்.

இதுதான் உயர்நிலையையும், குணத்தையும் வளர்த்துக் கொள்ள மிகச் சிறந்த வழி. இதனால் கற்பனை மனிதனின் நல்லபருக்கு அற்புதங்கள் விளையும்.

**பிரச்சினைகளையும், பிரச்சினை மனிதர்களையும், உங்களையும் வெல்ல வேண்டும்!**

பிரச்சினைகளையும் பிரச்சினை மனிதர்களையும் உங்களையும் எதற்காக வெற்றி கொள்ள வேண்டும்?

இதற்கு விடை காண்போம்.

1.பிரச்சினைகளை நீங்கள் தீர்க்காவிட்டால் உங்களைப் பிரச்சினைகள் மூழ்கடித்து விடும்.

2.பிரச்சினை - மனிதர்களைக் கட்டுக்குள் வைக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் மீது அவர்கள் ஆதிக்கம் செலுத்துவார்கள்.

3.உங்களை நீங்கள் கட்டுப்படுத்தாவிட்டால் உங்கள் பிரச்சினைகள் அதிகரித்து உங்களுக்கும்,



# உங்கள் கற்பனை உருவத்துடன் தொடர்ந்து நடைபுக் கொள்ளுங்கள்...!

மற்றவர்களையும் ஆட்சி ஆண்டு பிறகு கவலைகளையும் சமாளிக்கிறீர்கள்.

**மனத்தை அமைதியாக வைத்திருங்கள்.**

பிரச்சினைகள் நடுவே அமைதி என்பது புயலின் மையம் போன்றது. புயல் அடிக்கும் போது சூறாவளிக் காற்று நாலு புறமும் சுழன்று வேகமாக வீசுகையில் நடுப் புள்ளி அருகே அமைதியாக இருக்கும். அங்கே பரிபூரண அமைதி சூழ்ந்திருக்கும். புயலின் நடுப் புள்ளியை ஆங்கிலத்தில் கண் என்று சொல்வார்கள்.

உங்கள் கண்களும் சூறாவளியின் கண் போல அமைதி காக்க வேண்டும்.

ஓய்வான உங்கள் கண்கள் மூலமே மனம் பூரண அமைதியைப் பெறுவதற்கு அசாதாரணமான - அதே சமயம் வியக்கத் தக்க வழிமுறைகளைப் பெற முடியும்.

கண்களுக்கு நெகிழ்ச்சி கொடுப்பது எப்படி என்பதை அடுத்த பகுதியில் காண்போம்.

**கண்களின் உணர்ச்சிகளைத் தளர்த்துவதன் மூலமே மனம் அமைதி பெறத் தொடங்குகிறது!**

**உங்கள் கண்களுக்கும் மனத்திற்கும் தொடர்பு உண்டு.**

செயலுக்கும் பலனுக்கும் உள்ள கண் - மனத் தொடர்பு பார்வைக்கும் அப்பாற்பட்டது.

கண்கள் உணர்ச்சி மயமானவை, உணர்வுகளுக்கு அவை மறுமொழி சொல்கின்றன. அல்லது உங்கள் மனதின் நிலையைத் தளரச் செய்கின்றன.

வெளிப்புறக் காட்சிக்கு அப்பாற்பட்டது இது. நேத்திரங்களில் ஏற்படும் உணர்ச்சிகள் மனக் காட்சிகளைப் பாதிக்கின்றன. ஆகவே கண்களின் உணர்வைக் கட்டுப்படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கண்களின் உணர்ச்சிகள் எவ்வாறு மன உணர்வுகளுக்குப் பதில் கொடுக்கின்றன என்று முதலில் பார்ப்போம்.

துன்பம் வந்தால் கண்ணீர் சொரிகின்றன. கவலையால் பனிக்கின்றன. கோபத்தால் துடிக்கின்றன. கோபத்தால் சிவக்கின்றன. இவ்வாறு கண்கள் மன உணர்ச்சிகளுக்கு விடை தரும் வகையில் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றன.

உங்கள் மன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் மனத்தை அமைதியாக வைப்பதன் முதல் கட்டத்திற்கு வரலாம்.

**உங்கள் மனம் பற்றிய விகாரங்களைக் கண்கள் வெளிப்படுத்துவதைத் தீவிரமாக உணர்ந்து கொள்ளவும்.**

இதனால் மனக் கட்டுப்பாட்டு மூலம் கண்களுக்கு ஓய்வு கொடுக்கலாம்.

**கண்களைத் தளர்வாக வைத்துக் கொள்ளுங்கள்.**

உங்கள் மனத்தில் தோன்றும் கருத்துகளாலேயே கண்களுக்கு நெகிழ்ச்சியைக் கொடுங்கள். கண்களுக்கு ஏற்படும் பதற்றங்களைத் தவிருங்கள். வெற்றிடத்தை நோக்குவதாகக் கண்களுக்குப் பயிற்சி அளியுங்கள். உறக்கம் கொள்வதுபோல உணர்ச்சி அற்ற, வெறுமையான, முற்றிலும் ஓய்வு பெற்ற கண்களைக் கற்பனை செய்யுங்கள்.

உங்கள் கண்கள் முழுதும் ஓய்வு பெற்று இருக்கும் போது பயம், கோபம், விருப்பு, வெறுப்பு, கவலை, பதற்றம் போன்ற எந்தவித உணர்ச்சியும் வெளிக்காட்டா.

இரண்டு விதமான நேர்மாறான உணர்ச்சிகளை அனுபவிப்பது மனோ தத்துவ ரீதியாக முடியாது.

கண்களுக்கு ஓய்வு கொடுப்பதன் மூலமே உங்கள் உணர்வுகளை நிறுத்தி வைக்கிறீர்கள்.

இதுதான் எங்கும் நிலைத்திருக்கும் சீர்தன்மை விதி.

உங்கள் நரம்பு மண்டலம் முழுதும் உங்கள் உணர்ச்சியால் பாதிக்கப்படும்.

கண்களைத் தளர்வாக வைத்துக் கொண்டால் மனத்திற்கும் அமைதி கிடைத்து கலக்கமில்லாமல் இருக்கும்.

பதற்றம் இல்லாத நிலையில் நீங்கள் அமைதியாகச் செயல்படுவீர்கள்.

இறுக்கமான நிலையில் கண்களைத் தளர விடுங்கள். அதில் உடலும் உள்ளமும் ஓய்வு பெறும். மன அமைதியை வாழ்வில் பெறலாம்.

வருங்காலத்தில் எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும்.

எப்படி இருக்க வேண்டும் என்று சரியாகத் தீர்மானிக்க முடியாவிட்டால் மேன்மையான நீங்களாக உங்களைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

பழகப் பழக உங்கள் **கற்பனைத் தோழன்** உங்களுக்குத் தேவையான வடிவில் காட்சி தருவான்.

தொடர்ந்து தோழனாக, கண்ணுக்குத் தெரியாத நண்பனாக, உதவி செய்யும் ஆலோசகனாக உங்கள் கற்பனை உருவத்தைப் போற்றுங்கள். இந்த நண்பன் எப்போதும் உங்களிடம் இருக்கட்டும். அவனை விட்டு விட வேண்டாம். இரவும் பகலும் அவனுடன் இருங்கள்.

உங்கள் கற்பனை நண்பன் எப்படி ஆலோசனை வழங்க முடியும்?

நீங்கள் பல பிரச்சினைகளுக்குத் தனியாக முடிவு எடுக்க வேண்டியதில்லை.

உங்கள் கற்பனை உருவத்துடன் மனத்தால் தொடர்பு கொள்ளவும். 'மகத்தான நீங்கள்', 'இலட்சிய நீங்கள்' என்று மனக் காட்சியில் தோன்றுகிறீர்கள்.

இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் என்ன - என்ன செய்ய வேண்டும் என்று உங்கள் கற்பனை இலட்சிய மனிதனிடம் உரையாடவும்.

நல்லவனாகவும் மேன்மையானதாகவும் விளங்க நினைக்கும் நீங்கள் எப்படிச் செயல்பட வேண்டும் என்று விடை வருகிறதோ அவ்வாறு நடந்து கொள்ளுங்கள்.

நல்ல இலட்சிய மனிதனாகப் பணியாற்றுகையில்.

உங்கள் உன்னதமானவை - உருவத்துடன் எப்போதும் செயல்படுங்கள்.



உங்கள் உற்றார் உறவினர்களுக்கும் நீங்கள் தொல்லை கொடுக்க ஆரம்பிப்பீர்கள்.

ஆனால் அநேகப் பிரச்சினைகளும் அதன் காரணங்களும் வெளிப்படையாகத் தெரிவதில்லை. உங்கள் உள் மனத்தில் ஒளிந்திருந்து உங்களை அறியாமலேயே பிரச்சினைகள் தலைதூக்கும்.

இதன் காரணமாகப் பிரச்சினைகள் புற்று நோய் அணுக்கள் போல பெருகி உங்களை ஆக்கிரமிக்கும்.

**இந்த உலகில் பிரச்சினைகள் அதிகமாகி சமாளிக்க முடியாத மக்கள் அதிகரித்து வருகின்றனர்.**

பிரச்சினைகள் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. நுணுக்கத்தை அதிகரிப்பதைவிட, பிரச்சினைகள் அதிகமாவதைக் கண்டால் பயமாய் இருக்கிறது.

பிரச்சினைகளை அறவே நீக்க முடியாது. ஆனால் உங்களை எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முறியடிப்பதற்கும், உங்களுக்குத் தொல்லை கொடுக்கும் பிரச்சினை மனிதர்களை எதிர்கொள்வதற்கும் உங்களை வெல்வதற்கும் இங்கு வழி சொல்கிறேன். இதனால் உங்கள் இலட்சியம் போல வாழலாம்.

இதைப் படித்தால் மட்டும் போதாது. இதில் சொன்னபடி நடக்க வேண்டும்.

1. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உங்கள் எண்ணத்தையும் உணர்ச்சியையும் ஊக்குவிக்குமாறு செய்ய இங்கு சொல்லப்படுகின்றவற்றை - மீண்டும் வாசித்துக் கொண்டே இருங்கள்.

வாழ்வின் நிகழ்ச்சிகள் வெற்றிகரமாகவும், பயனுள்ளதாகவும் இருப்பதற்கு உங்களைத் தயார்படுத்துவது தான், இதன் நோக்கம்.

**2. நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகளை அடிக்கடி பயன்படுத்துங்கள். அப்போதுதான் வெற்றி பெற முடியும்!**

**அமைதியாக இருங்கள்**

நீங்கள் இலட்சிய மனிதனாக மாறுவதற்கு அமைதி முக்கியம்.

**மனத்தை அமைதியாக வைத்திருங்கள்.**

சாந்தமாக, அறிவு பூர்வமாக தர்க்க ரீதியான உங்கள் பிரச்சினைகள் தீர்வதற்கு இதுவே வழி.

உங்களுக்குத் தொல்லை தரும் ஆசாமிகள் கோபக்காரர்களாக, **திமிர் பிடித்தவர்களாக, அவமானப்படுத்துபவர்களாக** எப்படி இருந்த போதிலும் மனக் கட்டுப்பாடு மூலமே அவர்களை ஜெயிக்க முடியும்.

**எனவே, மனத்தை அமைதியாக வைத்திருங்கள்.**

தீக் கொழுந்து விட்டெரியும் கோப - தாப உணர்ச்சிகள் உங்களை எரித்துச் சாம்பலாக்க வரும் போது மன அமைதி மூலமே நிலைமையைச் சமாளிக்க முடியும்.

**எனவே, மனத்தை அமைதியாக வைத்திருங்கள்.**

மற்றவர்களைக் குறை கூறும் போதும் நீங்கள் நிதானமாய் இருங்கள்.

**எனவே, மனத்தை அமைதியாக வைத்திருங்கள்.**

மற்றவர்கள் அறியாமையால் கத்திப் பேசி, ஆவேசம் கொண்டு, புலம்பி அலறினாலும் - இரைச்சலாலும், கூச்சலாலும் பாதிக்கப்படாமல் கருத்துகளில் கவனமாக இருங்கள். எதிராளி கத்தி அடங்கும் வரை வார்த்தைகள் அல்லாமல் தவிக்கும் வரை பேசாமல் இருங்கள். பூகம்பமாக, இடி மின்னல் அடிக்கும் புயலாக எதிராளி மாறினாலும் பதற்றமில்லாமல் இருங்கள். அதே சமயம் மனத்தை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள்.

இதனால் உங்களுக்குத் தீர்க்கமான சக்தி கிடைக்கிறது. உங்களைக் கட்டுப்படுத்தி

வெற்றியின் படிகள் தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஞ்சிச்சோடா நல்லதா?



**கேள்வி:** எனக்கு வயது 52 நீரிழிவு நோயாளி. இஞ்சிச் சோடா (Ginger beer) குடிக்கக் கூடாது என எனது மருத்துவர் கூறுகிறார். இஞ்சி மருத்துவ குணங்கள் உள்ளது தானே? இதை ஏன் தவிர்க்க வேண்டும்.


**பதில்:** பல இயற்கையான பழங்கள் இஞ்சி முதலிய உணவுப்பதார்த்தங்கள் உடலுக்கு ஆரோக்கியம் தருபவை என்பது யாவரும் அறிந்ததே. எனினும் இந்த இயற்கை உணவு களுடன் செயற்கையாகச் சேர்க்கப்படும் சீனி முதலானவை அந்த ஆபத்தற்ற இயற்கை உணவை ஆபத்தானவையாக மாற்றி விடுகின்றன.

உதாரணமாக: இஞ்சி பலவகைகளில் (சமிபாடு முதலிய) உடல் ஆரோக்கியத்துக்கு உதவுகிறது. ஆனால் இஞ்சிச் சோடாவில் இஞ்சியுடன் மிக அதிக சீனி சேர்க்கப்படுகின்றது. இவ்வாறு இனிப்பாகத் தயா ரித்து வழங்கப்படுவதால் மக்கள் இஞ்சிச் சோடாவை தேடித்தேடி அருந்தும் நிலைமையைக் காணலாம். தயா ரித்து விற்கும் வியாபார நிறுவனங்கள் மக்கள் இனிப்புச் சுவையை விரும்புவர் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு இஞ்சி உடலுக்கு நல்லது என்ற மக்களின் அறிவையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இஞ்சிச் சோடாவை கோடிக்கணக்கில் விற்றுத் தீர்த்துப் பணம் பண்ணுகின்றனர். இஞ்சி உடல் ஆரோக்கியத்துக்கு உகந்ததே. அதில் எந்த சந்தேகத்துக்கும் இடமே இல்லை. ஆனால் அதனுடன் சீனியைக் கொட்டித் தயாரிக்கப் படும் இஞ்சிச் சோடாவும் உடலுக்கு உகந்தது தானா? நிச்சயமாக இஞ்சியால் உடலுக்கு ஏற்படும் நன்மையை விட அதனுடன் சோடாவில் உள்ள சீனியால் உடல்நிறை அதிகரிப்பு, நீரிழிவு வியாதி மோசமடைதல் போன்ற தீமைகள் பல மடங்கு அதிக மாகும். அப்படியானால் சீனியைப் போடாமல் இஞ்சிச் சாற்றை மட்டும் இந்தக் கம்பனிகள் தயாரித்து விற் பனை செய்யலாமே? அங்குதான் சிக்கலே உள் ளது. சீனியை சேர்த்துக் கொள்ளாவிடில் இஞ்சிச் சோடாவை எவருமே வாங்க மாட்டார்கள். அந்த உற் பத்தியை சந்தைக்கு விட்டால் தயாரிக்கும் கம்பனி நஷ்டப்பட வேண்டியதுதான். இங்கு இஞ்சி சிறப்பா னது என்ற மக்களின் அறிவைத் தவறாகப் பயன் படுத்தி தமது விற்பனையை அதிகரிக்க சீனியை சேர்த்து தயாரித்து நாகுக்காக விற்பனையை அதி கரிக்கும் உத்தியைக் காணலாம். கம்பனிகளின் இந்த மறை முக சுரண்டலைக் கண்டிப்பதை விட மக்களை இது தொடர்பில் அறிவூட்டுவதே நமக்கு சிறந்ததாக இருக்கும்.

இவ்வாறு பல ஆபத்தற்ற இயற்கை உணவுகளு டன் சேர்ந்த உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் சீனி முதலியனவையும் உடலுக்குள் நுழைந்து விடுகின்றன. மற்றொரு உதாரணம் Butter fruit எனும் பழமாகும். இது விற்றமின்கள் நிறைந்த ஆரோக்கி யம் தரும் உணவுதான். ஆனால் இதன் ருசியை அதிகரிக்க சீனியைச் சேர்ப்பது பல காலமாக வழக் கத்திலுள்ளது. இவ்வாறு கூறியவுடன் இந்த Butter fruit ஆபத்தானதா? அப்படியா? என இதைத் தவிர்க்க முயல்பவர்களையும் காணலாம். சீனி மட் டும் ஆபத்தானது. பழமல்ல. பழம் நல்லது என்பதால் அதனுடன் சேர்க்கப்படும் சீனி முதலிய எதுவும் ஆபத் தானதல்ல என்று அர்த்தமாகாது.


நெல்லிக்கனி விட்டமின்கள் நிறைந்த அற்புத மான இயற்கை உணவு. அதற்காக அதற்கு ருசியூட்ட சேர்க்கப்படும் சீனி ஆபத்தே ஆபத்துத்தான். அவ் வகை யில் 'நெல்லிக்கிரஷ்' எனும் நெல்லிச்சாறும் பிரச்சினைக் குரியதே. இஞ்சி போலவே நெல்லிக் கும் சீனி சேர்க்காமல் சாப்பிட முடியு மாயின் அதுவே சிறந்தது.

ஆபத்தற்ற மற்றொரு உணவுப் பதார்த்தம் தேயிலை ஆகும். தேயிலை ஒரு மருந்தாக இன்று ஏற்கப்பட்டு வருகின்றது. அதற்காக தேயிலை யினுள் சீனி, பால்மா சேர்க்கப்பட்டுத் தயாரிக்கப்படும் போது பால் தேநீர் ஏற்கப்பட முடியாத ஒன்றாகும். ஆபத்தற்ற தேயிலைக்கு ஆபத்தான சீனியும் பால்மாவும் சேர்க்கப்பட்டால் அது நீரிழிவு போன்ற நோய்களுக்கு கேடான உணவாக மாறிவிடும். இப் படித்தான் வெற்றிலையுடன் உட்கொள் ளும் பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு என் பவற்றில் வெற்றிலையின் நன்மை மறைந்துவிடும். வெற்றிலை மட்டும் தனித்து உண்பதில் கேடு எதுவுமில்லை. ஆனால் வெற்றிலை மெல்பவர்களில் எத்தனை பேர் பாக்கு, புகையிலையை விட்டு வெற்றிலையை மட்டும் மெல்வதற்கு விரும்புவர்? மேலே கூறிய பல



உதாரணங்களில் இருந்து தேயிலை, நெல்லி, பழங் கள், இஞ்சி போன்ற ஆபத்தற்ற உணவுகள் தமது தனித்தன்மையை இழக்க சீனி முதலிய ஆம்சங்கள் ஏதுவாகின்றன. எனவே ஒரு உணவுப் பொருள் ஆபத்தற்றது எனும் போது அதனுடன் எந்த விஸ்யத்தைக் கலந்து உண்டாலும் அது ஆபத்து இல்லாமலே இருந்துவிடும் என்று தவறாகக் கருதி விடக் கூடாது. துரதிஷ்டவசமாக இவ்வாறு மக்களை சிந்திக்கத் தூண்டி தமது விற்பனைப் பண்டங்களை விற்க முண்டியடிக்கும் கம்பனிகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. மெய்ப்பொருள் காணும் அறிவே நம்மைக் காக்கும்.

-டொக்டர் [illegible]



## பெருமூளை வளர்ச்சிக் குறைவால் பாதிக்கப்படும் 'கர்ப்ப' குழந்தைகள்

கர்ப்பத்திலிருக்கும் குழந்தைகளுக்கு பெருமூளைப் பகுதியில் வளர்ச்சியின்மை ஏற்படும். பிறக்கும் குழந் தைகளில் 6 சதவீதம் பேர் பெருமூளை வளர்ச்சி குறை பாட்டுடன் பிறக்கிறார்கள். இந்தக் குழந்தைகளுக்கு நெற்றியின் மேல் பகுதி வளர்ச்சி இருக்காது. அதனால் உருண்டையான தலைக்குப் பதிலாக சப்பையாக இருக்கும். மேல் பகுதி கூம்பி, குரங்கின் தலை போல் தோன்றும். இந்தப் பாதிப்பு கொண்ட சில குழந்தை களுக்கு முதுகுத்தண்டு வட பகுதி கண்ணாடி போல் மென்மையாக வெளியே தெரியும்.

பிரசவத்தின்போது, இத்தகைய குழந்தைகளை மென்மையாகக் கையாளா விட்டால் அந்தப் பகுதி யில் சிதைவு ஏற்பட்டுவிடும். இந்தப் பாதிப்புடன் பிறக் கும் குழந்தைகளுக்கு உயிர் இருக்கும். இதய துடிப் பும் நன்றாக இருக்கும். உடல் உறுப்புகள் வளரும். பார் வையும் இருக்கும். ஆனால் உடலில் உணர்வு இருக் காது என்பதால், குழந்தை அசையாது.

சிறுநீர், மலம் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் சக்தியும் இருக்காது. இந்தக் குழந்தைகள் எதிர் காலத்தை வீல் சேரில் கழிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**இத்தகைய பாதிப்பு ஏற்பட என்ன காரணம்?**

பெருமூளைப் பகுதி வளர்ச்சி குறைபாட்டிற்கு 'போலிக் அசிட்' பற்றாக் குறைதான் காரணம். பெண் கர்ப்பமான நான்கு மாதங்களில் வயிற்றுக் குழந் தைக்கு மூளையும், முது குத் தண்டுவடமும் முழுமை யாக வளரும். அந்த நரம் புகளுக்கு போலிக் அசிட் மற்றும் பி-12 விட்டமின் சத் துக்கள் தேவை.

கர்ப்பிணி தாய்மார்கள் சமச்சீரான சத்துணவு சாப் பிட்டு, தேவையான சத்துக் களைப் பெறவேண்டும். தாயின் உடலுக்கு தேவையான சத்துக்கள் கிடைத் தால், குழந்தைக்கு இத்தகைய மூளை வளர்ச்சிப் பாதிப்பு ஏற்படாது. தேவையான சத்துணவுகளை சாப் பிட வாய்ப்பில்லாத பெண்கள், கர்ப்பமான தொடக் கத்திலே டொக்டரிடம் சென்று, அவர் ஆலோசனைப் படி போலிக் அசிட் மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும்.

**எந்தெந்த உணவுகளில் போலிக் அசிட் சத்து இருக்கிறது?**

சைவ உணவுகளில் கீரை வகைகளில் குறிப் பிடத்தக்க அளவில் இருக்கின்றன. அசைவ உணவு களில் மீன், முட்டை, மாமிசத்தில் இருக்கிறது. கர்ப்ப மானதில் இருந்து, தேவையான சத்துணவுகளை உண்ணவேண்டும். கர்ப்பமான 16 வாரத்திற்குள் முக் கிய உறுப்புகள் வளர்ந்துவிடுவதால், அவை முழு வளர்ச்சி பெறும் அளவிற்கு கர்ப்பிணிகள் அந்த கால கட்டத்தில் சத்துணவுகளை உட் கொள்ளவேண்டும்.

இப்போதெல்லாம் கர்ப்பத்திற்கு ஒரு பெண் தயாரா கிவிட்டாலே, மூன்று மாதத்திற்கு முன்னால் இருந்தே [illegible] மாத்திரைகளை உட்கொள்ள பரிந்துரைக்கிறோம். கர்ப்பமான நான்காம் மாதம் வரை அதைத் தொடரவேண்டும். இதில் குறிப்பிடத் தக்க விஷயம் என்னவென்றால், இப்போது நிறைய தாய்மார்கள் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள்.

கர்ப்பிணிகளுக்கு சர்க்கரை நோய் இருந்தாலும், அவர்களுக்கு கர்ப்பகாலத்தில் சர்க்கரை நோய் ஏற் பட்டாலும் போலிக் அசிட் பற்றாக்குறை ஏற்படும். தாய்க்கு ஏற்படும் சிலவகை 'இன்பெக்ஷன்'களும் போலிக் அசிட் பற்றாக் குறையை ஏற்படுத்தும். கிராமப் பகுதி கர்ப்பிணிகள் பெருமளவில் போலிக் அசிட் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகிறார்கள்.

தாய் கர்ப்பமான 14-வது வாரத்தில் ஸ்கான் செய்து பார்த்தால், சிசுவுக்கு மூளை வளர்ச்சி குறைபாடு- முதுகுத்தண்டுவட பாதிப்பு இருந்தால் தெரிந்து விட லாம். தாய்மார்கள் போலிக் அசிட்டின் முக்கியத்து வத்தை உணர்ந்து கர்ப்ப காலத்திற்கு முன்பும்- பின்பும் அதில் கவனம் செலுத்தவேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சண்டே ரைம்ஸ் பத்திரிகையில்
மிருதுளா தம்பையா
எழுதிய கட்டுரை
தமிழில்: ஜெஸ்ரின்

# மனித விலங்குகள்



சிறுவர் பாலியல் வன்முறைகள் குறித்த புகார்கள் பெரும்பாலான வேளைகளில் சமூகத்தில் பொதுமக்கள் கொண்டுள்ள கருத்துகளின் காரணமாக மௌனிக்க வைக்கப்பட்டு அமைதியாக இருக்கும்படி செய்யப்படுகின்றன. ஆனால் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாகவும் எண்ணிக்கையில் அதிகரித்துவரும் சிறுவர் பாலியல் வல்லுறவுகளின் தாக்கங்களின் காரணமாகவும் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன.

சிறுவர் உரிமைகள் அதிகாரிகள் மற்றும் சமுதாய மாற்றத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் கூற்றுக்களின்படி சிறுவர்கள் உறவினர்கள் மற்றும் ஆசிரியர்களின் கைகளில் இரைகளாகி விடுகின்றனர். அண்மைய சில நீதிமன்ற வழக்குகளின்படி, சிலவற்றில் சிறுவர்கள் மீது குற்றமிழைத்தவர்கள் ஒன்றில் அவர்களது உறவினராகவோ அல்லது ஆசிரியராகவோ இருப்பதைக் காணமுடிகின்றது. இது உலக சிறுவர் உரிமைகள் செயற்பாட்டாளர்களினால் மனித இனத்திற்கு எதிராக அதிகரித்து வரும் ஓர் பாரிய குற்றச் செயலாகவே கணிக்கப்படுகின்றது.

சிறுவர் மற்றும் மகளிர் குறித்த நலன்களைத் திரட்டும் அமைப்புகளின் புள்ளிவிபரங்கள் மற்றும் பதிவேடுகளின்படி கிராமப்புறங்களில் இருந்தே இத்தகைய குற்றச் செயல்கள் அதிகளவில் இடம்பெறுவதாக அறியமுடிகின்றது எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர். அத்துடன் கிராமப்புற மக்களிடையே இதுபற்றி மேலும் தீவிரமான ஓர் விழிப்புணர்வினை உருவாக்குவதற்கு ஓர் புதிய செயல்திட்டம் நிச்சயமாக உருவாக்கப்படல் வேண்டுமெனவும் தெரிவிக்கின்றனர்.

மிக அண்மையில் அம்பலாங்கொடையிலுள்ள ஓர் பிரபல பாடசாலையில் கற்பிக்கும் பயிற்சி ஆசிரியர் ஒருவர் 13 வயது தொடக்கம் 17 வயது வரையிலான ஏழு மாணவிகளைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இவர் குறித்துப் பல புகார்கள் கிடைத்ததையடுத்தே இவர் கைது செய்யப்பட்டார். இவர் பலப்பிட்டிய மஜிஸ்ரேட் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதேபோன்று, சில தினங்களின் முன்பு அனுராதபுரப் பகுதியிலுள்ள நொச்சிக்கொல்லேவ என்ற இடத்துப் பாடசாலை அதிபர் ஒருவர் 7 வயதுச் சிறுமியான மாணவி ஒருத்தியைத் தனது அலுவலகத்தில் வைத்துப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதற்காக 11 வருட கடுூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன் பாதிப்புக்குள்ளான மாணவிக்கு நட்டஈடாக ஒரு இலட்சம் ரூபா வழங்கும்படியும் அத்துடன் ஐம்பதாயிரம் ரூபாவைக் குற்றப் பணமாகச் செலுத்தும் படியும் அவருக்கு நீதிமன்றத்தால் கட்டளையிடப்பட்டது.

சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பராயத் திருமணங்கள் அதிகளவில் இடம்பெறும் கிராமமான மகியங்கனையில் 15 வயது சிறுமியுடன் பாலியல் வல்லுறவுக்குட்பட்டமையால் ஒருவரைப் பொலிசார் கைது செய்தனர். சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர் பாதிப்புக்குள்ளான சிறுமியின் பாதுகாவலராவார். இச்சம்பவம் கடந்த வருடம் ஆவணி மாதத்தில் நடைபெற்ற போதிலும் இப்பொழுது தான் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

மற்றுமொரு சம்பவத்தில் மகளை வல்லுறவுக்குட்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட தந்தையொருவர் பதுளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமன்றி, 14 வயது மட்டுமேயுடைய மகளை 22 வயது இளைஞன் ஒருவருக்குத் திருமணம் செய்து வைத்த பெற்றோர் பற்றிய சாட்சியங்களைச் சிறுவர் மற்றும் பெண்களுக்கான அமைப்பினர் சேகரித்து வருகின்றனர். மேற்குறிப்பிட்ட 14 வயதுச் சிறுமி மாத்தளை வைத்தியசாலையில் இரட்டைக் குழந்தைகளை மிக அண்மையில் பிரசவித்துள்ளார்.

இவ்வருடம் தை மாதத்திலிருந்து சித்திரை மாதம் வரையிலான காலப்பகுதிக்குள் இவ்வாறான சிறுவர் மீதான பாலியல் வன்முறைகள் குறித்து 409 முறைப்பாடுகளைச் சிறுவர் மற்றும் பெண்களுக்கான அமைப்புப் பதிவு செய்துள்ளது. இவற்றில் 31 முறைப்பாடுகள் அனுராதபுரத்திலிருந்தும் 24 முறைப்பாடுகள் இரத்தினபுரியிலிருந்தும் பதிவாகியுள்ளன.

கடந்த வருடம் இவ்வமைப்பிற்கு 1385 எண்ணிக்கையிலான சிறுவர் பாலியல் வன்முறைச் சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இது 2010 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கையான 1098 உடன் ஒப்பிடுகையில் 26% அதிகரித்துள்ளதென்பதைக் காட்டுகின்றது.

சிறுவர் மற்றும் பெண்கள் அமைப்பின் பணிப்பாளரான ஜயந்த விக்கிரமசிங்க கூறுகையில் "கடந்தகாலச் சம்பவங்களைப் பார்க்கும் பொழுதில் பாதிப்புக்குள்ளானவர்களில் பெரும்பாலானவர்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களாலேயே வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இன்னும் பலர் அவர்களது தந்தைமார் அல்லது சிற்றப்பாமார்களினால், உறவினர்கள் மற்றும் அயலவர்களினால் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இவற்றினையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கையில் அந்நியர் தெரியாதவர்களினால் இவ்விதமான சம்பவங்கள் இடம்பெறுவது மிகவும் குறைவு" எனக் கூறினார்.

ஓர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான விக்கிரமசிங்கா கூறுகையில் " அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் அவர்களது தொழிலின் கௌரவமான நடத்தை குறித்துக் கவனம் செலுத்துவதில் உள்ள பற்றாக்குறை, குடும்பங்களில் பிரச்சினைகளின் காரணமாகப் பிரிவுற்று அதன் நிமித்தமாகப் பிள்ளைகளுக்கு ஒழுங்கான வழிநடத்தல், அன்பு, பராமரிப்பு என்பன கிடைக்காமல் புறக்கணிக்கப்படுதல் போன்றவையே சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் கற்பழிப்புகள் என்பவற்றிற்கு வழிகோலுபவையாக உள்ளன" எனக் கூறினார். அவர் மேலும் தொடர்ந்து கூறுகையில் "குடும்பங்களில் தாய்மார் வறுமையின் நிமித்தம் தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் செல்கையில் தம் பிள்ளைகளைத் தந்தையிடம் அல்லது பாதுகாவலரிடம் விட்டுச் செல்வதும் இவ்வாறான பாலியல் வன்செயல்களுக்குப் பங்களிப்பு வழங்கும் காரணிகளாக அமைந்து விடுகின்றன. எனினும் சிறுவர் உரிமை அமைப்புகளினால் மேற்கொள்ளப்பட்டுவரும் விழிப்புணர்வுச் செயற்திட்டங்களினால் பாதிப்படைபவர்கள் ஓரளவாவது முன்வந்து இத்தகைய பாலியல் வன்முறைகள் குறித்து முறையிடுவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். வயது குறைந்தவர்களுக்கிடையிலான திருமணங்களும் தமது கவனத்தை ஈர்த்துள்ளதாகக் கூறிய பணிப்பாளர் விக்கிரமசிங்க மேலும் தொடர்ந்து கூறுகையில் "சில கிராமப்புறங்களில் பெற்றோர்கள் தமது பாரம்பரிய சமூக சம்பிரதாயங்களின்படி திருமணம் செய்து வைத்துவிடுகின்றனர். எப்படியிருப்பினும் இது ஓர் சட்டபூர்வமற்ற செயலாகும். எமது அமைப்பின் பதிவுகளின்படி இந்தகைய இளம்பராயத் திருமணப் பதிவுகள் பிடிகல மற்றும் மகியங்கனை போன்ற இடங்களில் இடம்பெற்றுள்ளதாகக் காணப்படுகின்றது. இது விடயத்தில் சட்டத்திலும் ஓர் விரிசல் உள்ளது. அதாவது திருமணம் புரிவதற்காகிய ஆகக் குறைந்த வயது 18 எனச் சட்டம் கூறும் அதே வேளையில் பாலியல் உறவு கொள்வதற்குரிய வயதாக 16 ஐயும் அதிகார பூர்வமாக அங்கீகரிக்கின்றது. அப்படியாயின் 16ற்கும் 18ற்கும் இடையிலான வயது குறித்து சட்டம் மௌனமாகவே உள்ளது. இந்த இடைவெளியை நிரப்புவதற்காக சிறுவர் மற்றும் பெண்கள் அமைப்பு சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்வதற்கு நாட்டின் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குச் சில முன்மொழிவுகளை வழங்கியுள்ளது" எனத் தெரிவித்தார்.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனப் பணிப்பாளர் மேனகா கல்யாணரட்ண இதுபற்றிக் கூறுகையில் "குடும்ப உறுப்பினர்களாலோ அல்லது உறவினர்களினாலோ தகாப்புணர்வு அல்லது சிறுவர் பாலியல் வல்லுறவுகள் மேற்கொள்ளப்படுவது ஒன்றும் புதிதல்ல. சமயத்தில் அச்சுறுத்தி நேர்மையற்ற விதத்தில் நடத்தி முடிக்கக் கூடியவர்களாகச் சிறுவர்கள் இருப்பதனால், சிறுவர்கள் அடிக்கடி இவ்வாறான செயல்களுக்குப் பலியாகின்றார்கள். அல்லாமலும் குடும்பத்தில் அல்லது குடும்ப வட்டத்திற்குள் உள்ள இவ்வாறாகத் தவறிழைக்கப்பட்ட சிறுவர்களை வல்லுறவு கொள்வதற்கான இடைவெளிகளும் சந்தர்ப்பங்களும் அடிக்கடி வாய்க்கின்றன" என விபரித்தார்.

அவர் மேலும், சிறுவர் திருமணங்களை விபரிக்கையில் "இவ்வாறான செயல்களுக்கு அவர்களது பாரம்பரிய நம்பிக்கைகளைச் சம்பிரதாயங்களைக் குறைகூற முடியாது. ஆனால் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புகளுக்கான குறைபாடுகளே இதற்கான சமுதாயக் காரணிகளாக உள்ளன" எனக் கூறினார். திருமதி கல்யாணரட்ண மேலும் கூறுகையில் "வறுமை, பாடசாலையை விட்டு இடைவிலகல், சாதியை அடிப்படையாகக் கொண்டு பாரபட்சம் காட்டி ஒதுக்குதல், சமூகத்தில் கணவனின்றித் தனியாக வாழும் பெண்களுக்கான பாதுகாப்புக் குறைபாடு, வெளிநாடுகளில் தாய்மார் பணிபுரிதல் மற்றும் பெற்றோர்களுக்கிடையிலான துடிப்பழுக்கம் என்பவை சிறுவர்கள் இளவயதிலேயே திருமணம் புரிவதற்கான காரணங்களாகி விடுகின்றன" எனத் தெரிவித்தார். "மனைதைக் கலவரமடையச் செய்யும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாலியல் வன்முறைகள் குறித்து உடனடியாகக் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இவர்கள் எல்லாம் தமது அதிகாரத்தையும் தொழிலையும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்குத் தவறாகப் பயன்படுத்துகின்றனர்" எனக் கூறிய அவர் "ரியூசன் வகுப்புக்களுக்குச் செல்லத் தவறும் சிறுவர்களைப் பொறுப்பற்ற விதத்தில் அவமானப்படுத்தித் தண்டிப்பதாகச் சிறுவர்கள் எமக்குக் கூறுகின்றனர்" எனவும் விசனம் தெரிவித்தார்.

மேல்மாகாணத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் உரிமைகள் செயற்பாட்டாளராகச் செயற்படும் நகுலேஸ்வரி இராமச்சந்திரன் தெரிவிக்கையில் "இப்பிராந்தியத்தில் போதைவஸ்துப் பாவனையும் இணையத்தளம் மூலமான ஆபாசக் காட்சிகளுமே இத்தகைய செயல்களுக்குத் தூபமிடுகின்றன. பெரும்பாலும் 13 தொடக்கம் 16 வரையான வயதையுடைய சிறுவர்களே பெரிதும் பாதுகாப்பற்றவர்களாக உள்ளனர். இவர்களுக்கு பாலியல் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமே பாதுகாப்பினை ஏற்படுத்த முடியும். அதுமட்டுமன்றி வடக்கிலுள்ள அனாதைச் சிறுவர் இல்லங்கள் மற்றும் சிறுவர் இல்லங்களில் அதிகரித்துவரும் சிறுவர் பாலியல் வன்முறைகள் குறித்து நாங்கள் மிகவும் மனக்கலவரம் அடைகின்றோம்" எனக் கவலை தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன் - ஆங்சான் சுகி சந்திப்பின் முக்கியத்துவம்.?

**மன்மோகன் – சுகி சந்திப்பு சீன அரசிற்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் என்பது நிச்சயம். ஏற்கனவே சுகியை சீனவிஜயம் செய்யும்படி சீனத்தலைவர்கள் அழைப்பு விடுத்ததும் குறிப்பிடத்தக்கது. மியன்மார் இந்தியாவுக்கு எப்போதுமே முக்கியமான ஒரு அயல்நாடாகும். இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான நாகாலந்து, மிசோரம், மணிப்பூர் போன்றவற்றில் பிரிவினைவாதிகளுக்குத் தூண்டுதல் அளிக்கவும் பயிற்சி தரவும் சீனா மியன்மாரையே தளமாகக் கொண்டு இயங்க வருகிறது. சீனா இதை நிராகரித்தாலும் இதுவே உண்மை என்பதை உலகறியும்.**

மே மாத இறுதியில் மியன்மாருக்கு அரச முறைப்பயணம் மேற்கொண்ட இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங் அங்கு ஜனநாயகவாதியும் எதிர்க்கட்சி அரசியல்வாதியுமான ஆங்சான் சுகியை சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தி உள்ளார். இதற்கு முன் ஜனாதிபதி அப்துல் கலாம் தற்போதைய குடியரசுத் துணைத் தலைவர் ஹமீட் அன்சாரி போன்ற இந்திய அரசுத் தலைவர்கள் மியன்மாருக்கு விஜயம் செய்திருந்தபோதும் ஆங்சான் சுகி அப்போது வீட்டுக் காவலில் இருந்ததால் இந்த இந்தியத் தலைவர்கள் அவரை அப்போது சந்திக்க முடியவில்லை. இன்றோ வீட்டுக்காவலில் இருந்து விடுதலையாகி முதல் முறையாக நாடாளுமன்ற பிரவேசம் செய்தவராகவும் சுகி உள்ளார்.

சில மாதங்களுக்கு முன்பு அவர் நாடாளுமன்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்று முதல் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்ட பின்னர் மியன்மார் வந்து அவரை சந்தித்த உலகத் தலைவர்களில் மன்மோகன் முக்கிய இடம் பெறுகிறார்.

ஜனநாயகத்தின் நாயகமான இந்தியாவின் பிரதமர் விடுதேடி வந்து சந்திக்குமளவுக்கு ஆங்சான் சுகி முக்கியமானவரா என்றால் ஆம் என்பதே அதற்கு விடை. நோபல் பரிசை வென்ற ஆங்சான் சுகி நெல்சன் மண்டேலாவுக்கு சமமான ஜனநாயகவாதி. அவருக்கு கௌரவம் தருவதில் இந்தியா பின்னிற்காது என்ற செய்தியை மன்மோகனும் சோனியாகாந்தியும் வெளிப்படுத்தி உள்ளனர். இவ்விரு இந்தியத்தலைவர்கள் மட்டுமன்றி இந்திய எதிர்க்கட்சிகள் கூட இதை வரவேற்றுள்ளன.

வருடாந்தம் நடக்கும் ஜவஹர்லால் நேரு நினைவுப் பேருரையை அறிந்த தலைவை சுகியே நிகழ்த்தவேண்டுமென சோனியாகாந்தி கடிதம் ஒன்றையும் மன்மோகனிடம் கொடுத்து அனுப்பியுள்ளார். கடிதத்தை பெற்றுக் கொண்ட ஆங்சான் சுகி உடனடியாகவே அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒரு ஜனநாயகவாதியை சிரம் தாழ்த்தி வணங்கும் இந்தியாவின் இந்நடவடிக்கையை சீனா மிரட்சியுடன் பார்த்தவண்ணம் இருக்கும் என்பது நிச்சயம்.

மியன்மாரை சென்றடைந்த மன்மோகன் சம்பிரதாயப்படி அந்நாட்டின் இராணுவ ஜனாதிபதி ஜெனரல் தெய்ன் செய்ன சந்தித்த பின்பு அடுத்த வேலையாக உடனடியாக சுகியை சந்தித்தார். முதலில் சுகியின் வீட்டுக்கே மன்மோகன் நேராக செல்ல ஏற்பாடாகி இருந்தாலும் இராஜதந்திர சம்பிரதாயப்படி ஒரு நாட்டின் தலைவர் இன்னொரு நாட்டிற்கு அரசமுறைப்படி பயணமாகச் செல்லும்போது அவர் அந்த நாட்டின் தலைவரை மட்டுமே விடுதேடி சென்று சந்திப்பது வழக்கம். விருந்து தரும் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரோ ஏனைய அரசியல் தலைவர்களோ வருகை தந்திருக்கும் வெளிநாட்டுத் தலைவரைத் தேடிச் சென்று கௌரவம் செய்வதும் சம்பிரதாய நடைமுறையாகும். இதன்படி பதவி வகிக்கும் பிரதமரான மன்மோகன், சுகி வீட்டுக்கு செல்லாது அவரை ஹோட்டலில் சந்திக்க சுகிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

மன்மோகன் - சுகி சந்திப்பு சீன அரசிற்கு வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் என்பது நிச்சயம். ஏற்கனவே சுகியை சீனவிஜயம் செய்யும்படி சீனத்தலைவர்கள் அழைப்பு விடுத்ததும் குறிப்பிடத்தக்கது. மியன்மார் இந்தியாவுக்கு எப்போதுமே முக்கியமான ஒரு அயல்நாடாகும். இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களான நாகாலந்து, மிசோரம், மணிப்பூர் போன்றவற்றில் பிரிவினைவாதிகளுக்குத் தூண்டுதல் அளிக்கவும் பயிற்சி தரவும் சீனா மியன்மாரையே தளமாகக் கொண்டு இயங்கி வருகிறது. சீனா இதை நிராகரித்தாலும் இதுவே உண்மை என்பதை உலகறியும். இந்தியாவுக்கு பெரும் தலைவலியாக உள்ள மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களையுமே பங்களாதேஷ், மியன்மார், மற்றும் நேபாளம் ஊடாக சீனாவே தயார்செய்து அனுப்பி வருகிறது.

பங்களாதேஷ் இப்போது ஓரளவு இந்தியாவின் வழிக்கு வந்துவிட்டதுடன் நேபாளத்திலும் இந்திய ஆதரவு நிலைப்பாடு படிப்படியாக வேரூன்றும் நிலையைக் காணலாம். இந்நிலையிலும் மியன்மாரும் கைவிட்டுப் போகுமோ என்ற அச்சம் சீனாவுக்கு ஏற்பட சுகியின் எழுச்சி காரணமாகியுள்ளது.

மியன்மாரின் இராணுவ ஆட்சிக்குப் பின்புலத்தில் இருந்தது சீனாவே என்பதும் சுகியின் சிறையிருப்புக்கு மறைமுக காரணம் சீனாவே என்பதும் பலகாலமாக நம்பப்பட்டு வந்த விடயங்களாகும். எனினும் சுகி தேர்தலில் வென்றவுடன் அவரை சீனா வரும்படி அந்நாடு கேட்டுக் கொண்டது.

சுகி தனது பி.ஏ.படிப்பை டில்லியில் முடித்த பின்பே ஒக்ஸ்போர்டில் பி.எச்.டி படிப்பை மேற்கொண்டார். அவரது ஜனநாயக சிந்தனைக்கு அடித்தளமிட்டது இந்தியாவே என்பதை பிரதமர் மன்மோகனுடனான சந்திப்பில் சுகி நினைவு கூர்ந்துள்ளார். இது சீனப்பிசாசுகளின் வயிற்றெரிச்சலை மேலும் அதிகரித்த ஒரு விடயமே எனலாம்.

ஜவஹர்லால் நேரு வருடாந்த நினைவுப்பேருரை இந்தியாவில் அரசியல், இராஜதந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது.

மியன்மாரில் சுகி ஆட்சிக்கு வந்தால் மிசோரம், மணிப்பூர், நாகாலந்து முதலிய இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் மட்டுமன்றி மாவோயிஸ்ட் கிளர்ச்சியின் கோலோச்சும் சத்திஷ்கர், ஒரிசா, பீஹார், மேற்கு வங்கம் முதலிய இந்திய மாநிலங்களுமே மீட்சிபெறலாம்.


சுகி இந்தியாவுடனுள்ள நெருக்கத்தையும் பெரிதும் போற்றுகிறார். அவருக்கு சமாதான நோபல் பரிசு சீனா தந்தது. அவரது கணவர் ஒரு வெள்ளையினத்தவராக இருந்தமை, அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டபோது அவரது மகன்மார் இருவரும் மேற்குநாடுகளிலேயே தொடர்ந்து தங்கி கல்விகற்றது, அவருமே தனது பி.எச்.டியை (கலாநிதிப்பட்டம்) ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமொன்றில் கற்றது என சுகிக்கும் மேற்குலகுக்கும் பிரிக்கமுடியாத நிரந்தரத் தொடர்புகள் நிறைய உள்ளன. எனவே, இந்தியாவுடன் நண்பராவதற்கு முன்பே மேற்குலகுடன் அவர் நெருங்கிவிட்டார் என்பதே உண்மை.

அமெரிக்கா போன்று மியன்மாரின் இராணுவ ஜுண்டா ஆட்சியாளர் மீது நெருக்கடி தரும் விதமாக பொருளாதார தடையை எடுத்த எடுப்பில் பிரயோகிக்க இந்தியாவால் முடியவில்லை. இந்தியப் பொருளாதாரம் இப்போதுதான் ஓரளவு தலைநிமிரத் தொடங்கி உள்ளது. எனவே சுகிக்கு ஆதரவாக இராணுவ ஆட்சியாளரை பந்தாடும் நடவடிக்கைகளை அமெரிக்கா எடுத்ததுபோல் இந்தியாவால் செய்ய இயலாது போனது. இந்தியாவின் இந்த நிர்ப்பந்தங்களை சுகியும் நன்கு அறிவார்.

எனவே, இந்தியா தார்மீக ரீதியில் தனக்கு ஆதரவானதே என்பதில் அவருக்கு சந்தேகமில்லை. வேறுவார்த்தைகளில் சொல்வதனால் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிக்க நிர்ப்பந்தங்கள் இருந்தது போல சுகிக்கு நூறுவீத வெளிப்படை ஆதரவைத்தர முடியாது இந்தியாவின் கைகள் கட்டப்பட்டே இருந்தன. இன்று அமெரிக்க முன்முயற்சியால் இராணுவ ஆட்சி தளர்ந்தெறியப்படும் அளவுக்கு சூழ்நிலைகள் மாறி இருப்பதால் சுகியை அரவணைக்க இந்தியாவுக்கு இப்போது காலம் கனிந்துவிட்டது எனலாம்.

**அபிஜித்**

தரையில் இருந்து புறப்பட்டு எதிரிகளின் ஏவுகணை, போர் விமானம், உளவு விமானங்களை தாக்கி அழிக்கும் திறன் படைத்த ஆகாஷ் ஏவுகணைகள் ஏற்கனவே இந்திய ராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணைகள் 25 கி.மீ. தூரம் சென்று தாக்க கூடியவை. 60 கிலோ எடை கொண்ட ஆயுதங்களை தாங்கி செல்ல முடியும். ஒடிசா மாநிலம் பலாசூர் கடற்கரையில் உள்ள சோதனை தளத்தில் இந்த ஏவுகணை மே 24, 26, 28 மற்றும் இந்த மாதம் 1ம் தேதிகளில் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. இந்நிலையில் மீண்டும் விமானப்படைக்கான ஆகாஷ் ஏவுகணை இம்மாதம் 06 ஆம் திகதி சோதனை செய்யப்பட்டது. ஆளில்லா விமானத்தில் பறக்கவிடப்பட்ட இலக்கை ஏவுகணை துல்லியமாக தாக்கி அழித்ததாக ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுவாக இப்பொழுது ஆதிவாசிப்பிள்ளைகள் பாடசாலைக்கு போகிறார்கள். இங்கு அநேகமாக பெண் பிள்ளைகள்தான் படிக்கிறார்கள். ஆண் பிள்ளைகள் இரண்டு மாதம் பாடசாலை போவார்கள் பின்னர் மூன்று மாதம் போக மாட்டார்கள். வறுமை என்று சொல் லப்பட்டாலும் ஆண் பிள்ளைகள் அநேகமாக படிப்பதில் ஆர்வம் காட்டாமல் காடுகளிலேயே சுற்றித் திரிவதை விரும்புகிறார்கள். அதுதான் அவர்களுக்குப் பிடித்த மானதும் கூட.

அப்படி படித்தும் அரசாங்க உத்தியோகம் பார்க்க யாரும் போனதாகத் தெரியவில்லை. கடைகளில் வேலைக் கும் வேறு கூலி தொழில்களுக்கும்தான் போகிறார்கள்.

இப்பொழுது ஆதிவாசி பெண் பிள்ளைகள் மத்தியில் தமது சமூகம் தொடர்பான ஆர்வம் வருகிறது. பாடசாலைக்கு போகும் சிறியவது என்ற சிறுமி, தான் ஒரு நேர்ஸ் ஆக வர விரும்புகிறாள். தன் ஊர் மக்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்புகிறாள் சந்தமாலி என்ற பாடசாலைச் சிறுமி. நான் ஒரு ரீச்சராக வந்து கல்விபுகட்ட வேண்டுமென்று விரும்புகிறாள் குசுமாவதி என்ற ஆதிவாசிச் சிறுமி.

இப்படி அந்த பிஞ்சு உள்ளங்கள் மத்தியில் எதிர் காலத்தின் பிரகாசம் ஆசையும் அவாவும் நிற்கின்றது.

வளர்ந்த பெண்கள் அநேகமான நேரங்களில் பேசா மலே இருக்கிறார்கள். ஆதிவாசிகளும் ஆண்நிலை வாத சமூகமாகவே இருக்கின்றது. ஆண்கள்தான் எல்லா முடிவுகளையும் எடுக்கிறார்கள்.

கூலிவேலைக்கு ஆண்களும்பெண்களும்போகிறார்கள். சின்ன சின்ன வியாபாரமும் செய்கிறார்கள். யானை

# மாற்றமுறும் ஆதிவாசிகள்!

நூலன் முதன் முதலில் இந்த ஆதிவாசிகளின் காட்டுக்குள் போகிறேன். ஆதி வாசித் தலைவர் வன்னியலத்தோவை முதன் முதலில் வெளி உலகத் துக்கு தோளில் கோடரியுடன் தொலைக்காட்சியில் தனக்கு பக்கத்தில் இருத்தி காட்டியவர் எனக்கு தெரிய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தான்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது காணி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரை ஏக்கர் காணி மட்டும் கொடுத்து விட்டு காமினி திஸநாயக்கா செத்துப்போய் விட்டார். காடுகளுக்குப் போகலாம் வேட்டையாடலாம் யாரும் உங்களுக்கு தொந்தரவு கொடுக்கமாட்டார்கள் என்று அவர் உயிருடன் இருந்த போது வாக்குறுதி வழங்கினாராம். இது நடந்தது 1992 இல்.

1994 ஒக்டோபர் 24 ஆம் திகதி காமினி திஸநாயக்கா கொழும்பில் வைத்து கொல்லப்பட்டு விட்டார்.

அந்தக் காணிகளில் வந்து அமர்ந்த பிறகு தங்களை வேட்டையாட இலங்கை அரசு அனுமதிக்கவில்லை என்று கவலையோடு தெரிவிக்கிறார். ஹெனானிகலை பகுதியில் வசிக்கும் ஆதிவாசிகளின் தலை வரின் மகனான கலுபண்டா. தாங்கள் அரசினால் ஏமாற்றப்பட்டதாகவே அவர்கள் நினைக்கின்றனர். தாங்கள் வேட்டையாட காட்டுக்குள் போனால் வன பாதுகாப்பு அதிகாரிகள் பெரும் கெடுபிடிகளை விதிக் கிறார்கள் என்கிறார் அவர்.

தாங்கள் ஆதிவாசிகள். தங்கள் வாழ்க்கை வேட்டை யாடுவது. அதனை விடுத்து தங்களால் வேறு ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் காடுகளை விட்டு வேறு எங்கும் போக முடியாது என்கிறார் அவர்.

வேட்டையாடிய மிருகத்தோடு பிடிபட்டால் 15 ஆயிரம் ரூபா தொடக்கம் 20 ஆயிரம் ரூபா வரைத் தண்டம் அறவிடுகிறார்கள் நீதி மன்றத்தில். இது பெரும் அநியாயம்.

இதனால் தங்கள் வீடுகளை அல்லது காணிகளை விற்றே தண்டப்பணத்தை கட்ட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் அவர்கள். காமினி திஸநாயக் காவை அவர்கள் இன்றும் சபித்துக்கொண்டிருக் கிறார்கள்.

அவர்களுக்கு இருக்க இடப்பிரச்சினை, நீர்ப்பிரச் சினை பெரும் சிக்கலாகவே இருக்கிறது. ஆற்றோரங் களில் சுதந்திரமாக இருந்தவர்களை அங்கிருந்து அரசு முற்றாக அகற்றி விட்டதாக குறை கூறுகின்றனர். தங்களின் சுதந்திரம் பறி போய் விட்டதை எண்ணாத நாட்களில்லை அவர்கள்.

அரசியல்வாதிகள் எவரையுமே நம்ப முடியாமல் இருக்கிறது என்று ஆதிவாசிகளின் தலைவரின் மகன் உருவரிகே பொஞ்ஜோ குணபண்டா லஜ்ஜோ சொல்கிறார்.

சிங்களவர்கள் ஆதிவாசிகளோடு பல இடங்களில் முரண்டு பிடிக்கின்றனர். சில வேளைகளில் அவர் களின் குடிசைகளுக்கு தீ வைக்கிறார்கள்.

சிங்களவர்கள் ஆதிவாசிகளை 'வெத்தா' என்றே அழைக்கிறார்கள். அவர்களை மதிப்பதில்லை அவர் களுக்கு இடைஞ்சல் கொடுக்கிறார்கள் என்கிறார் பிங்கொட வரகே தலைவர்.

இப்பொழுது தமது சந்ததியில் ஆறு பேர் மட்டுமே இருப்பதாக அவர் தெரிவிக்கிறார். அவருக்குத் தனது பரம்பரை முடிவுறும் பயம் மேலோங்கி இருக்கிறது. சிங்களவர்கள் ஆதிவாசிகளோடு கலப்பதை விரும் பாவிட்டாலும் கூட பல காதல் கலப்புத் திருமணங்கள் ஊடாக இந்நிலைமை மாறி வருவதாக சிங்களவர் ஒருவரை காதலித்து மணம் முடித்த ஆதிவாசிப் பெண் லீலாவதி தெரிவித்தார்.

இவர் ஆரம்ப பாடசாலையொன்றின் ஆசிரியராக இருக்கிறார். தனக்கு சிங்கள மக்கள் மத்தியில் மதிப்பு இருப்பதாகவும் சொன்னார்.

அவர் ஆதிவாசிகளில் படித்த பெண்ணாக இருக்கிறார். அவர் படித்தபோது பாடசாலையில் வைத்துதான் சிங்களப் பையன் ஒருவரைக் காதலித்திருக்கிறார் பின்னர் அவரை மணம் முடித்து விட்டார்.

ஆதிவாசிப்பிள்ளைகளில் பெண் பிள்ளைகள் கெட்டிக் காரராக இருக்கிறார்கள். அவர்கள் நன்றாகவே படிக்கின் றனர். முதலாம் தரத்திலிருந்து பன்னிரண்டாம் தரம் வரை படித்த வர்களும் இருக்கிறார்கள். அத்தோடு சிங்களப் பிள்ளை களில் இருந்து பெரிதாக அவர்களிடம் வித்தியாசம் காணப்பட முடியாது. ஆனால் அவர்கள் இருக்கும் இடங் களுக்கு அருகில் அநேகமாக கிராமங்கள்தானே இருக் கிறன. எனவே காட்டை அண்டிய கிராமங்களில் இருந்து வருகின்ற பிள்ளைகளையும் இவர்களையும் பெரிதாக பிரித்து பார்க்க முடிவதில்லை.

வீட்டில்தான் அவர்களுக்கான ஊக்கம் கொடுக்க ஆட்களில்லை. பிள்ளைகள் தானாகவே படிக்க வேண்டும். பெற்றோர் கல்வியறிவு இல்லாதவர்களாக இருக்கும் பொழுது பிள்ளைகளின் கல்விபுகட்டலில் அவர்கள் அக்கறைப்பட முடியாது. அவர்களுடைய வீட்டில் பேசும் மொழி வடிவம் வேறு. பாடசாலையில் சிங்களம் படிக்கி றார்கள். இது ஒரு பிரச்சினை. அவர்கள் சுய முயற்சியிலேயே படிக்கிறார்கள்.

அத்தோடு பாடசாலையில் ஏனைய சிங்கள பிள்ளைக ளோடு கலக்கும் பொழுது மிக அவதானமாகவே இருக்கி றோம். இவர்கள் ஆதிவாசிகள் என்ற தாழ்வு நிலையை ஏற்படுத்தாமல் இருக்க மிகவும் கவனமாகவே வகுப் புகளில் கையாள்கிறோம் என்கிறார்கள் ஆசிரியர்கள்.

ஆசிரியர்களும் அவர்களை கரிசனையோடு நடத்து கின்றார்கள். ஆனால் ஆண் பிள்ளைகள் படிப்பை இடை நடுவில் விட்டு விடுவார்கள். பெண் பிள்ளைகள் படிக் கிறார்கள். அரசாங்கம் ஏனைய பிள்ளைகளுக்கு கொடுப் பது மாதிரி வெள்ளைச் சீருடைகளை தருகிறது. ஆனால் ஒரு வெள்ளைச் சீருடை எத்தனை நாட்களுக்கு போதும்?

இடையில் துணி வாங்க கூட அவர்களுக்கு கஸ்ட மாக இருக்கிறது. அடுத்த வருடம் வரை அவர்கள் காத்திருக்க வேண்டும். கூலி வேலைக்குப் போய்தான் ஆதிவாசிப்பெற்றோர் வாழ்க்கை நடத்துகின்றனர். அநேகமாக பிள்ளைகள் காலை நான்கு மணியில் இருந்தே தயாராகிறார்களாம். காலையில் பெற்றோ ருக்கு வீட்டு வேலை செய்து விட்டுத் தான் பாடசா லைக்கு வரவேண்டும். காலையில் நெடுந்தூரம் போய் வாய்க்காலில் அல்லது ஆற்றில் குளித்து விட்டு வருவது அவர்களுக்கு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அத்தோடு பல மைல்தூரம் காடுகளுக்குள்ளால் நடந்து தான் பாடசாலைக்கு வரவேண்டும் அதுவும் அவர்க ளுக்குச் சிரமமான விடயமாக இருக்கிறது. இங்கு எல்லா இடங்களிலும் பஸ் போக்குவரத்து கிடையாது அதனால் கல்வியில் அவர்கள் சோர்ந்து போகின்றனர்.

ஆனால் பத்தாம் வகுப்பு வரை படித்தவர்களும் இருக் கின்றனர். அவர்களில் ஒரு பட்டதாரியும் இருக்கின்றார். என்றார் தம்பானை பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர் குணசேன.

பாடசாலைக்குச் சென்று தமது பிள்ளைகள் படிப் பதை பல ஆதிவாசிகள் விரும்பினாலும் இதனால் தமது கலாச்சாரம் பறிபோகிறது என்று அவர்கள் பயப்படத் தான் செய்கின்றனர். பெரிய படிப்பு படித்துவிட்டு தமது பெற்றோரை ஆதிவாசிகள் என்று சொல்ல பிள்ளைகள் தயக்கம் காட்டி விடுவார்களோ என்ற அச்சமும் அவர்கள் மத்தியில் இருக்கிறது. பெரிய படிப்பு என்று அவர்கள் நினைப்பது பத்தாம் வகுப்பைதான்.

ஏற்கனவே சிதறிப் போய் விட்டது எமது இனம் மேலும் துண்டாடப்பட்டு விடுமோ என்ற அச்சமாக இருக்கிறது என்கிறார் அடுத்த ஆதிவாசி தலைவராக வர இருக்கும் ஊருவரிகே பொஞ்ஜே குணபண்டே லஜ்ஜோ.

புதிய சமூக மாற்றத்துக்கு ஆதிவாசிகள் இனம் முகம் கொடுக்க தலைப்பட்டு விட்டதை அங்கு உணரக்கூடிய தாக இருந்தது. மின்சாரம் இல்லாமல் இருந்த இடத்தில் ஒன்றிரண்டு ஊர்களுக்கு மின்சாரம் கொடுத்திருக் கிறார்கள். இது இருட்டில் காடுகளில் வாழ்ந்த அவர்களது சமூக வாழ்வை குலைக்கிறது.

ஆதி வாசிகளின் தலைவருக்கு சி.டி.எம்.ஏ.தொலை பேசி ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டிருக்கிறது அவருக்கு கட்டணம் இல்லாமல் பேசலாம்.



முடி, யானைத்தந்த மோதிரம், புலிப்பல்லு, கருங்காலி மரத்தில் செய்த கரு தெய்யோ(கறுப்பு தெய்வ சிலை உருவம்),சுரக்குடுவை, மரக்கோப்பை, மரத்தில் செய்த மாலைகள். ஆற்றுக்கல் என்று விற்கிறார்கள்.

ஒவ்வொன்றுக்கும் அதிக விலை சொல்கிறார்கள். அவர்களுக்கு வியாபார விடயம் ஒடுதில்லை நிறைய காசை ஒரே நேரத்தில் பெற்று விடலாம் என்று நினைக் கிறார்கள் அதுதான் அவர்களின் பொருட்களை ஆட்கள் வாங்குவது குறைவு.

அவர்களின் வீடுகள் களி மண்ணினால் தடி வைத்து கட்டப்பட்டிருக்கிறது. மேற் பகுதிக்கு கூரைக்கு காய்ந்த புற்களையே பாவிக்கிறார்கள். மரத்தில் வீடு கட்டி அங்கும் வாழுகிறார்கள்.

உல்லாசப்பிரயாணிகளை அழைத்து வரும் ஹோட்டல்காரர்கள் ஆதிவாசிகளை வைத்து மரங்களில் பொறி வைப்பது ,தேன் எடுப்பது, கல்லில் நெருப்பு எடுப்பது, வில் அம்பு விடுவது போன்ற விடயங்களை செய்து காட்டச்சொல்லி பணம் கொடுக்கிறார்கள்.

ஒரு மனித கூட்டத்தை காட்சிப்பொருளாக்கி இன்னொரு மனிதக்கூட்டம் பார்த்துச் சிரிக்கிறது, மகிழ்கிறது. மனதுக்குள் நெருடியது எனக்கு. அவர்கள் சோறு சாப்பிடுகிறார்கள். இறைச்சியை வேகவைத்தும் சமைத்தும் சாப்பிடுகிறார்கள். நாங்கள் லண்டனில் 'பாபகியு' என்று நெருப்பில் சுட்டு கடையில் பெரு விலை கொடுத்து சாப்பிடுகி றோம். அதனைத்தான் அவர்கள் தினமும் சாப்பிடு கிறார்கள்.

அரசாங்கத்தின் உதவிகள் எல்லாம் வேடுவ தலைவரின் இடமான தம்பானைக்குதான் போகிறது மற்ற இடங்களுக்கு வருவதில்லை என்று மற்றக் காடுக ளில் இருக்கும் வேடுவர்கள் சொல்கிறார்கள்.

ஆனால், அரசாங்கத்திடம் எந்த கோரிக்கையும் வைக்காமல் அவர்கள் கொடுப்பதை மட்டும் நாங்கள் வாங்குகிறோம். அவர்களாக பார்த்து கொடுத்தால் மட்டும் தான் ஏதாவது உதவி வரும் என்கிறார் வேடுவத் தலைவர் வன்னியலத்தோ.


தேனையும் தண்ணீரையும் சேர்த்து கருப்பட்டியும் சேர்த்த ஒரு பானத்தை சிரட்டையில் ஊற்றிக் குடிக்கத் தந்தார்கள். அது ஒரு ஆரோக்கிய பானம்.

ஆதிவாசிகள் ஒரு அதிசயமாகவும் இனமாகவே இருக்கிறார்கள் இலங்கையில்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழிலாளர் சொத்தை சூறையாட இடமளிக்காதீர்!

இரா. சந்திரசிகாமணி

நிலத்தைப் பண்படுத்தி தேயிலைக்கன்றுகளைப் பயிரிட்டு அவற்றை தமது சொந்தக் குழந்தைகளைப் போன்று பாதுகாத்து பயன் தரும் செடிகளாக வளர்த்து கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கின்றவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். ஆனால் அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை. நாளாந்தம் அரைப்பட்டினி தான். அப்படி இருந்தும் கூட தோட்டத் தொழிலாளர்கள், எங்கள் ஊர் என்பது போல் எங்கள் தோட்டம் என்றே உரிமையுடன் கூறுகின்றனர்.

உலகிலேயே தரமான ருசியான விலைமதிப்புள்ள தேயிலையை உற்பத்தி செய்யும் நாடு இலங்கை என்று பெருமை பேசிக் கொள்கின்றோம். தேயிலை அராய்ச்சி தொடர்பாக சர்வதேச உச்சிமாநாடுகளையும் கருத்தரங்குகளையும் நடத்துகின்றது இலங்கை அரசாங்கம்.

இம்மாநாடுகளிலும் கருத்தரங்குகளிலும் கலந்து கொள்ளும் சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு இங்கு உற்பத்தி செய்யப்படும் முதல் தரமான தேயிலையில் தயாரிக்கப்பட்ட தேநீர் பரிமாறப்படுகின்றது.

ஆகா! என்ன பிரமாதம், என்ன சுவை, இப்படியான ஒரு தேநீரை இன்று தான் முதன் முதலாகப் பருகுகின்றோம். சீனியும் பாலும் வேண்டாம். இரத்தம் போன்ற தேநீரை துளித் துளியாக சுவைத்துப் பருகுவதைக் காண்கின்றோம்.

ஆனால், இந்த சர்வதேசப் பிரதிநிதிகளுக்குத் தெரியாது. தமது கைகளில் இருக்கும் தேநீர் கோப்பையில் கலந்திருப்பது அதனை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களின் வியர்வைத் துளிகளும் இரத்தமும் தான் என்பது.

கொட்டும் மழை, சுட்டெரிக்கும் வெயில், கொட்டும் குளவிகள், உயிர் பறிக்கும் பாம்புகள் என அத்தனை சவால்களுக்கும் மத்தியில் தமது உயிரையும் பணயம் வைத்து தேயிலையை உற்பத்தி செய்கின்றனர் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்.

அவர்கள் உற்பத்தி செய்து கொண்டு வரும் தேயிலை தளிர்களைப் பதப்படுத்தி, அரைத்து ருசிமிக்க தேயிலையைத் தயாரிப்பதுடன் அவற்றைத் தரம் பிரித்து, பெட்டிகளில் அடைத்து, லேபல் அடித்து, விற்பனைக்குத் தயார் செய்வது வரை அத்தனை வேலைகளையும் செய்பவர்கள் இந்தத் தொழிலாளர்கள் தான்.

வெயில், மழை படாமல் குளிரூட்டிய அறைக்குள் இருந்து கொண்டு மேற்பார்வை செய்யும் அதிகாரிகளும் தோட்டத் துரைமாரும் கட்டுக் கட்டாக லட்சங்களை எட்டும் சம்பளம் பெறுகின்றனர்.

இவர்களுக்கு சுகபோக பங்களாக்கள், கூப்பிட்ட குரலுக்குப் பணியாட்கள், சொகுசு மிக்க வாகனங்கள் எனப் பல சலுகைகளும் வசதிகளும் தோட்டக் கம்பனியின் செலவிலேயே வழங்கப்படுகின்றன.

அதேவேளை, நிலத்தைப் பண்படுத்தி தேயிலைக்கன்றுகளைப் பயிரிட்டு அவற்றை தமது சொந்தக் குழந்தைகளைப் போன்று பாதுகாத்து பயன் தரும் செடிகளாக வளர்த்து கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கின்றவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். ஆனால் அவர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லை. நாளாந்தம் அரைப்பட்டினி தான்.

அப்படி இருந்தும் கூட தோட்டத் தொழிலாளர்கள் எங்கள் ஊர் என்பது போல் எங்கள் தோட்டம் என்றே உரிமையுடன் கூறுகின்றனர்.

ஆனால், அங்கே அதிகாரிகளாக இருப்பவர்கள் அந்த தோட்டத்தின் பெயரை அந்நியர்கள் போன்று கூறுவர். இந்த அதிகாரிகள் ஒரு போதும் எங்கள் தோட்டம் என்று பற்றுடன் கூறியதில்லை. அப்படிக் கூறவும் மாட்டார்கள்.

இப்பொழுது இங்கு கூறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்கும் காரணம் உண்டு.

அரசுக்கு சொந்தமான தேயிலைத் தோட்டங்களை தனியார் கம்பெனிக்காரர்களுக்கு குத்தகைக்குக் கொடுத்து பயன் தரும் தோட்டங்களைக் கூட்டுச் சுவராக்கி விட்டனர்.

இத் தோட்டங்களைத் தனியார் கம்பனிகளுக்கு ஒப்படைப்பதை தோட்டத் தொழிலாளர்கள் ஆரம்பம் முதலே எதிர்த்து வந்தனர். ஆனால் இந்த அதிகாரிகள் எவரும் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் தொழிலாளர்களையும் தொழில் துறையையும் பாதுகாக்க வேண்டிய தொழிற்சங்க முதலாளிமார்களும் தோட்டங்களை தனியார் கம்பனிகளுக்குத் தாரை வார்ப்பதற்குப் பக்கபலமாக இருந்ததுடன் பினாமிகளின் பெயரில் தோட்டங்களையும் வாங்கி உள்ளனர்.

இந்த தொழிற்சங்க முதலைகள் தொழிற்சங்கத் தலைவர்கள் என்ற பெயரில் பாலுக்கும் காவலாக பூனைக்கும் தோழனாக இருக்கின்றனர்.

இதற்கு ஒரு உதாரணம் தான் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாகத் தோட்டத் துரைமார் சம்மேளனத்துடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தம். ஏனைய துறைகளைப் பொறுத்தவரையில் கூட்டு ஒப்பந்தம் என்பது தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காகவும் தொழில் உத்தரவாதத்திற்காகவும் செய்து கொள்ளப்பட்டவை.

ஆனால், தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக செய்து கொள்ளப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தம் தோட்டத் தொழிலாளர்களின் கழுத்தில் போடப்பட்ட சுருக்காகவே அமைந்துள்ளது.

இதன் பயனை இந்த அப்பாவித் தொழிலாளர்கள் இப்பொழுது அனுபவித்து வருகின்றனர்.

தோட்டங்கள் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்ட போது, அங்கு பணி புரியும் தொழிலாளர்களின் தொழில் உத்தரவாதம், ஆட்குறைப்பு செய்யாமை, தோட்ட வளங்களைப் பாதுகாத்தல், பாரம்பரிய உடைமைகளைப் பாதுகாத்தல் என்பன கட்டாயப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இந்த தோட்டக் கம்பெனிகள் எல்லாம் உடன்பட்டதற்கு மாறாகவே செயற்படுகின்றனர்.

* தோட்டங்களில் சொத்தான விலைமதிக்க முடியாத பாரிய மரங்கள் வெட்டி விற்கப்படுகின்றன.

\+ பெறுமதிமிக்க கற்பாறைகள் உடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

* தொழிற்சாலைகள் மூடப்பட்டு இயந்திரங்கள் திருட்டுத் தனமாக விற்கப்படுகின்றன.

ஆரம்பத்தில் இவற்றைத் தட்டிக் கேட்க எவரும் இல்லை. தொழிலாளர்களின் ஏக தலைவர்கள், பாதுகாவலர்கள் என்று கூறிக் கொள்ளும் தொழிற்சங்கத் தலைவர்கள் ஆரம்பத்தில் இதனைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

முதற்கட்டமாக ஒரே கம்பெனி நிர்வாகத்தின் கீழ் வரும் மூன்று - நான்கு தோட்டங்களை இணைத்து, தனித்தனியாக இயங்கி வந்த தொழிற்சாலைகளை மூடி நான்கை மூன்றாக்கி, மூன்றை இரண்டாக்கி, இரண்டை ஒன்றாக்கி விட்டனர்.

இதன் அடிப்படையில் மலையகத்தில் பல தொழிற்சாலைகள் ஏற்கனவே மூடப்பட்டு விட்டன. பல தொழிற்சாலைகள் சிறுதோட்ட உரிமையாளர்கள் அமைப்பிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனையே கடிப்பது போல் இப்பொழுது தொடர்ச்சியாக தொழிற்சாலைகளை மூட ஆரம்பித்து விட்டனர். தொழிற்சாலையில் சில திருத்தங்களை செய்யப் போகிறோம் என்று கூறிக் கொண்டு தற்காலிகமாக மூடுகிறோம் என்றவர்கள் நிரந்தரமாக மூடிவிடுகின்றனர்.

தொழிற்சாலைகள் இவ்வாறு மூடப்படுவதால் தோட்டத் தொழிலாளர்களுக்கே பெரும்பாதிப்பு ஏற்படுகின்றது. முதற்கட்டமாக தொழில் இழப்பு, அதன் மூலம் அவர்கள் பெற்று வந்த அடிப்படை சலுகைகள், வேலை நாட்கள் குறைப்பு எனப் பல வழிகளிலும் தொழிலாளர்களின் வயிற்றில் அடிக்கப்பட்டுள்ளன. கடந்த சில வாரங்களாக கந்தப்பளை பார்க் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். மூடப்பட்டுள்ள தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டும் என்றே இவர்கள் இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பல மட்டங்களிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளினால் எந்தவிதமான நல்ல தீர்வும் கிட்டவில்லை. தோட்ட நிர்வாகம் விடாப்பிடியாகவே நிற்கின்றது.

இத்தோட்டத்தில் பல தொழிற்சங்கங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் இருக்கின்றனர். தொழிலாளர்கள் தொழிற்சங்க பேதங்களுக்கு அப்பால் வர்க்க ரீதியாக ஒன்றுபட்டு போராட்டம் நடத்துகின்றனர். இப்போராட்டம் கொச்சைப்படுத்தப்படக் கூடாது.

போராட்டம் நடத்தும் தொழிலாளர்களின் தலைவர்கள் பலர் அரசுக்கு முண்டு கொடுக்கும் அரசியல்வாதிகளாகவும் அமைச்சர்களாகவும் இருக்கின்றனர்.

இவர்கள் உண்மையாகவே தொழிலாளர்கள் மீது அக்கறை உள்ளவர்களானால் இவ்விடயத்தை நேரடியாகவே பெருந்தோட்டத் துறை அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் முன் கொண்டு சென்று தொழிற்சாலைகள் மூடப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

தோட்டத் தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் சொத்து. அதனை சூறையாட இடமளிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடையே தற்காப்பு ஆயுதம்

மகளிர் சுடர்

வீடே உலகம் என்று முடக்கப்பட்டுக் கிடந்த பெண்ணினம் உலகமே வீடு என விசால அறிவோடு வெளிப்பட்டுள்ள இன்றைய காலத்திலும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் தொடர்ந்தபடியே உள்ளன என்பது அவலகரமான உண்மையாகும்.

பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் வகுக்கவும் பெண்கள் முன்வந்துவிட்ட இந்தக் காலத்திலும் பெண்கள் மீதான வக்கிரத் தாக்குதல்கள் ஏன் குறைவடைவில்லை என்பதை சமூகம் கவலையோடு சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளது.

அடுப்பங்கரையில் மட்டுமே அடைந்து கிடந்த பெண்கள் ஆட்சி மன்றங்களில் அடி பதித்திருக்கும் இக்காலத்திலும் பெண் முன்னேற்றம், பெண் விடுதலை ஆகியவை குறித்த சரியான வரையறைகள் பெறப்படாமலே உள்ளன.

ஆண்களை விடக் குறைவான அளவில் பெண்கள் உடை உடுத்துவதும், ஒழுக்கச் சீர்கேடுகளில் ஆண்களையும் விஞ்சி ஒருபடி மேலே நிற்பதும் தான் பெண் விடுதலையின் சின்னங்கள் என சில பெண்ணிய வாதிகள் பேசுவதும், எழுதுவதும் பெண்ணினத்தை பாதிப்புகளின் படுகுழியில் தள்ளியுள்ளன என்றால் மிகையில்லை.

வீட்டு நிர்வாகப் பணிகளான சமையல், குழந்தை பராமரிப்பு, பெரியோரைப் பேணுதல் போன்ற பணிகளெல்லாம் பெண்ணடிமைத்தனத்தின் சின்னங்கள், வீட்டு வேலைகளை பெண்கள் செய்வதே இழிவு, வெளியிடங்களில் பணிபுரியச் செல்வதே பெண் விடுதலை என்று பொய்ப் பழுத்த சில வேதாந்திகள் கூறி வருகின்றனர்.

வீட்டு வேலைகளைப் புறந்தள்ளி, வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்வதையே விடுதலைப் போராட்டமாக் கருதிய பெண்களின் நிலை, வெந்நீர்க் கொப்பறையில் இருந்து தப்பியதாக எண்ணி எண்ணைக் கொப்பறையில் விழுந்த நிலையாகி விட்டது. தவிர்க்க இயலாத சூழல்களில் குடும்பத்தைத் தாங்கி நிறுத்தும் பொறுப்பு பெண்ணின் மீது சுமத்தப்படும் போது வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்வதை யாரும் குறை கூற முடியாது.

ஆடம்பர வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், பெண் விடுதலை என்ற நோக்கிலும், வலியச் சென்று வெளியிடங்களில் வேலை செய்வது பெண்களுக்குப் பெருந்தீமையாக அமைவதை அவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறி விடுகின்றனர்.

வீட்டு வேலைகளும், குழந்தை பராமரிப்பும், பெரியோரைப் பேணுதலும் இழிவான செயல்கள் அல்ல என்பதை பெண்கள் விளங்க வேண்டும். வீட்டு நிர்வாகம் செய்யும் பெண்கள் இல்லத்தரசியாகவும், வெளியிடங்களுக்குப் பணிக்குச் செல்கையில் அலுவலகக் கூட்டத்தில் ஊழியராகவும் ஆகிவிடும் யதார்த்த நிலை கவனத்தில் கொள்ளத் தக்கது.




எனவே, தவிர்க்கவியலாத காரணங்களின்றி வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்வதை பெண்கள் தவிர்ப்பது அவர்களின் நிம்மதிக்கு வழிகோலும்.

பணிக்குச் செல்லும் பெண்கள் பெரும்பான்மையாக பாலியல் சீண்டல்களுக்கு ஆளாவதை புள்ளி விபரங்கள் துல்லியமாகக் கூறியுள்ளன. பாலியல் சீண்டல்களுக்கு வக்கிரப் பார்வைகளே முழு முதற் காரணமாக அமைகின்றன. கண்ணியமான உடைகளே இன்று பெண்களின் முதல் பாதுகாப்பாகத் திகழ்கின்றன.

கண்ணியமான ஆடைகளால் தன்னைக் தற்காத்துக் கொள்வதைப் பெண்ணடிமைத்தனம் என்று கூறும் பேதமை ஒழிய வேண்டும். அத்துமீறிச் சீண்டும் ஆண் வக்கிரர்களை ரத்தம் வரத் தண்டிக்கும் வீரத்தையும் பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

# பனை ஓலை கருப்பட்டி கொழுக்கட்டை



**தேவையான பொருட்கள்:**

பச்சரிசி-200 கிராம்
கருப்பட்டி-100 கிராம்
துருவிய தேங்காய்-1 கப்
ஏலக்காய்-2 பொடி செய்தது
பனை ஓலை-கொஞ்சம் (சதுர வடிவத்தில் நீளமாக வெட்டியது)

**செய்முறை:**

பச்சரிசியை ஊறவைத்து, நிழலில் உலர்த்தி உரலிலிட்டு இடித்து மாவாக்கி சலித்துக் கொள்ளவும்.


துருவிய தேங்காய், கருப்பட்டி, ஏலப் பொடி கலந்துகொள்ளவும்.

மாவை தண்ணீர் சேர்த்து நன்றாகப் பிசைந்து கொள்ளவும்.

மாவை உருண்டைகளாக்கி, பூரி போல தேய்த்து, சதுர வடிவில் ஓலையின் நடுவில் இருக்கும்படியாக வைத்து அழுத்திக் கொள்ளவும்.

தயாராக இருக்கும் கலவையை நடுவில் வைத்து ஓலையை இருபுறமும் மூடி நூலால் கட்டவும்.

கட்டியவற்றை தட்டில் அடுக்கி ஆவியில் வேக வைக்கவும். இது ஒரு சுவையான கொழுக்கட்டை.



# அழகைப் பராமரிக்கும் அடுப்பங்கரை பொருட்கள்!

உணவுப் பொருட்கள் உடல் ஆரோக்கியத் திறனை பணிகளை மட்டும் செய்வதில்லை. அவை மேனி எழிலை பாதுகாக்கவும், செய்கின்றன. நாம் சமையலறையில் அன்றாடம் சமைக்கப் பயன்படுத்தும் பொருட்களே அழகு சாதனப் பொருட்களாகத் திகழ்கின்றன என்பது ஆச்சரியமான உண்மை.

**உப்பு, சர்க்கரை**

உப்பும் சர்க்கரையும் உணவு சமைப்பதில் இன்றியமையாத பொருளாக உள்ளது. அதே சமயம் இது முகத்திலும், கை, கால்களிலும் இறந்த செல்களை நீக்கப் பயன்படும் பொருளாகப் பயன்படுகிறது.

**ப்ளீச் பவுடர்**

முகத்தில் சிலருக்கு ஆங்காங்கே கறுப்புத் தீவுகள் போல் திட்டுகள் தோன்றும். கண்ணுக்குக் கீழே அடர்த்தியான கருவளையங்களும் விழும்! இந்தக் கறுப்பு முகத்தை பளிச்சென ஆக்கிக் காட்டுகிற 'ப்ளீச் பவுடர்' பாசிப் பருப்பு மாவு இதனுடன் கசகசா, பாதாம், பிஸ்தா, துளசி, ரோஜா மொட்டு இவற்றை நன்றாகக் காய வைத்து பவுடர் பண்ணி வைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பவுடரை சிறிது எடுத்து, தினமும் பாலுடன் சேர்த்துக் குழைத்து, முகத்தில் பூசுங்கள். 15 நிமிடத்துக்குப் பிறகு கழுவினால் முகத்தின் கருமை காணாமல் போகும்.



**பேரீச்சம்பழமும்**

கொட்டை நீக்கிய பேரீச்சம்பழம்,1 உலர்ந்த திராட்சை பழம் இவற்றை ஒரு நாள் முழுவதும் வெந்நீரில் ஊற வைக்க வேண்டும். அதை பிறகு அரைத்து இந்தக் கலவையுடன் அரை தேக்கரண்டி பப்பாளிப் பழக்கூழை கலந்து கொள்ளவும். இதை முகத்திற்கு 'பேஸ் பேக்' போல போட்டு 20 நிமிடம் கழித்து முகத்தை கழுவவேண்டும். வெயிலில் முகம் கறுத்துப்போயிருந்தால், பப்பாளியானது பளபளப்பாக மாற்றி விடும்.

**அழகு ஆப்பிள்**

ஆப்பிள் பழம் ஒரு அழகுக்கலை நிபுணரையே உள்ளே அடக்கியிருக்கிறது. ஆப்பிள் விழுது, தக்காளி விழுது, தர்பூசணி விழுது மூன்றையும் சம அளவு எடுத்து, பஞ்சில் முக்கி முகத்தில் ஒற்றி எடுத்தால் முகம் நல்ல பிரகாசமாகவும் குளிர்மையாகவும் இருக்கும்.

**மின்னும் முகம்**

நமது சமையலில் முக்கிய இடம்பெறும் தேங்காய், நமது தேகத்தை அழகாக வைத்துக்கொள்ளவும் உதவுகிறது. வழுக்கைத் தேங்காயை நன்கு அரைத்து, அதனோடு சிறிதளவு இளநீர் கலந்து முகத்தில் கீழ் இருந்து மேல்நோக்கி பூசி, அது உலர்ந்ததும் நீர் கொண்டு சுத்தம் செய்துகொள்ள வேண்டும். தினமும் இப்படி செய்து வந்தால் மாசு மருவின்றி முகம் மிளிரும். கரும் புள்ளிகள் இருந்தால் கூட அவை காணாமல் போய்விடும்.

வெயில் காலங்களில் சூரியஒளி பட்டு முகம் கறுப்பாவது வழக்கம். பலருக்கு வெளியூர் சென்றால் கூட இதுபோன்ற நிலை ஏற்படும். முகம் கறுப்பாவதைத் தடுக்கவும் தேங்காய் உதவுகிறது. தேங்காய் பால் 2 கரண்டி கடலை மாவு ஒரு ஸ்பூன் எடுத்து, இரண்டையும் கலந்து பசைபோல ஆக்கிக்கொள்ள வேண்டும். இந்தப் பசையை முகத்தில் பூசிக்கொண்டு, உலர்ந்ததும் தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும். வாரம் இருமுறை இப்படி செய்து வந்தால் முகம் பிரகாசமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சாரத்தைச் சீரழிக்கும் அரைகுறை ஆடை...!



## பித்தன் பதில்கள்

தா.பேரின்பநாதன்,
உடும்பிராய்.

**கேள்வி:** நம் நாட்டுப் பெண்கள் இப்போது அரைகுறை ஆடைகளை அணிந்து தமிழர் கலாச்சாரத்தைச் சீரழிக்கிறார்களே?

**பதில்:** அரைகுறை ஆடைகளில் தம்மைக் காணும் நம்மவரகள். நேரில் அதிருப்தியை வெளிக்காட்ட இயலாத போதிலும், தம்மைத் தாண்டிச் சென்றதும் முகத்தைச் சுழித்துக் தமது வெறுப்பை வெளிப்படுத்துகிறார்கள் என்பதை இவர்கள் அறிய மாட்டார்கள் போலும்.



எஸ்.மேகனதாசன்,
திருமுருகண்டி.

**கேள்வி:** காதலிக்கும் போது என் கணவருக்கு அவள் அழகியாகத்தான் தோன்றினாள். இப்போது அவளை மணந்து கொண்ட பின்னர் அவளை விட மற்றொருத்தி பேரழகியாகத் தெரிகிறாளே?

**பதில்:** தெரியாமல் சொல்லி வைத்தார்கள் மனம் ஒரு குரங்கு என்று. ஒருவனுக்கு ஒருத்தி என்பது எமது தமிழ் பண்பாடு என்பதை உமது மனதில் இருத்திக் கொண்டால் வழ்க்கை சிறக்கும்.



ஜே.திவ்யா,
கொழும்பு.

**கேள்வி:** எனது காதலன் எப்போதும் என மீது சந்தேகப்பட்டுக் கொண்டே இருக்கிறார். இதனால் எனது எதிர்காலம் பாழாகிவிடும் என அஞ்சுகிறேன். உங்களது அறிவுரை என்ன பித்தரே.

**பதில்:** சந்தேகம் புற்றுநோய்க்கு ஒப்பானது. உமது காதலன் மீது நீர் தூய அன்பு கொண்டிருந்தால் அவருடைய சந்தேகம் நீங்கும் விதத்தில் நடந்து அவரது நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வது உமது எதிர்காலம் சிறக்க உதவும்.

ந.சிவகடாட்சம்,
பருத்தித்துறை.

**கேள்வி:** ஈழத்துத் தமிழ்க் கவிதைத் துறையில் வளர்ச்சி எதனையும் அவதானிக்க முடிகிறதா?

**பதில்:** புதுக்கவிதைத் துறையில் பலர் ஆர்வமும் அக்கறையும் காட்டி வருவதாகத் தோன்றுகிறது. போகிற போக்கைப் பார்த்தால் மரபுக் கவிதை விரைவில் வழக்கொழிந்து போய்விடும் போல் தெரிகிறது.

செல்வி. ரோகினி சிவதாசன்,
வவுனியா.

**கேள்வி:** இக்காலத்தில் காதல் என்பது சர்வசாதாரணமான ஒன்றாய்ப் போய்விட்டாலும் காதல்கள் யாவுமே வெற்றி பெறுகின்றனவா பித்தரே?



**பதில்:** எல்லா மலர்களிலும் காய்கள் உருவாவதில்லை. காய்கள் யாவுமே கனியாவதில்லை. அதுபோல் தான் காதல் விவகாரமும்.


த.இந்திரகுமார்,
பளை.

**கேள்வி:** ஒரு அறிவாளி எந்தச் சந்தர்ப்பத்தில் முட்டாள் ஆகிறான்?



**பதில்:** நான் நிச்சயமாக ஒரு அறிவாளியே என்ற தலைக்கனம் எண்ணம் அவனது மனதில் உருவாகும் வேளை.....

ம.புண்ணியமூர்த்தி,
கொழும்பு-06.



**கேள்வி:** அண்மையில் நடந்து முடிந்த ஐ.பி.எல். 20-20 ஓவர் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பலரது எதிர் பார்ப்புக்கும் மாறாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தோல்வியைத் தழுவியமை குறித்து என்ன நினைக்கிறீர்?


**பதில்:** எனக்குத் தெரிந்த மூன்று கிரிக்கெட் ரசிகர்களின் கருத்துக்கள் இவை.

ஒருவர்: மேலதிகமாக ஓட்டங்களைப் பெற வாய்ப்பிருந்தும் அதற்காக சென்னை அணி முயற்சிக்கவில்லை.

மற்றவர்: எதிரணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த சென்னை அணி அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

மற்றொருவர்: வெற்றித் தரப்பை எவராலும் ஒருபோதும் முன் கூட்டியே தீர்மானிக்க இயலாது என்பதால் தான் கிரிக்கெட் விளையாட்டுக்கு இத்தனை தூரம் 'மவுசு'

## சொற்சிலம்பம் போட்டி இல: 525



### மேலிருந்து கீழ்

01. நேரம்
02. முழுவதை வெட்டினால் உருவாகும் பகுதி
03. இரத்தம்
04. மகிழ்ச்சியால் வருவதை இப்படியும் அழைப்பர்
05. திமரென என்பதைக் குறிக்கும்
08. கடவுளை நம்பாதவன்
10. மறைத்துச் செய்வது
11. உழுதுமை
12. இன்னிசை சொல
13. தலைமுறை
14. தன்னிலை குறிப்பது
16. படை
17. பாக்கு 'தரு'வது
18. கருமையைக் குறிக்கும்
20. மறி

### இடமிருந்து வலம்

01. யுத்த காலத்தில் பாதுகாப்புத் தருவது
06. பலம்
07. சுவை
08. தேசம்
09. அதிவேகத்துடனான சேவை
11. அறிவு
12. யாகம்
13. ஒலி
15. சவுக்கு
17. முருகன்
18. திருமணமாகாத பெண்
19. வியாபாரம் ஆரம்பிக்க இது தேவை
20. மரம்
21. பாய்
22. அம்மா- அப்பா - பிள்ளைகள்

அனுப்புபவர் பெயர்:..................................................

விலாசம்:..................................................

..................................................

கையொப்பம்:..................................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 525

சொற்சிலம்பம் 525 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் திகதி 2012 ஆம் ஆண்டு ஜுன் 24ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றியாளர்களின் பெயர்கள் ஜுலை 01ஆம் திகதிய சுடர் ஒளியில் வெளியாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். சரியான விடைகளை எழுதியோர் பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுபெறுவோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி வார இதழ், அலுவலகம்,
361, டாம் வீதி,
கொழும்பு 13.

### சொற்சிலம்பம் போட்டி இல: 522 விடைகள்

மேலிருந்து கீழ்

01.பாசாங்கு, 02.துரு, 03.காம்போதி, 04.புகைத்தல், 05.பாடல், 06.வில், 09.விதும், 12.சந்தாபலம், 14.சுன்னாகம், 15.மாரி, 16.எல்லை, 17.உமது, 18.காப்பு, 19.அழு, 21.சது

இடமிருந்து வலம்

01.பாதுகாப்பு, 05.பாவி, 07.சாரும், 08.கைவிடல், 10.பொதித்தல், 11.குன்றி, 13.தாம், 15.மால், 16.எவ், 17.உபகாரி, 19.கல்மலை, 20.மலம், 21.சாலம், 22.தாம்பத்தம

### போட்டி இல. 522 இல் பரிசு பெற்றோர்

**1 ஆம் பரிசு** சி.முருகேசு, இல.163.ஜெயந்திநகர், கிளிநொச்சி.

**2 ஆம் பரிசு** மு.அமுதலிங்கம், சன்னதி வீதி, இடைக்காடு, அச்சுவேலி.

**3 ஆம் பரிசு** சு.பாலகிருஷ்ணன், இல.1265.நாதன் குடியிருப்பு, புன்னைநீராவி, விசுவமடு.

### பாராட்டுப் பெறுவோர்

(1) இ.வீரசிங்கம்,
இல.9/2, இராசதுரை வீதி,
வைரவபுளியங்குளம், வவுனியா.

(2) செ.கணேசன்,
அன்புபுரம், முழங்காவில்.

(3) ச.இந்திராணி,
இல. 15, பகத்தல றோட்,
கொள்ளுப்பிட்டி.

(4) எம்.பி.முகைதீன்,
இல.351, மதரசா வீதி,
பெரிய நீலாவணை.

(5) எஸ்.நளினாதேவி,
இல.50, சின்ன உப்போடை வீதி,
மட்டக்களப்பு.

(6) மு.சித்திரவேல்,
ஜோசப்லேன், பம்பலப்பிட்டி,
கொழும்பு-05

(7) திருமதி.ஈ.தவமணி,
கொலிங்வூட் பிளேஸ்,
கொழும்பு-06.

(8) திருமதி. முகுந்தா ஜெயசோதி,
இல. 93 2/5, பீட்டர்சன் லேன்,
கொழும்பு-6.

(9) க.தில்லைநடராசா,
கதிர்காம கோயிலடி,
வதிரி, கரவெட்டி

(10) பா.சிவதரன்,
பிரதான வீதி,
தம்பிலுவில் -01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்காலி மொழி கற்கவேண்டும்

அடுத்த முறை ஐபிஎல் போட்டிகளுக்கு வரும்போது எப்படியும் முழுமையாக பெங்காலி பையனாகிவிடுவேன். அதற்குள் பெங்காலி மொழி படித்துவிட வேண்டுமென கொல்கத்தா அணியின் தலைவர் கம்பீர் தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் கிரிக்கெட் கோப்பையை கம்பீர் தலைமையிலான கொல்கத்தா அணி முதன்முறையாக கைப்பற்றியதை அடுத்து கம்பீருக்கு கொல்கத்தாவில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் கொல்கத்தா அணிக்காக நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, என்னை கொல்கத்தா மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என பேச்சு அடிபட்டது. ஆனால் அவர்கள் என் மீது காட்டிய அன்பு மிகச்சிறப்பானது. எனக்கு ஐபிஎல் இன் முதல் நான்கு வருடங்களில் இருந்த ஆதரவை விட இது பெறுமதியானது என்கிறார் அவர்.

புனே வாரியர்ஸுடனான போட்டியின்போது எப்படி உணர்ந்தீர்கள் என நிருபர்கள் கேட்டபோது, நாம் தங்கியிருந்த ஹோட்டல் விடுதி பணியாளர்கள், கார் டிரைவர்கள், சந்தித்த பொதுவானவர்களிலிருந்து அனைவரும் கொல்கத்தாவுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினர். அவர்களுடைய உற்சாக ஆதரவு, நம்பிக்கையை நாம் காப்பாற்றியுள்ளோம் என்றார்.

நான் யாருக்கு பதிலாகவும் கொல்கத்தாவுக்கு தலைவராகத் தெரிவு செய்யபப்பட்டவனாக உணரவில்லை. நான் எனது தனிப்பணியில் விளையாடினேன். நேரம் காலத் தின் படி மாற்றம் நடந்தது. அணி உரிமையாளர்கள் எனக்கு அளித்த அந்த வாய்ப்பு எனக்குரிய கௌரவமாக உணர்கிறேன். அவர்களது நம்பிக்கையை நான் காப் பாற்றினேன் என்றார்.



கம்பீர்

# குவியும் விளம்பர வாய்ப்பு

கிரிக்கெட் வீரர் கம்பீருக்கு விளம்பர வாய்ப்புகள் குவிந்து வருகின்றன. ஐபிஎல் போட்டியில் அவரது தலைமையில் கொல்கத்தா அணி வெற்றி பெற்றபின் விளம்பர உலகில் அவரது மதிப்பு அதிகமாக உயர்ந்துள்ளது.

இமாமி நிறுவனம் தனது முதன்மை விளம்பரத் தூதராக கம்பீரை ஒப்பந்தம் செய்துள்ளது. கம்பீர், பாட்மிண்டன் வீராங்கனை சாய்னா, குத்துச் சண்டை வீரர் விஜேந்தர் சிங், மல்யுத்த வீரர் சுசில் குமார், குத்துச் சண்டை வீராங்கனை மேரி கோம் ஆகியோரை இந்த நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.

இதில் கம்பீருக்கு அதிக தொகை வழங்கப்பட்டுள்ளது. இமாமி நிறுவனத்தின் உடல் வலி நீக்கும் தைல விளம்பரத்தில் கம்பீர் தோன்றவுள்ளார். இதற்கு முன்பு இமாமி நிறுவனத்தின் முதன்மை விளம்பர தூதராக நடிகர் அமிதாப் பச்சன் இருந்தார்.

இமாமி தவிர வேறு பல நிறுவனங்களும் கம்பீரை தங்கள் விளம்பரங்களில் நடிக்க வைக்க முயற்சித்து வருகின்றன. இதற்காக பல கோடிகளை அளிக்கவும் அவர்கள் தயாராக உள்ளனர்.

## ஒலிம்பிக்கின்போது இலவச வைஃபை சேவை



ஒலிம்பிக் திருவிழா இன்னும் 57 நாள்களில் ஆரம்பிக்கவிருக்கிறது. ஜூலை 27இல் லண்டனில் தொடங்கும் இந்த ஒலிம்பிக் திரு விழாவைக் கண்டு தரிசிக்க உலகமே ஆவலுடன் காத்துக் கொண்டி ருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்த ஒலிம்பிக்கை நடத்த இருக்கும் இங்கிலாந்தும் உலக மக்களுக்காக பல மாயாஜாலங்களை வழங்க காத்துக் கொண்டிருக்கிறது.


குறிப்பாக இந்த ஒலிம்பிக் நிகழ்வில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அதிலும் வெளி நாடுகளில் இருந்து ஒலிம்பிக் போட்டிகளைக் காணவரும் விளையாட்டு வீரர்கள் மற்றும் ரசிகர்கள் இங்கிலாந்தில் தங்கு தடையின்றி சென்று வர போக்குவரத்தை தகவல் தொழில் நுட்பத்தால் நவீன படுத்தி இருக்கிறது இங்கிலாந்து.

அதன் முதல் படியாக இங்கிலாந்தில் உள்ள ட்ரான்ஸ்போர்ட் பார் லண்டன் மற்றும் வெர்ஜின் மீடியா ஒரு முக்கிய அறிவிப்பை வெளி யிட்டிருக்கிறது. அந்த அறிவிப்பில் ஒலிம்பிக் போட்டிகள் நடக்கும் நாட் களில் லண்டனில் உள்ள முதல் 80 பாதாள ரயில் நிலையங்களில் இலவச வைஃபை இன்டர்நெட் தொடர்பு சேவையை பயணிகள் பெறலாம்.

இந்த சேவையின் மூலம் பயணிகள் ரயிலில் பயணம்செய்து கொண்டிருக்கும்போதே ரயில்களின் பயண நேரங்கள், நடை மேடை எண்கள், டிக்கட் அலுவலகங்கள் மற்றும் அவசரகால நேரத்தில் அணுகவேண்டிய விவரங்கள் போன்றவற்றை தங்கள் மொபைல்களிலேயே பெறலாம்.

இதன் மூலம் வெளிநாட்டு விளையாட்டு வீரர்கள் மற்றும் ரசிகர்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று நம்பப்படுகிறது.

# இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் யுவராஜ்...?



தனது உடல்நலக்குறைவு நீங்கி சகஜ நிலைக்குத் திரும்பியுள்ளது மகிழ்ச்சி அளிப்பதாக, இந்திய ஆல்ரவுண்டர் யுவராஜ் சிங் ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து யுவராஜ் ட்விட்டரில் கூறியதாவது,

எனது இரத்த பரிசோதனை மற்றும் ஸ்கான் முடிவுகள் கிடைத்தது. இதில் நான் நல்ல நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நான் சகஜ நிலைக்கு திரும்பியுள்ளதை அறிந்து மகிழ்ச்சி அடைக்கிறேன்.

நானும், இஷாந்த் சர்மாவும் சேர்ந்து டென்னிஸ் பந்து மூலம் 4 ஓவர்கள் கொண்ட போட்டியில் விளையாடினோம். இதில் நான் வீசிய பந்துகளில் இஷாந்த் சர்மா 6 சிக்ஸ் அடித்தார். ஆனால் நான் அவரது பந்துகளில் 7 சிக்ஸ் அடித்து வெற்றி பெற்றேன். இதன் மூலம் நான் சகஜ நிலைக்கு திரும்பியுள்ளதை உணர முடிக்கிறது.

ஒருவன் பழைய நிலைக்குத் திரும்புவது என்பது ஒரு சவால் அல்ல, அது ஒரு அறிவிப்பு என்று தெரிவித்துள்ளார்.


யுவராஜ் சிங் தனது பழைய உடல்திறனுக்கு திரும்பியுள்ள நிலையில், அடுத்த மாதம் (ஜூலை) இலங்கைக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணியின் சார்பாக களமிறக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிரிக்கெட் போட்டிகளில் யுவராஜ் சிங் எப்போது பங்கேற்பார் என்று அவரது நெருங்கிய நண்பர்களிடம் கேட்டதற்கு, அவர் ரஞ்சி கோப்பைக்கான பயிற்சி தொடர்களில் ஏதாவது ஒன்றில் கட்டாயம் பங்கேற்பார் என்றனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது,

தேசிய கிரிக்கெட் அகடமியில் பயிற்சியில் யுவராஜ் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். கிரிக்கெட் போட்டிகளில் யுவராஜ் சிங் எப்போது பங்கேற்பார் என்று தற்போது தெளிவாகக் கூற முடியாது.

ஆனால் டெல்லியில் கோடைக்காலத்தில் நடைபெறும் ஏதாவது ஒரு போட்டியில் அவர் நிச்சயம் ஆட வேண்டும் என்று விரும்புகிறார். ரஞ்சி தொடருக்கான பயிற்சித் தொடர்களான பூஜி பாபு கோப்பை அல்லது மேயின் உத் டௌலா கோல்டு கோப்பைத் தொடரின் போட்டிகளில் யுவராஜ் சிங் கட்டாயம் பங்கேற்பார் என்றனர்.

# உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டிகள் ;
# அடுத்த வருடம் இந்தியாவில்....?



உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டிகளின் அடுத்த தொடரை இந்தியாவில் நடத்துவதற்கு இந்திய செஸ் சம்மேளனம் யோசனை செய்து வருகிறது. டெஹ்ரான், மெக்ஸிகோ, பொன், சோஃபியா மற்றும் மொஸ்கோ என ஆனந் இதுவரை விளையாடி வென்ற ஐந்து உலக செஸ் சம்பியன் பட்டங்களும் வெளிநாடுகளில் என்பதால் அவர் சொந்த மண்ணில் பட்டம் வெல்வதை பார்ப்பதற்கு ரசிகர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற போட்டிச் சுற்றுகளில், ரஷ்யாவின் அலெக்ஸ் ட்ரீவை இலகுவாக தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு நுழைந்தார் ஆனந்த். 1994 ஆம் ஆண்டு ஹைதராபாத்தின் சாங்கி நகரில் நடைபெற்ற உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டிச்சுற்றுத் தொடரில், கெரி காஸ்பர்வோ மற்றும் ஆண்டொலி கார்போவுடன் மோதியிருந்தார்.

எனினும் அவர் இந்தியாவில் கடந்த 8 வருடங்களாக ஒரு போட்டியிலும் விளையாடவில்லை. இந்நிலையில், அவர் உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டிகள் இந்தியாவில் நடத்தும் யோசனைக்கு தனது ஆதரவை தெரிவித்துள்ளார். இந்தியாவில் விளையாடுவதென்பது எனக்கு மிகச் சவாலானது. நான் அதன் விளைவுகளை பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். எனது ஆதரவாளர்கள், எனது குடும்பத்திற்கு முன்னால் விளையாடுவதென்பது எதிர்ப்பார்பினை இன்னமும் அதிகரிக்கக் கூடியதென தெரிவித்துள்ளார்.

உலக செஸ் சம்மேளனத்தின் துணைத்தலைவர் டி.வி.சுந்தர் இந்தியாவில் அடுத்த போட்டிகள் நடைபெறவுள்ளதை ஓரளவு உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை செஸ் போட்டிகளை அனுபவித்து விளையாடி வருவதாகவும், இப்போதைக்கு ஓய்வுபெறும் எண்ணம் ஏதும் இல்லை என ஆனந்த் தெரிவித்துள்ளார். அடுத்த மாதம் ருமேனியாவில் நடைபெறும் சர்வதேச செஸ் போட்டிகளில் அவர் அடுத்து விளையாடவுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆண்கள் மட்டும்

ஆண்களின் உடலமைப்பைக் கொண்டு அவர்களின் பண்புகளைத் தெரியப்படுத்துகிறது சாமுந்திரிகா லட்சணம். இதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

## செல்வம் பெருகும்

ஆண்களின் தலையானது உயர்ந்தோ, பருத்தோ இருந்தால் அதிக செல்வம் இருக்குமாம். தலையின் நரம்புகள் புடைத்து இருப்பின் தரித்திரமாம். தலையின் பின் பகுதி புடைத்திருப்பின் அறிவாளியாக இருப்பாராம். அதேபோல் அகலமான, எடுப்பான, உயர்ந்த நெற்றி அமைந்திருப்பின் ஞானமும் செல்வமும் உண்டு. நெற்றியில் பல ரேகைகள் இருப்பின் அதிர்ஷடம் உண்டாகும். நெற்றியில் ரேகை இல்லாதிருப்பின் ஆயுள் குறையும். நெற்றியில் வியர்வை வருமாயின் அதிர்ஷ்ளள டமாம்.

## உலகை ஆளும் ஆண்


ஆண்களின் கண்கள் சிவந்து, விசாலமாக யானைக் கண் போல் இருந்தால் உலகை ஆள்வான். கோழி முட்டைக்கண்ணும், மிகச்சிறிய கண்ணும் இருப்பின் அறிவு, ஆற்றல் குறைவாக இருக்கும். அதேபோல் உயரமாய், நீண்டு, கூரிய முனையோடு சிறிய நாசித் துவாரங்கள் கொண்ட மூக்கு உடையவர்கள் பணம், பதவி, புகழ் உடையவர்களாக இருப்பர். நுனிப் பகுதி தடித்தோ, நடுப்பகுதி உயர்ந்தோ, பெரிய அளவில் மூக்கு அமைந்திருப்பின் தரித்திரமாம்.

அழகான,சிறிய வாய் உடையவர்கள் புத்தி, சக்தி, கருணை உடையவர்களாக, அறிஞர்களாக, பெரும் பதவியில் இருப்பவர்களாக இருப்பர். அகன்றும், வெளியே பிதுங்கியும் உள்ள வாய் அதிகமாகப் பேசும். பிறர் செயலில் குற்றம் காணும். உதடு சிவந்திருப்பின் அந்தஸ்து, அதிகாரம் அதிர்ஷ்டம் நிலைத்திருக்கும். கருத்து, உலர்ந்து, தடித்து இருப்பின் கபடம் நிறைந்திருக்குமாம்.

தோள்கள் இரண்டும் உயர்ந்திருப்பின் செல்வம் உண்டு. தாழ்ந்திருந்தால் நீண்ட ஆயுள் உண்டு. சமமாக இருப்பின் அறிவு உண்டு. தோள்கள் இரண்டிலும் மயிர் அதிகம் இருந்தால் நினைத்த காரியம் முடியாது.

## நாக்கில் மச்சம்

நீளமான நாக்கு இருப்பின் சிறந்த பேச்சாளர்களாக இருப்பர். நாக்கு நுனியில் அழியாத கறுப்புப் புள்ளிகள் இருப்பின் சொன்ன சொல் பலிக்கும். நாக்கு சிவந்திருப்பின் அதிர்ஷ்டமாம். கறுத்தும், வெளுத்தும், உலர்ந்தும் இருப்பின் தரித்திரமாம்.



காது மேல் செவி அகலமானால் முன் கோபம் இருக்கும். காது குறுகியிருப்பின் அதிர்ஷ்டமாம். மேல் செவி உள்ளே மடங்கியிருப்பின் கபடதாரி.

## அரசாளும் ஆண்

நீளமான, சீரான பருமன் உடைய கைளை உடையவர்கள் சிறப்பாக வாழ்வர். முழங்கால் வரை கை நீண்டிருப்பின் அரசன் ஆவான். தடித்த, குட்டையான கைகளை உடையவர்களை நம்புதல் கூடாது. கைப்பிணைப்புகளில் மூட்டுகளில் ஓசை எழுப்பினால் தரித்திரமாம். கைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக இருப்பின் ப்ாவிகளாக இருப்பர். கைகளில் நீண்ட ரோமங்கள் இருப்பின் செல்வந்தன் ஆவான்.

மணிக்கட்டில் சதையிலிருந்து கெட்டியாக இருப் பின் அரசு பதவி கிட்டும். மணிக்கட்டு உயரமாக இருப்பின் நீண்ட ஆயுள் உண்டு. மணிக்கட்டுகள் ஸ்திரமின்றி இருந்தாலும், மடக்கும்போது சப்தம் வந்தாலும் தரித்திரமாம்.

## பாலுணர்வு அதிகம்

கைவிரல்கள் நீளமாக இருந்தால் கலை ஆர்வம் அதிகம் இருக்கும். விரல்களுக்கு மத்தியில் இடைவெளி இருந்தால் தரித்திரமாம். உள்ளங்கை அதிகப் பள்ளமாக இருந்தால் அற்ப ஆயுளாம். உள்ளங்கை சிவந்திருந்தால் தனவான் ஆவான். உள்ளங் கையின் நான்கு மூலைகளும் சமமான உயரத்தோடு தட்டையாக இருப்பின் அரசனாவான்.

அதேபோல் ஆணின் மார்பு விசாலமாகவும், சதைப் பிடிப்போடும் எடுப்பாகவும் இருப்பின் அவன் புகழ் பெற்று விளங்குவான். கோணலாகவும், ஒன்றோடொன்று நெருங்கியும் இருப்பின் அற்பாயுளாம். ஆணின் மார்பகங்களில் உரோமம் இல்லாதிருப்பது ஆகாது. அதிகமான ரோமம் இருப்பின் பாலுணர்வு அதிகம் இருக்குமாம்.

## புகழ் கிடைக்கும்

கால்கள் நீளமாக இருந்தால் அரசாங்க விருதுகள் பெறுவான். கால்கள் குட்டையாக இருப்பின் தரித்திரமாம். முழங்காலுக்கு மேலே உயரமாகவும், முழங்காலுக்குக் கீழே குட்டையாகவும் இருந்தால் நன்மைகள் பெருகும்.

கால் விரல்கள் ஒன்றோடொன்று நெருங்கி இருப்பின் புகழ் பெறுவான். பாதங்கள் சதைப் பிடிப்பின்றி அழகாக, அளவாக இருக்க வேண்டும். பாதங்களில் மேடு பள்ளம் இருந்தாலும், நகங்கள் கோணல்மாணலாக இருந்தாலும், விரல்கள் தனித்தனியே விலகியிருந்தாலும் வறுமை வாட்டும்..

# பிரிட்டன் ராணியின் வைரவிழா கொண்டாட்டம்

## குடியரசு அமைப்பினர் எதிர்ப்பு

பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் முடிசூடி 60 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி நடந்த வைர விழாவைக் கண்டித்து குடியரசு அமைப்பினர் லண்டனில் போராட்டம் நடத்தினர்.

பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் முடிசூடிய வைர விழா பிரிட்டன் முழுவதும் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவையொட்டி தேம்ஸ் நதியில் ஆயிரம் படகுகளின் பவனி நடந்தது. லண்டனில் பங்கிங்காம் அரண்மனையை ஒட்டியுள்ள சாலைகளில், நேற்று முன்தினம் பொப் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடந்தன.

அத்துடன் விழாவை சிறப்பித்ததற்காக லண்டன் தேவாலயத்தில் ராணி எலிசபெத் நன்றி தெரிவித்தார். அதன் பின் பங்கிங்காம் அரண்மனையின் பல்கனியில் நின்று, தனது ஆதரவாளர்களை பார்த்து கையசைத்து பாராட்டு விழாவை நிறைவு செய்து கொண்டார். முன்னதாக இவரின் கணவர் பிலிப்புக்கு, சிறுநீரகபையில் ஏற்பட்ட தொற்று காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதனால் அவர் நேற்றைய விழாவில் பங்கேற்க வில்லை.

இந்நிலையில் இந்த விழாவை எதிர்த்து குடியரசு அமைப்பை சேர்ந்த 1,200 பேர் கடந்த 3ஆம் திகதி முதல் லண்டனில் போராட்டம் நடத்தினர். வரும் 2025ஆம் ஆண்டுக்குள் அரசாட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதே தங்கள் லட்சியம் என இவர்கள் தெரிவித்துள்ளனர்.

*பிரிட்டிஷ் மகாராணியாக எலிசபெத் பதவியேற்று அறுபது ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் உத்தியோகபூர்வ வைரவிழா கொண்டாட்டங்கள் லண்டனில் நடைபெற்று வருகின்றன. இதனையொட்டி தேம்ஸ் நதியில் நீராவிப் படகுகள், மிதவைப்படகுகள், விரைவுப்படகுகள், வரலாற்றுப்புகழ் வாய்ந்த படகுகள் என சுமார் ஆயிரத்திற்கும் மேலான படகுகள் ஊர்வலமாகச் சென்றன.*

*இதில் மகாராணியார் எலிசபெத் மற்றும் இதர குடும்பத்தினர்களும் அரசுப் படகில் பவனி வந்தனர். மகாராணியார் எலிசபெத் வெள்ளை நிற உடையில் அழகாக படகில் தோன்றியதுடன் படகில் தன் குடும்பத்தினருடன் 11 கிலோ மீற்றர் தூரம் வரை மற்றைய படகுகள் புடை சூழ ஊர்வலமாக வந்தார்.*

*இந்த வைர விழா கொண்டாட்டங்கள் லண்டன் வரலாற்றிலேயே மாபெரும் நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படுவதுடன் இவ் விழாக்களில் விதவிதமான படகுகளின் ஊர்வலமே முத்தாப்பாய் விளங்குவதாகவும் வர்ணித்துள்ளனர்.*





# ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட சிறார்கள் பாதிப்பு



மேற்கு மற்றும் மத்திய ஆபிரிக்காவில் நிலவும் கடும் வறட்சியின் கொடுமையை சித்தரிக்கும் புகைப்படங்கள் இவை.

புர்கினா ஃபசோ, சாட், மாலி, மௌரிடானியா & நைகர், கெமரூன், நைஜீர்யா மற்றும் செனகல் ஆகிய நாடுகளில் போஷாக்கின்மையால் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அடர்த்தியற்ற மழை, அறுவடை இன்மை, உணவு விலை அதிகரிப்பு என்பன இங்குள்ள மக்களை மிக மோசமாகப் பலவீனப்படுத்தியுள்ளது. பிற விலங்குகள் பல இறந்துவிட, மனித விலங்குகள் கிட்டத்தட்ட இறக்கத் தொடங்கியுள்ளன. குழந்தைகள், சிறார்கள் தப்பிப்பிழைத்து வாழ்தலுக்கு சாத்தியமற்ற உலகின் மிக வறுமையான பிரதேசமாக Sahel வலயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விமான பயணத்தின்போது கைபேசி பயன்படுத்த அனுமதி



ஒரு சில பாதுகாப்பு காரணங்களுக்காக விமானத்தில் பயணம் செய்யும்போது மொபைல் போனில் பேச தடைவிதிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது, வெர்ஜின் அட்லாண்டிக் என்ற விமான நிறுவனம் தமது பயணிகளை பயணத்தின்போது மொபைல் போன்களை பயன்படுத்த அனுமதிக்க உள்ளது. இந்த வசதியின் மூலம் இனி வெர்ஜின் அட்லாண்டிக் விமான நிறுவனத்தின் எ330 ஏர்பஸ் விமானங்களில் பயணம் செய்யும் பயணிகள் தங்கள் பயணத்தின் போது தங்கள் மொபைல் போன்களைப் பயன்படுத்தலாம். எ330 ஏர்பஸ் விமானங்களில் இருக்கைகளுக்குள் இருக்கும் ஜெனரல் பொக்கட் ரேடியோ சேவை மூலம் பெறலாம். இந்த சேவையை தனது போயிங் 747 விமானங்களுக்கும் விரிவுபடுத்த வெர்ஜின் அட்லாண்டிக் நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது.

விமான பயணத்தின்போது மொபைல்களை பயன்படுத்த ஆவண செய்யவேண்டும் என்ற பயணிகளின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவே இந்த வசதியை வழங்குவதாக வெர்ஜின் அட்லாண்டிக் விமான நிறுவனத்தின் தலைமை அலுவலர் ஸ்டீவ் க்ரிபித்ஸ் கூறுகிறார். இந்தச் சேவையை அனுபவிக்க பயணிகள் சற்று கூடுதலாக செலவழிக்க வேண்டியிருக்கும். அதாவது இந்த மொபைல் சேவைகளை ஒரே நேரத்தில் 6 பேர் பயன்படுத்த நிமிடத்திற்கு 1.20 அமெரிக்க டொலர்களை வசூலிக்கிறது வெர்ஜின் அட்லாண்டிக்.

# சூரிய சக்தியில் இயங்கும் விமானம்



சூரிய சக்தியால் இயங்கக்கூடிய விமானம் பரிசோதனை ரீதியாக சுவிட்சர்லாந்து நாட்டிலிருந்து பயணத்தை ஆரம்பித்தது.

சூரிய சக்தியால் முழுக்க முழுக்க இயங்கும் விமானம் சுவிட்சர்லாந்து நாட்டின் பேயர்னி பகுதியிலிருந்து பயணத்தை ஆரம்பித்தது. ஆன்ரி போர்ஷ்பெர்க் மற்றும் பெர்ட்ரான்ட் பிக்கார்ட் ஆகியோர் இந்த விமானத்தை ஸ்பெயின் மொராக்கோ உள்ளிட்ட நாடுகளுக்கு ஓட்டிச் செல்கின்றனர்.


ஸ்பெயின் நாட்டின் மேட்ரிட் நகரில் தரையிறங்கிய இந்த விமானம் 70 கி.மீ. வேகத்தில் பறந்தது. பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் நாட்டைப் பிரிக்கும் பைரனீஸ் மலைகளைக் கடந்து செல்லும் இந்த விமானத்தின் இறக்கை 63 மீற்றர் நீளமுடையது. இறக்கை முழுவதும் சூரிய ஒளியை கிரகிக்கும் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன.

மொராக்கோ மன்னர் முகமட்டின் அழைப்பின் பேரிலே இந்த விமானம் மொராக்கோ நாட்டின் ரபாத் நகருக்கு சென்றது. உலகில் அதிக அளவில் சூரிய மின்சக்தியை மொராக்கோ நாடு உற்பத்தி செய்கிறது. சூரிய மின் உற்பத்தி மையங்கள் இந்த நாட்டில் அதிக அளவில் இயங்கி வருகின்றன.



அபிஷேக் பச்சன் - ஐஸ்வர்யா ராய் தம்பதியினர் குழந்தையுடன் மும்பை விமான நிலையத்தில்....

# இதய சிகிச்சைக்கு ரோபோவை கண்டறிந்தனர் அமெ.விஞ்ஞானிகள்




மருத்துவத்துறையில் பல சிக்கலான சிகிச்சைகளுக்கு ரோபோ பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்காவின் பிரிஸ்பைடெரியன் மருத்துவமனை இதய நிபுணர் மைக்கேல் அர்ஜென்சியானோ தலைமையிலான குழுவினர் பாம்பு வடிவிலான மெல்லிய ரோபோவை வடிவமைத்துள்ளனர். இதய சிகிச்சை மற்றும் புராஸ்டேட் புற்றுநோய் அறுவை சிகிச்சை போன்றவற்றை எளிதாக மேற்கொள்ள இந்த ரோபோ பெரிய உதவியாக இருக்கும். இந்த ரோபோவுக்குள் சிறிய கமரா, கத்தரிக்கோல், இடுக்கி மற்றும் பல சென்சார்கள் உள்ளன. நோயின் தன்மைக்கேற்ப சிகிச்சை மேற்கொள்ளும் வகையில் இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோவை வடிவமைத்த விஞ்ஞானிகள் குழு குறிப்பிடுகையில் இதய அறுவை சிகிச்சை மேற்கொள்ள பெரிய அளவில் மார்புப் பகுதியை கிழிக்க வேண்டியதில்லை. எந்த இடத்தில் அறுவை சிகிச்சை தேவையோ அந்த பகுதியில் மட்டும் துளையிட்டு 25 காசு சுற்றளவுள்ள இந்த பாம்பு ரோபோவை உள்ளே செலுத்தி சிகிச்சை செய்யலாம். சிறிய ரணத்துடன் இந்த சிகிச்சை முடிந்து விடுவதால் நோயாளி விரைவில் குணமடைய வாய்ப்பு உள்ளது. புற்றுநோய் கட்டிகள் போன்றவற்றை அறுவை சிகிச்சை செய்யும்போது அதனுடன் பிணைந்துள்ள நரம்புகள் துண்டிக்காமல் இருக்கவும் இந்த ரோபோ உதவுகிறது.

பெரிய அளவு கொண்ட பாம்பு ரோபோவையும் உருவாக்கியுள்ளோம். மீட்பு பணிகள் குகைகளுக்குள் சென்று ஆய்வு மேற்கொள்வது மனிதர்கள் செல்ல முடியாத இடங்கள் மரத்தின் உச்சி உள்ளிட்ட பகுதிகளில் இந்த பெரிய பாம்பு ரோபோவை பயன்படுத்தலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஹரிபோட்டரால் ஆந்தைகளுக்கு பாதிப்பு



உலகம் முழுதும் மில்லியனுக்கும் மேற்பட்ட ரசிகர் களை தன் வசம் இழுத்து அடுத்த படம் எப்போது வரும் என பைத்தியமாக்கி வந்த சிறுவர்களுக்கான மேஜிக் திரைப்படம் ஹரிபோட்டர்.

2001 ஆம் ஆண்டு வந்த முதலாம் பாகம் பெரும் வெற்றியைப் பெறவே அடுத் தடுத்து தொடர்ச்சியாக முன்னையதை விட சிறப்பாக ஹரிபோட்டர் திரைப்படங்கள் வெளியாகி ஹொலிவுட் திரை உலகையே ஆக்கிரமித்தன. இதன் இறுதிப் பாகம் பெருமளவு பொருட் செலவில் உருவாக்கப்பட்டு 2011 ஜூலையில் வெளியாகி பெரும் வெற்றியைப் பெற்றிருந்தது.

ஒருவாறு ஹரிபோட்டர் திரைப்படம் ஓடி முடிந்து அதன் புகழ் சற்றே மங்கி வரும் வேளையில் பிரிட்டனில் வீட்டில் செல்லப் பிராணிகளாக வளர்க்கப்பட்டு வந்த ஆந்தைகள் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளன என்பது அதிர்ச்சியான செய்தியாகும். ஹரிபோட்டர் திரைப்படங் களில் ஆந்தைகள் முக்கிய பறவையாகக் காட்டப்பட் டன. இவை இத்திரைப் படத்தில் கடிதங்களை எடுத்துச் சென்று பரிமாற்றம் செய்யப் பயன்படுத்தப்பட்டன.

இதையடுத்து லண்டன் உட்பட பிரிட்டனில் அதிகளவும் ஏனைய நாடுகளில் குறைந்த அளவும் ஹரிபோட்டர் பைத்தியங்களால் அதிகளவு ஆந்தைகள் கொள்முதல் செய்து வளர்க்கப்பட்டன. ஆனால் ஹரிபோட்டர் படத் தின் இறுதிப் பாகமும் கடந்த வருடம் வெளியாகி பல மாதங்கள் கடந்து விட்டதால் ஆந்தை வளர்ப்பில் விருப்பு குறைந்த மக்கள் சட்டத்துக்குப் புறம்பான ரீதியில் அவற்றை வனங்களில் விட்டு வருகின்றனர்.

வீட்டில் வளர்ந்து பழக்கப்பட்ட இந்த ஆந்தைகள் போதிய உணவின்றி நூற்றுக் கணக்கில் இறந்து வருவ தாக செய்திகள் தெரிவிக்கின்றன. சுமார் 20 வருடங்கள் வரை உயிர் வாழத்தக்க இந்த ஆந்தைகளில் சில அதாவது கிட்டத்தட்ட 100 ஆந்தைகள் வரை வன விலங்கு காப்பகத்தால் காப்பாற்றப்பட்டு பேணப்படுகின்றன. செல்லப் பிராணிகள் அல்லது பறவை வளர்ப்பில் ஆந்தைகளைப் பேணுவது மிகச் சிரமமான பணி என்பது குறிப்பிடத்தக்கது.


உங்களுக்கான ஆடம்பரமான வீடு யாழ்ப்பாணத்தில்

TULASI MAHAL

யாழ்ப்பாணத்தில் முதல் ஆடம்பர அபார்ட்மெண்ட் திட்டம்

யாழ் நகரில், கச்சேரி வீதியில் வசதியாக அமைந்திருக்கிறது துளசி மஹால், இரண்டு படுக்கை அறை, ஒரு வரவேற்பறை, சாப்பாட்டறை மற்றும் நவீன வசதியுடைய சமையலறை என்பன கொண்ட அபார்ட்மென்களாக தங்குமிட வசதிகள் உள்ளன. இரண்டு அறை கொண்ட அபார்ட்மென்கள் சில, தேவையேற்படின் மேலதிகமாக ஒரு தனிப் படுக்கையறையை வாடகைக்கு எடுத்துக் கொள்ளும் வசதி கொண்டவை.

இப்போது கட்டட வேலைகள் நடைபெறுகின்றன. நிர்மாணப் பணிகள் 2013 ஆம் ஆண்டு ஒக்டோபரில் பூர்த்தியாகும்.

உங்கள் விருப்பை உடனடியாக எங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்து கொள்ளுங்கள்

விலை 12 மில்லியன் ரூபாவிலிருந்து



Sanken

www.tulasimahal.lk

0714 960 160

பெனின்சுலர் புரொபர்டி டிவலபர்ஸ் பிரைவேட் லிமிடட்

இல. 10, அல்பர்ட் கிரசன்ட், கொழும்பு 7.


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2012, ஜூன் 10 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org